தமிழகம்

DAMILICA

680

தமிழகம்
DAMILICA

1 தமிழ்நாடு அரசு தொல் இயல் துறை ஆண்டிதழ் டிசம்பர் 1970.
Journal of the Tamilnadu State Dept. of Archæology. December

Editor

R. Nagaswamy. M. A.

Director of Archaeology, Govt. of Tamilnadu.

தமிழ்நாடு அரசு தொல் இயல் துறை வெளியீடு

சென்னை

1970

மூன்றும் பகுதி PART III

1. World interest in Tamil Archaeology
Prof. Jean Filliozat 65

2. Muttaraiyar
K. G. Krishnan M. A. 68

3. A Pandya rock-cut cave at Manappadu on Pearl Fishery Coast
H. Sarkar, M. A. 74

4. Some non-Pallava cave temples with musical inscriptions
K. R. Srinivasan, M. A. 83

5. Two hero stones from Irulappatti
R. Nagaswamy, M. A. 92

6. சேந்தமங்கலம் ஆபத்சஹாயேச்சுரர் ஆலயம்
நடன. காசிநாதன், எம். ஏ. 97

7. Madurantakan Madai
R. Nagaswamy, M. A. 101

8. Development of the care of Ancient Monuments in Tamilnadu some preliminary considerations
G. R. H. Wright 105

9. Some rare coins of Jaffna
Iravatham Mahadevan 111

10. சாத்தமங்கலம் கல்வெட்டுகள்
இரா. நாகசாமி, எம். ஏ. 121

BOOK REVIEWS

முதற்பகுதி
PART I

முகவுரை

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை 1961-ஆம் ஆண்டு நிறுவப் பெற்றது. மத்திய அரசின் கூட்டு டைரக்டர் ஜெனரலாக இருந்து ஓய்வு பெற்ற திரு. தி. நா. ராமச்சந்திரன், சிறப்பு அலுவலராக நியமிக்கப்பட்டு இத்துறையை நிறுவ வகை செய்தார். ஒரு நிழற்பட பிரிவையும், பழுதுபார்க்கும் பிரிவையும் நிறுவி பல வரலாற்றுச் சின்னங்களைப் பார்வையிட்டு வந்தார். தமிழ்நாடு தொன்மை வரலாற்றுச் சின்னங்களையும், திடல்களையும் பாதுகாக்க மசோதா ஒன்று தயாரித்து அரசின் பரிசீலனைக்கு சமர்ப்பித்தார். 20—7—1965-ல் திரு. தி. நா. ராமச்சந்திரன் ஓய்வு பெற்றார். சிறப்பு அலுவலர் பதவி 1965 டிசம்பரில் தொல்லியல் இயக்குநர் என்று மாற்றி அழைக்கப்பட்டது. 1968 டிசம்பரிலிருந்து அரசு என்னை தற்காலிக இயக்குநராகப் பதவியில் அமர்த்தியுள்ளது.

1966-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தமிழக சட்டமன்றம் தமிழ் நாடு தொல்லியல் சட்டத்தை இயற்றியது. அதே ஆண்டு தமிழ் நாட்டில் உள்ள கல்வெட்டுகள் அனைத்தையும் அச்சிடுவதற்கு ஒரு திட்டம் மேற்கொண்டு செயலாற்றி வருகிறது. இத்துறை கீழ்வரும் பணிகளில் ஈடுபட்டு வருகிறது.

1. கல்வெட்டுகளைப் படி எடுத்து அச்சிடுதல்.
2. வரலாற்றுச் சின்னங்களைப் பழுதுபார்த்தல், பாதுகாத்தல்.
3. தொல்லாய்வு, அகழ்வாய்வு.
4. கலைச்செல்வங்களை நிழற்படம் எடுத்தல்.
5. நூல்கள் வெளியிடுதல்.
6. கலைக்காட்சிகளும் கருத்தரங்கும் நடத்தல்.

இத்துறையின் பல்வேறு பணிகளுக்கு ஆலோசனைக் கூற அறிஞர்களைக் கொண்ட ஒரு குழுவை அரசு அமைத்தது.

1.	மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்	—தலைவர்.
2.	அரசு செயலர், கல்வித்துறை	—உறுப்பினர்.
3.	ஆணையர், இந்து அறநிலைய பாதுகாப்புத்துறை	,,
4.	இயக்குநர், அரசு பொருட்காட்சி சாலை	,,
5.	திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரன், துணைவேந்தர், மதுரைப் பல்கலைக்கழகம்.	,,
6.	பேராசிரியர், தொல்லியல் ஆய்வுத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம்	,,
7.	திரு. சா. கணேசன், காரைக்குடி	,,
8.	திரு. தி. நா. ராமச்சந்திரன்	,,
9.	தொல்லியல் துறை இயக்குநர்	—உறுப்பினர்-செயலர்.

இக்குழு 67-லிருந்து இருமுறை கூடி சிறந்த ஆலோசனைகளை நல்கியது.

இத்துறையின் பல்வேறு பணிகளையும் தமிழ் மக்களின் கவனத்துக்கும் உலக மக்களின் கவனத்துக்கும் கொண்டு வர ஆண்டு ஒருமுறை ஒரு இதழாக வெளியிடத் தீர்மானித்து அதன்படி இது வெளியிடப்படுகிறது. இந்நூலில் 1969-ஆம் ஆண்டு முடிய இத்துறையின் பணிகள் சேர்க்கப்பட்டுள்ளன. இதில் மூன்று பகுதிகள் அடங்கியுள்ளன. முதல் பகுதியில் இத்துறையின் பல துறைப் பணிகள் தமிழிலும், இரண்டாம் பகுதியில் ஆங்கிலத்திலும் கொடுக்கப்பட்டுள்ளன. மூன்றும் பகுதியில் தொல்லியல் வல்லுநர்களின் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. அவர்களுக்கு இத்துறையின் நன்றி. நூலின் முடிவில் வரலாற்று நூல்களின் ஆய்வும் சேர்க்கப் பட்டுள்ளது. பல நிழற்படங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

இதில் உள்ள குணம் கொண்டு, அல்லவை நீக்கி இத்துறையின் தொண்டு சிறக்க, ஊக்குவிக்க வேண்டுகிறேன்.

இரா. நாகசாமி, எம்.ஏ.
இயக்குநர், தமிழ்நாடு அரசு, தொல் இயல் துறை.

PREFACE

The Tamilnadu State Department of Archæology was formed in 1961 with Thiru T. N. Ramachandran, Joint Director General of Archæology in India, Retired, as Special Officer to organise the Department. During his tenure of office, Thiru Ramachandran organised the conservation and photographic wings in the Department, besides visiting a number of monuments in the state. A draft bill, the Madras State Ancient Monuments and Historical Sites and Remains Bill, was prepared by him and submitted to the Government for legislation in the Madras Legislature. The bill was enacted in December 1966. Thiru T. N. Ramachandran retired on 20--7--1965. Later in the same year the post of Special Officer was redesignated as Director of Archæology. I was appointed Director of Archæology in December 1966.

The Department has undertaken the printing of inscriptions of Tamilnadu under a phased programme. The activities of the Department have been enlarged in various fields and at present the Department is engaged in the following programmes :-

1. Copying and printing of inscriptions of Tamilnadu.
2. Conservation of ancient monuments.
3. Exploration and excavation of ancient sites.
4. Publication of monographs and guides.
5. Organising exhibitions and seminars and
6. Photographing ancient monuments.

The Government constituted an Advisory Board of Archæology for the State with the following distinguished scholars as members :-

1. Honourable Minister for Education —*Chairman.*
2. Secretary to Government, Education Department —*Member.*
3. The Director of Museums, Madras ,,
4. Commissioner, Hindu Religious and Charitable Endowments Department. ,,
5. Thiru T. P. Meenakshisundaran, Vice-Chancellor, Madurai University ,,

6. Thiru T. V. Mahalingam, Professor of Ancient History and Archæology, Madras University —*Member.*

7. Thiru Saw. Ganesan, M. L. C. ,,

8. Thiru T. N. Ramachandran, Madras ,,

9. The Director of Archæology, Government of Tamilnadu —*Member-Secretary.*

The Committee met twice between 1967 and 1969 and offered valuable suggestions.

In order to bring to the notice of the public the activities of the Department it has been decided to publish an annual journal. This is the first issue of the journal and it carries notes on the activities of the Department from 1961 to 1969. It is in three parts; Part I carries the report in Tamil and Part II in English. Part III carries articles on monuments, inscriptions, coins and conservation by distinguished scholars. We record our grateful thanks to all those who have contributed to the successful functioning of this department and the publication of this issue. Illustrations to the extent possible are included. Book reviews are included at the end. The publication of the journal will be fulfilling its purpose if it evokes interest in the art and architecture of Tamilnadu among the people.

R. Nagaswamy, M.A.
Director of Archaeology, Govt. of Tamilnadu.

புதிய கண்டுபிடிப்புகள்

பல்லவர் சிற்பம்:

அகக்கூத்து சிற்பங்கள், காஞ்சிபுரம், செங்கல்பட்டு.

காஞ்சிபுரத்துத் தான்தோன்றீச்சுரர் கோயிலில் முதற் பல்லவர் காலத்து சிற்பங்கள் சில காணக் கிடைக்கின்றன. இக்கோயிலின் கட்டடங்கள் சமீப காலத்தவை. ஆனால் அவற்றின் சுவரில் நாட்டியத்தைச் சித்திரிக்கும் சில சிற்பங்கள் பதித்து வைக்கப்பட்டுள்ளன. இவையனைத்திலும் ஆண் பெண் இருபாலரும் சேர்ந்து நடமிடும் காட்சி சித்திரிக்கப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரும் கையில் ஒரு துண்டோ, அல்லது மணியோ, அல்லது தோலாலான பையோ கொண்டு நடமிடுவதைக் காணலாம். இவர்களனைவரும் குறுகிய ஆடையணிந்துள்ளனர். ஒரு சிற்பத்தில் வீரர்களின் கையிலே கத்தி கொண்டு ஒரு காரிகையுடன் ஆடுவது புறக்கூத்தைச் சித்திரிப்பதாக இருக்கலாம். மற்றவை அகக்கூத்தைச் சித்திரிக்கும் காட்சிகளாகத் தோன்றுகின்றன. இவற்றின் வடிவ அமைதிகளிலிருந்து மகேந்திர வர்மனின் காலத்திற்கு (கி. பி. 6-7) முற்பட்டதாகக் கருதலாம். ஆந்திர நாட்டில் முதல் இரண்டு நூற்றாண்டுகளில் சிறப்பெய்திய அமராவதி, நாகார்ஜுனகொண்டா என்ற இடங்களில் கிடைக்கப்பெற்ற சிற்பங்களை இவைகள் நினைவூட்டுகின்றன. ஆந்திரத்தின் தென்பகுதியை முதற்பல்லவர்கள் ஆண்டனர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. இவ்விரு பகுதிகளுக்கும் இருந்த கலைத் தொடர்பை இச்சிற்பங்கள் காட்டுபவையாக உள்ளன.

சிறு சிற்பத் தொடர்கள்

தொண்டை மண்டலப் பகுதியில் பல இடங்களில் சிறிய அளவில் சில சிற்பங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சுமார் 1 அடி நீளமும் 9 அங்குல அகலமும் உள்ள இச்சிற்பங்களில் நான்முகன், உமாமஹேஸ்வரர், இலக்குமிநரசிம்மர். முருகப் பெருமான் ஆகிய தெய்வங்களின் உருவங்கள் ஒரே வரிசையில் ஒரே பீடத்தில் அமர்ந்தவையாகக் காணப்படுகின்றன. பல சிற்பங்களில் இதே அமைதி காணப் பெறினும் சிலவற்றில் ஒரு சில மாறுதல்களும் காணப்படுகின்றன. சிவபெருமான் அனைத்திலும் இலிங்க உருவிலே காணப்பெறுகிறார். உமை அன்னை அவருக்கு இடதுபுறம் அமர்ந்த நிலையில் காணப்பெறுகிறாள். இலக்குமி திருமறுவாக (ஸ்ரீவத்ஸம்) அரை மனித உருவில், உருட்டிய பந்து போல காணப்பெறும் கைகால்கள் உடையவளாகக் காணப்பெறுகிறாள். பண்டைய சிற்பங்களில் காணப்பெறும் ஸ்ரீவத்ஸம் என்னும் மறுவின் அமைதி இது. இவை தவிர அனைத்திலும் தாமரை அணை மீது நெடுங்கழி போன்ற உருவம் காணப்படுகிறது. தாமரை அணை மீது காணப்பெறுவதால் இது ஒரு தெய்வீக உருவாக இருத்தல் வேண்டும். சில சிற்பங்களில் இத்தெய்வங்களைத் தவிர கூப்பிய கரங்களையுடைய ஆண்மக்கள் உருவங்களும், தாமரை மலர் தாங்கிய மகளிர் உருவங்களும் காணப்பெறுகின்றன. இது போன்ற சிற்

பங்கள் இதுவரை முன்னூர், மணிமங்கலம், தென்னேரி, மதுராந்தகம், உத்தர மேரூர், உக்கல், பிரம்மதேசம் ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன.

இதே போன்ற சிறு சிற்பங்கள் இரண்டு, ஒருசில வேறுபாடுகளுடன் ஆந்திர தேசத்து பெத்தமுடியம் என்ற ஊரில் கிடைத்துள்ளன. அவை இப்பொழுது சென்னை பொருட்காட்சிச் சாலையில் வைக்கப்பட்டுள்ளன. பல்லவ நாட்டின் பல பகுதிகளில் இச்சிற்பங்கள் கிடைக்கப் பெறுவதிலிருந்து அக்கால மக்கள் சமய வேற்றுமையின்றி நான்முகன், திருமால், சிவபெருமான், முருகன் ஆகிய தெய்வங்கள் அனைத்தையும் ஒருங்கே வழிபட்டு இருக்கின்றனர் என்பது தெளிவு. பல்லவ மன்னர்கள் பரம மாஹேச்சுரன், பரம பிரமண்யன், பரம பாகவதன் என்ற பட்டங்களை ஒருங்கே பெற்றிருந்தனர் என்பது இங்கே நினைவில் கொள்ளத் தகும். பல்லவர் ஆட்சியில் பல இடங்களில் கோயில்கள் மூப்பெரும் தெய்வங்களுக்கும் எடுக்கப்பெற்றன.

முன்னூர், தென்னாற்காடு மாவட்டம்.

இவ்வூர் ஆடவல்லீச்சுரர் கோயிலில் இரண்டு சிற்பங்கள் கிடைத்துள்ளன. அவற்றில் ஒன்றில் நான்முகன், சிவலிங்கம், உமை, முருகன், நரசிம்மர் ஆகியவை ஒரே ஆசனத்தில் அமர்ந்து காணப்படுகின்றனர். சிவலிங்கத்தைத் தவிர மற்ற தெய்வங்கள் அனைத்தும் இரண்டே கரங்களை உடையவர்களாக, இடக்கரத்தைத் தியானத்திலமர்த்தி, வலக்கரத்தை அபயத்தில் கொண்டு விளங்குகின்றனர். இவர்கள் அணிந்திருக்கும் பூனூல்கள் பட்டையாகக் காணப்படுகின்றன. நரசிம்மருடைய தலை சிம்ம உருவில் காணப்படுகிறது. முருகப்பெருமானைத், தலையில் சூடியிருக்கின்ற கன்னியால் அறியமுடிகிறது. சதுரமான பீடத்தின் மேல் திரண்ட இலிங்கமாக சிவபிரான் காணப்பெறுகிறார்.

ஜேஷ்டா (சேட்டை): சேட்டை சிற்பத்தில் ஆறு உருவங்கள் காணப் பெறுகின்றன. அவற்றில் முதல் நான்கும் நின்ற நிலையில் உள்ள இரு ஆண்களும் இரு பெண்களுமாகக் காணப்படுகின்றன. சேட்டை அமர்ந்த நிலையில் காணப்படுகிறாள். அவளது வலப்புறத்தில் மாட்டு தலையும், கையிலே கதையும் கொண்ட உருவம் காணப்பெறுகிறது. இடப்புறத்தில் ஒரு பெண்ணின் உருவம் காணப் பெறுகிறது.

உத்தரமேரூர், செங்கல்பட்டு மாவட்டம்.

இவ்வூரில் நான்கு சிற்பத் தொடர்களும் ஒரு சேட்டைச் சிற்பமும் காணப் படுகின்றன. சேட்டைச் சிற்பமும், சிற்பத் தொடர் ஒன்றும் மேற்கட்டி அம்மன் கோயிலில் உள்ளன. ஒரு சிற்பம், மாதிரியம்மன் கோயிலில் உள்ளது. மற்றைய இரண்டு சிற்பத் தொடர்களும் வடவாயில் செல்வியான துர்க்கைக் கோயிலில் உள்ளன. புதுச்சேரி பிரஞ்சிந்திய கழகத்தால் வெளியிடப்பட்டுள்ள 'வரலாற்றில் உத்திரமேரூர்' என்ற நூலில் இவை விரிவாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன.

பிரம்மதேசம், வட ஆற்காடு மாவட்டம்.

ஊரிலிருந்து பண்டைய சிவாலயத்துக்குச் செல்லும் வழியில் உள்ள பிள்ளை யார் கோயிலில் ஒரு சிற்பத் தொடர் காணப்படுகிறது. இதில் உள்ள சிற்பங்கள் காலப்போக்கால் மிகவும் தேய்ந்து காணப்படுகின்றன.

மணிமங்கலம், செங்கல்பட்டு மாவட்டம்.

இவ்வூர் சிவாலயத்தில் காணப்படும் இச்சிற்பம் 1 அடி 9 அங்குலம் நீளமும் 8 அங்குல அகலமும் உள்ளது. முதலில் காணப்படும் ஐந்து தெய்வீக உருவங்கள் அமர்ந்த நிலையிலும், பிற நின்ற நிலையிலும் காணப்படுகின்றன. தெய்வ உருவங்கள் அனைத்தும் இரு கரங்களுடன் காணப்படுகின்றன. நான்முகன், இலிங்கம், உமை, முருகன், நரசிம்மர், திருமறு அனைத்தும் முறையே காணப்படுகின்றன. இலிங்கமும் உமையும் சைவ சமய உமா மஹேச்சுர தத்துவத்தையும், திருவும், நரசிம்மரும் பாகவத சமயத்தின் இலக்குமி நரசிம்ம தத்துவத்தையும் காட்டுகின்றன. சிற்பத்தின் இறுதியில் முன்னூர் சிற்பங்களைப்போல நின்ற நிலையில் நான்கு மனித உருவங்கள் காணப்படுகின்றன. தெய்வ உருவங்களுக்கும் மானிட உருவங்களுக்கும் இடையில் நெடுங்கழியாகிய அருவம் காணப்படுகிறது.

மதுராந்தகம், செங்கல்பட்டு மாவட்டம்.

அமெரிக்க நாட்டைச் சார்ந்த திரு டேவிட் சான்போர்ட் என்பவர் மதுராந்த கத்தில் சிவாலயத்தில் சிறு சிற்பங்கள் உள்ளதை இத்துறையின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். இவ்விரு சிற்பங்களும் சுமார் 30 செ. மீ. நீளமும் 20 செ. மீ. அகலமும் உள்ளவை. இவை சிவாலயத்தின் சண்டேச்வரர் சிற்றாலயத்தில் உள்ளன. முதல் சிற்பத்தில் சிவபெருமான் இலிங்க உருவிலே காணப்படுகிறார். அவருக்கு அடுத்து அமர்ந்த நிலையில் உமையன்னை காணப்படுகிறாள். இருவருக்கும் இடையில் குழவியாக சுப்பிரமணியர் தோற்றமளிக்கிறார். இம்மூன்று உருவங்களும் சோமாஸ்கந்த மூர்த்தியைக் குறிக்கும். உமையின் இடப்புறத்து கணபதி காண்பிக்கப் பட்டுள்ளார். அடுத்த சிற்பத்தில் மூன்று நின்ற தெய்வ உருவங்களும், அணுக்கர் களோடு கூடிய ஜேஷ்டாதேவியும், நெடுங்கழியாகிய அருவமும் காணப்படுகின்றன. நின்ற தெய்வீக உருவங்களில் முதலில் உள்ளது நான்முகன் உருவம். அடுத்து காணப் பெறுவது திருமாலின் உருவம். திருமாலின் வலது தோளுக்கு மேல் திரு மறுவைக் காணலாம். அடுத்து நிற்பது அர்த்தநாரீச்சுரரின் உருவம் அணுக்கர் களுடன் கூடிய ஜேஷ்டாதேவி அமர்ந்த நிலையில் காணப்படுகிறாள். அவளுக்கு இடப்புறத்தில் கரம் கூப்பி நிற்கும் ஆடவன் உருவத்தைக் காண்கிறோம். இது இச் சிற்பத்தை செய்தவரின் படிமமாக இருக்கலாம். அடுத்து உள்ளது அருவம். இச் சிற்பங்கள் கி.பி. 7, 8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பல்லவச் சிற்பங்களாகக் காணப் படுகின்றன.

ஸ்ரீதேவி, காவேரிப்பாக்கம், வட ஆற்காடு மாவட்டம்.

இவ்வூர் சிவாலயத்தில் பல்லவர் கால திருமறுவின் சிற்பம் காணப்படுகிறது. பாதி மானிட உருவிலும் உருண்ட பந்து போன்ற கால்களையும் உடைய இவ்வுரு வின் இருபுறத்தும் இரண்டு மத்த கஜங்கள் காணப்பெறுகின்றன. ஒன்று குடத்தில்

இருந்து நீரைத் தேவியின் மீது ஆட்ட, மற்ருென்று கலசம் ஏந்தி நிற்கிறது. இரண்டு எழில் வாய்ந்த துவாரபாலகர் சிலைகளும் இக்கோயிலில் காணப்படுகின்றன. இவ்வூரில் இருந்து கிடைத்த பல பல்லவர் காலச் சிற்பங்கள் சென்னை அரசினர் பொருட்காட்சிச் சாலையில் உள்ளன. அவற்றிலும் இங்கு உள்ள ஸ்ரீதேவியைப் போன்ற ஓர் உருவம் உள்ளது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீதேவி, கூரம், செங்கல்பட்டு மாவட்டம்.

காவேரிப் பாக்கத்தின் ஸ்ரீதேவியைப் போன்ற ஒரு ஸ்ரீதேவியின் சிற்பம் இங்கு காணப்படுகிறது பல்லவ மன்னன் பரமேஸ்வரவர்மனின் காலத்தில் இங்கு சிவபெருமானுக்கு ஒரு கோயில் எழுப்பப்பட்டது. இச்சிற்பம் அக்காலத்தைச் சார்ந்ததாக இருக்கக் கூடும்.

மாங்காடு, செங்கல்பட்டு மாவட்டம்.

சென்னைக்கு அண்மையில் உள்ள இவ்வூரில் திருமால் ஆலயத்தில் சில பல்லவர் காலச் சிற்பங்கள் உள்ளன.

கொற்றவை: சங்கும் சக்கரமும் கரங்களில் ஏந்தி வலக்கரத்தால் அபயமளித்து, இடக்கரத்தைக் குரக்கம் சேர்த்து நின்ற நிலையில் காணப்படும் இத்தேவியின் காலின் கீழ் எருமைத்தலை இல்லை.

சிவபெருமான்: நான்கு கரங்களும், மேலிருகரங்களில் சூலமும் மழுவும் தாங்கி வலக்கரத்தால் அபயமளித்து, இடக்கரத்தை துடைமீது அமர்த்தி அமர்ந்த நிலையில் இப்பெருமானின் உருவம் காணப்படுகிறது.

இருலோக பாலர்கள்: இரண்டு கரங்களும், வலது கரத்தில் கதையும் பூண்டு விளங்கும் இவ்விரு சிலைகளும் அமர்ந்த நிலையில் காணப்பெறுகின்றன. ஒரு உருவத்திற்கு மூன்று கால்கள் காணப்படுகின்றன.

அமர்ந்த சிம்மம்: காஞ்சி, மாமல்லை ஆகிய இடங்களில் காணப்படும் சிம்மத் தூண்களைப்போல் காணப்படும், மணற் கல்லாலான அமர்ந்த நிலையில் ஒரு சிம்மம் இங்கு உள்ளது. இதுவும் ஒரு சிம்மத் தூணின் அடிப்பகுதியாக இருக்கலாம்.

ஜேஷ்டா தேவி: இவ்வூரில் வயல்களின் அருகில் ஓர் எழில் மிக்க ஜேஷ்டையின் உருவம் காணப்படுகிறது. அமர்ந்த நிலையில் காணப்படும் ஜேஷ்டை தன் அணுக்கர்களுடன் காணப்படுகிருள்.

மேலே குறிப்பிட்டுள்ள அனைத்தும் பல்லவர் காலச் சிற்பங்களாகும். இவை யாவும் கி.பி. 7, 8-ஆம் நூற்ருண்டைச் சார்ந்தனவாகக் கருதப்படுகிறது.

திருநாதற்குன்று, செஞ்சி, தென்ஞற்காடு மாவட்டம்.

சமணச் சிற்பங்கள்: (படம் 7-b) திருநாதற்குன்று மலைமீது இருபத்து நான்கு சமண முனிவர்களின் உருவங்கள் இரண்டு வரிசைகளாக அமர்ந்து தியானம்

செய்யும் நிலையில் இருக்கின்றன. ஒவ்வொரு உருவின் தலைக்கு மேலும் முக்குடை காணப்படுகிறது. இரு பக்கங்களிலும் சாமரங்கள் காணப்படுகின்றன. முனிவர்கள் அரியணை மீது அமர்ந்து காணப்படுகின்றனர். இவை 24 தீர்த்தங்கரர்களின் உருவங்களாக இருக்கக் கூடும். இவை கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை.

வடக்காலத்தூர், (படம் 8 a) தஞ்சை மாவட்டம்.

தேவியர்சூழ் திருமால்: திருமகளோடும் பூமகளோடும் விளங்கும் திருமால் சிலை இவ்வூரில் உள்ள திருமால் கோயிலில் உள்ளது. உயர்ந்த கிரீட முடியும், பட்டையான பூணூலும் பூண்டு விளங்கும் இப்பெருமானின் ஆடைகள் பளுவான தொங்கும் உத்தரியத்துடன் காணப்படுகின்றன. இச்சிலை மணற்கல்லால் ஆனது. காஞ்சியிலும் மாமல்லையிலும் காணப்படும் பல்லவர் சிற்பங்கள் எந்த மணற்கல்லால் ஆனவையோ, அதே கல்லால் இச்சிலையும் செய்யப்பட்டுள்ளது. நாகப்பட்டினத்திற்கு அண்மையில் இச்சிலைகள் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். இராஜசிம்ம பல்லவன் காலத்தில் நாகப்பட்டினத்தில் சீன தேசத்து மன்னனால் ஒரு பௌத்த விஹாரம் எடுக்கப்பட்டது என்றும் அதற்குப் பல்லவ மன்னன் அனுமதியளித்தான் என்றும் சீனத்து நூல்கள் குறிக்கின்றன. இப்பல்லவ மன்னன் காலத்துத் திருமால் சிற்பம் இங்கு காணப்பெறுவதிலிருந்து இவன் ஆட்சி நாகப்பட்டினம் வரை பரவியிருந்தது என்பது உறுதியாகிறது. தேவியர் இருவர் சிலையும் அதே காலத்தைச் சார்ந்தவையாகும்.

கோபுரப்பட்டி, (படம் 8 b) திருச்சி மாவட்டம்.

உமை தழுவிய சடைமுடி அண்ணல்: நின்ற நிலையும், நான்கு கரங்களும், மேலிரு கரங்களில் மானும், மழுவும் பூண்டு, கீழ் வலக்கரத்தைக் குரக்கம் மீது அமர்த்தி, இடக்கரத்தால் உமையன்னையைத் தழுவி நிற்கும் இந்நெடுமுடியண்ணல் வலது செவியில் உருத்திராட்ச குண்டலமும், இடது செவியில் பத்ரகுண்டலமும் பூண்டு, பட்டையான பூணூல் தரித்து, அகன்ற பளுவான ஆடை தரித்து விளங்குகிறார். அருகில் தேவி அழகே உருவாக நிற்கிறாள். சிற்ப அமைதியிலிருந்து கி. பி. 8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பல்லவர் காலச் சிற்பமாக இதைக் கொள்ளலாம். இச்சிலையும் இதனருகிலுள்ள துர்க்கை, ஜேஷ்டை ஆகிய இரு சிலைகளும் கோபுரப்பட்டியில், வயல்களின் நடுவில் நிற்கும் பாழடைந்த ஒரு கோயிலைச் சேர்ந்தவையாகும்.

கொற்றவை: எட்டு கரங்கள் பூண்டு நின்ற நிலையில் காணப்படும் இத்தேவியின் சிற்பமும் பல்லவர் காலச் சிற்பமே. வலக்கரங்களில் ஆழியும், கத்தியும், அம்பும், அபயமும் பூண்டு, இடக்கரங்களில் சங்கும், கிடுகும் (கேடயமும்), வில்லும், வரதமும் பூண்டு விளங்குகின்ற தேவியின் பின்புறத்தே கரிய திரிகோட்டுக் கலை ஒன்று காணப்படுகிறது.

ஜேஷ்டை சிலை: இரு கரம் பூண்டு அமர்ந்த நிலையிலே விளங்கும் தேவி, வலக்கரத்தில் தாமரை மலர் தரித்துள்ளாள். அணுக்கர்கள் இன்றி தேவி இங்கு தனித்தவளாகக் காணப்படுகிறாள். இச்சிலை பல்லவர் காலச் சிற்பம் என்பது திண்ணம்.

பாண்டியர் சிற்பங்கள் :

இராஜாக்கள்மங்கலம், (படம் 10, 11) திருநெல்வேலி மாவட்டம்.

திருநெல்வேலி மாவட்ட நாங்குநேரி வட்டத்தில் இராஜாக்கள்மங்கலம் என்னும் சிற்றூர் உள்ளது. இவ்வூரில் உள்ள சில உன்னத சிற்பங்கள் களவு போய் விட்டன என இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின் பொதுச் செயலாளர் அவர்களால் தமிழக அரசுக்குத் தெரியப்படுத்தப் பெற்றது. அதன் பேரில் தமிழக அரசு, திருநெல்வேலி மாவட்ட வருவாய் அதிகாரி அவர்களை அதுபற்றி ஆராய உத்திரவிட்டது. சிற்பங்கள் கிடைக்கப் பெற்ற நிலத்தின் உரிமையாளர் வேறு ஒருவரிடம் விற்று விட்டதாகத் தெரிய வந்தது. பின்னர் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள், தொல்லியல் புலவர் ஒருவரை அனுப்பும்படி வேண்டிக் கொண்டதின் பேரில், அரசு இத்துறைக்கு தெரியப் படுத்தி, ஒரு ஆய்வறிக்கை சமர்ப்பிக்க ஆணையிட்டது.

அங்கு சென்ற பொழுது, அவ்விடம் மண் மேடாக இருப்பதாலும், சிற்பங்கள் பெருமளவில் கிடைப்பதாலும் அங்கு ஒரு பெருங் கோயில் இருந்திருக்கக் கூடும் என்று உணரப்பட்டது. அவைகளில் சில தாய்மார் எழுவர் சிலைகள். மூன்று ஆண் சிலைகளின் பீடங்களில் கல்வெட்டுகள் உள்ளன. ஒரு சிற்பத்தில் ''சதக்ரது' (இந்திரன்) என்றும், மற்றொன்றில் ''குஜ'' (செவ்வாய்) என்றும் பொறிக்கப் பெற்றுள்ளன. மூன்றாமவதில் ''ய'' என்று உள்ள எழுத்து, யமனைக் குறிப்பதாக இருக்கலாம். அச்சிற்பங்களில் சில திசைக் காவலர்களின் சிற்பங்களாக உள்ளன. ஆனால் இதுவரையில் கோள்களின் உருவங்கள் காணப் பெறவில்லை. எனவே இச்சிலைகளைத் தென்னிந்தியாவின் சமயக்கலை ஆராய்ச்சிக்கு மிகவும் முக்கியமானதாகக் கொள்ளல் வேண்டும்.

திருச்சுழியல், (படம் 12, 13) மதுரை மாவட்டம்.

பூமகளும் புவிமகளும் : இரண்டு எழில் வாய்ந்த ஸ்ரீதேவி, பூதேவியின் சிற்பங்கள் இவ்வூர் சிவாலயத்தில் உள்ளன. இவையிரண்டும் ஒரு திருமால் உருவின் இரு மருங்கிலும் வைக்கப்பட்டுள்ளன. இரண்டு தேவியும் தாமரை இருக்கையில் அமர்ந்து நான்கு கரங்கள் பூண்டு காணப்படுகின்றனர். இது ஒரு அரிய காட்சியாகும். இவ்விரு உருவங்களும் ஒரே உயரமுடையவையாயும், ஒன்றே போன்று ஆடைகள் அணிந்தும் காணப்படுகின்றன. இரண்டு உருவங்களும் மேலிரு கரங்களில் தாமரை மலரைத் தாங்குகின்றன. கீழ் இடக்கரத்தைத் துடைமீது அமர்த்தி, இடக்காலைத் தொங்க விட்டு அமர்ந்துள்ளன. ஓர் உருவம் கீழ் வலக்கரத்தில் தாமரை மலர் தாங்கியுள்ளது. இது பூமகளின் உருவாக இருத்தல் வேண்டும். இரு தேவியரும் கச்சணிந்து காணப் படுகின்றனர். இடையில் அணிந்த ஆடைகளுடன் பொன் சங்கிலித் தொடர்களும் அவற்றின் நுனியில் மணி, அரசிலை முதலியனவும் மிகைப்படுத்துகின்றன. இரு தேவியர் சிலையும் நடுவில் இருக்கும் திருமால் சிலையைக் காட்டிலும் பெரியவை. ஆதலின் இவைகளுக்கேற்ப திருமால் சிலையுடன் இவை இருத்தல் வேண்டும். இப்பொழுது இருக்கும் திருமால் சிலை மிகத் தொன்மையானதாகினும் தேவியருடன் சேர்ந்தது அல்ல. சிற்ப அமைதியிலிருந்து இவை கி.பி. 8-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பாண்டிய சிற்பங்களாகக் கொள்ளலாம்.

முத்தரையர் சிற்பம் :

செந்தலை, (படம் 9 a) தஞ்சை மாவட்டம்.

நரசிம்மர் : இவ்வூர் சிவாலயத்தில் உள்ள நரசிம்மர், மேலிரு கரங்களில் ஆழியும் சங்கமும் பூண்டு, கீழிரு கரங்களை கால்களின் மீது அமர்த்தி அழகாக அமர்ந் திருக்கும் காட்சி ஆணவம் நிறைந்த அவுணனின் உடலை அழித்த திண்மையைத் தெளிவு பெற காட்டும் வகையில் உள்ளது. முத்தரையர்களைப் பற்றிய கல்வெட்டு கள் இக்கோயிலில் உள்ளதாலும், கி.பி. 8-ஆம் நூற்றுண்டைச் சார்ந்த சிற்ப அமைதியுடன் விளங்குவதாலும், இச்சிற்பம் முத்தரையர் சிற்பமாக இருக்கக் கூடும்.

திருமால் : (படம் 9 b) மேலிரு கரங்களில் ஆழியும் சங்கும் பூண்டு கீழ் வலக் கரத்தால் அபயம் அளித்து, இடக்கரத்தைக் குரக்கம் மீது அமர்த்தி அமர்ந்த நிலையில் காணப்பெறும் திருமாலின் சிலையும் கி. பி. 8-ஆம் நூற்றுண்டைச் சார்ந்தது. இவ்வுருவும் முத்தரையர் சிற்பமாக இருக்கக் கூடும்.

சோழர் சிற்பங்கள் :

திருவொற்றியூர், (படம் 14 b) செங்கல்பட்டு மாவட்டம்.

தக்ஷிணமூர்த்தி : திருவொற்றியூரில் உள்ள சிவன் கோயிலில், கௌளீசர் என்று அழைக்கப்படும் சிவபிரானின் திருமேனி அமர்ந்த நிலையில் உள்ளது, இதை சிலர் லகுலீசர் என்று கருதுகின்றனர். இத்திருமேனி நான்கு கரங்களையும் பெரிய சடைமுடியும் பூண்டு ஸ்படிகக் குண்டலங்களுடன் காணப்படுகிறது. கீழ் வலக்கரம் வக்கணிக்கும் நிலையிலும், இடக்கரம் மார் மீதும் உள்ளன. மேல் இடக்கரம் கபாலத்தைக் கொண்டு உள்ளது. வலக்கரம் சூலத்தின் தண்டை கொண்டு உள்ளது. இது சிலரால் கழி என்று கருதப்படுகிறது. ஆனல், வலக்கரத் தில் உள்ளது சூலத்தின் அடிப்பகுதியாகும். சிவபிரான் பத்மாசன நிலையில் அமர்ந் திருக்கிருர். இக்கோயிலின் மூலத்தானம் முதலாம் இராஜேந்திர சோழன் காலத் தில் கட்டப்பட்டது. இச்சிலையும் அம்மன்னன் காலத்தது என கொள்ளலாம். கோயில் விமானத்தின் மேல் தளத்தின் தென் பகுதியில் இதே போன்ற சிலை ஒன்று உள்ளது.

தமிழ் நாட்டில், சைவ சமய பிரிவுகளில் ஒன்ருன காளாமுகப் பிரிவு இருந் திருக்கிறது. திருவொற்றியூர் காளாமுக சைவர்களின் இருப்பிடமாகக் கருதப்படு கிறது. 'சர்வ சித்தாந்த விவேகம்' என்னும் வடமொழி நூல், இப்பிரிவினருக்கு மஹா தேவரே உலகின் பதி என்றும், அவர் உருத்திரரின் அம்சம் என்றும், அவரே தக்ஷிண மூர்த்தி ஆகிய இன்னும் பல உருவங்களில் தோற்றமளிக்கிருர் என்றும் கூறு கின்றது. சிவப்புச் சந்தனம் அணிவதும், ஸ்படிகக் குண்டலம் அணிவதும் சிறப்பாக இவர்களால் கருதப்படுகிறது. 'ஞானவரண விளக்கம்' என்ற நூலில் வெள்ளியம்பலத் தம்பிரான் அவர்கள் காளாமுகம் என்பது சோம சித்தாந்தம் ஆகும் என்ற குறிப்பை அளித்துள்ளார்.

திருவொற்றியூர் உடையார் கோயிலில் சோமசித்தாந்தம் சிறப்பாகத் திகழ்ந்திருக்கிறது என்று கல்வெட்டுகளிலிருந்து அறிகிறோம். இரண்டாம் இராஜாதிராஜனுடைய கல்வெட்டு ஒன்றில் மன்னன் கோயிலுக்கு வருகை தந்ததாகவும் அச்சமயம் சதுரானன பண்டிதரும் உடனிருந்தார் என்றும், வாகீச பண்டிதர் என்பார் சோம சித்தாந்தம் வியாக்யானம் செய்தார் என்றும் கல்வெட்டு குறிக்கிறது. காளாமுக சித்தாந்தம், சோம சித்தாந்தம் என பெயர் பெற்றது என்பதும், அது திருவொற்றியூரில் சிறப்படைந்தது என்பதும் இதிலிருந்து தெளிவாகும். சோமசித்தாந்திகள் வணங்கிய தக்ஷிணாமூர்த்தியின் உருவமே இன்று கௌலீசர் என்று வழங்கப்படுகிறது என்று அறியலாம்.

காளஹஸ்தி, (படம் 14 a) சித்தூர் மாவட்டம்.

சதுர்முகலிங்கம்: காளத்தியில் சதுர்முகலிங்கம் ஒன்று காணப்படுகிறது. பீடத்தின் மேல் இலிங்கப் பகுதியின் நான்கு புறங்களிலும் நான்கு எழில் வாய்ந்த முகங்கள் தோற்றமளிக்கின்றன. ஊரின் புறத்தே குன்றின் ஒரு பகுதியில் சிறிய கட்டடத்தில் இது இப்பொழுது உள்ளது. இது குலோத்துங்க சோழன் காலத்தைச் (கி. பி. 12-ஆம் நூற்றாண்டை) சார்ந்ததாக உள்ளது.

வெண்குன்றம், வட ஆற்காடு மாவட்டம்.

யக்ஷி அம்பிகை: வெண்குன்றத்தில் உள்ள சமணக் கோயிலில் வழிபாட்டில் உள்ள யக்ஷி அம்பிகை இரண்டு கரங்களுடன் அமர்ந்த நிலையில் காணப்படுகிறாள். தேவியின் வலக்கரம் பூவைத் தாங்கியும், இடக்கரம் தண்டின் மேல் அமைந்தும் உள்ளன. தேவி கரண்ட மகுடத்தை அணிந்துள்ளாள். மார்பில் கச்சை காணப்படவில்லை. கீழ் நோக்கியுள்ள வலக்கால், படுத்திருக்கும் சிங்கத்தின் மேல் அமைந்து உள்ளது. அருகில் நின்றுகொண்டிருக்கின்ற உருவங்களில் ஒன்று பெண்ணையும் மற்ற இரண்டு உருவங்கள் ஆண்களையும் காட்டுகின்றன. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பிற்பட்ட சோழர் காலத்தது.

செப்புத் திருமேனிகள்

சிறப்புமிக்க பல செப்புச் சிலைகள் இத்துறையினரால் காணப்பட்டன. பின்வரும் திருமேனிகள் குறிப்பிடத்தக்கவை.

வடக்காலத்தூர்: (படம் 16, 17). நீண்ட சடைமுடியும், முப்பிரி நூலும், முக்கண்ணும் கொண்டு மேலிரு கரங்களில் மழுவும், மானும் தரித்து, இடக்கரத்தால் அபயமளித்து, வலக்கரத்தால் உமையின் கரம் பிடித்து நிற்கும் மலைமகள் மணாளராக காணப்படுகிறது சிவபிரானின் உருவம். இரு கரங்களும், எளிமையான ஆடையும், அணிகலன்களும் பூண்டு எழில் மங்கையாக, நாணம் மேலிட்டு நிற்கும் நங்கையாக, இடக்கரத்தை வளைத்து, வலக்கரத்தை அண்ணலுக்கு அளித்து நிற்கும் தேவியின் சிலையும், பெருமிதமாக நிற்கும் அண்ணலின் சிலையும் தமிழகத்துச் செப்புத் திருமேனிகளில் ஈடு இணையற்றவையாகும். கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் பல்லவர் ஆட்சியின் இறுதியில் இஃது தோற்றுவிக்கப்பட்டதாகக் கொள்ளலாம்.

ஆடவல்லார்: (படம் 18). அதே இடத்தில் காணப்படும் ஆடவல்லாரின் அழகுத் திருமேனி, ஆனந்த தாண்டவக் கோலத்தில் உள்ளது. பூதகணத்தின் மீது சிவன் நடமாடுகிறார். வலது மேல் கரத்தில் உடுக்கையும், இடது மேல் கரத்தில் அனலும், கீழிருகைகளும், அபயமும், வீசியாடும் கரமுமாய் உள்ளன. பிரபை ஒன்று சிலையைச் சுற்றியுள்ளது. விரிசடை உடலின் பின்புறம் விரிந்தாடுகிறது. இத்திரு மேனியின் முகம் கல்யாண சுந்தரர் அருகில் காணப்படும் உமையின் முகத்தை ஒத்திருக்கிறது. ஆடவல்லான் திருமேனியும் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சார்ந்ததாகும்.

உமாபரமேச்வரி: (படம் 19). இரு கரங்களுடன் காணப்படும் தேவி, பத்மாசனத்தில் நின்று கொண்டிருக்கிறாள். கரண்ட மகுடமும், சன்ன வீரமும் திருமேனியை அழகு செய்கின்றன. கல்யாண சுந்தரருடன் காணப்படும் பார்வதியின் ஆடையைப் போன்று உமாபரமேச்வரியின் கீழாடை உள்ளது. மேற் கூறப்பட்ட ஆடவல்லாரின் தேவியாக இத்திருமேனி இருந்திருக்கக்கூடும்.

தருமபுரம் ஆதீனம், தஞ்சை மாவட்டம்.

கொற்றவை (துர்க்கை): (படம் 20 a). நிற்கும் நிலையில் உள்ள துர்க்கையின் செப்புத் திருமேனிக்கு நான்கு கரங்கள் உள்ளன. மேலிரு கரங்களில் ஆழியும், சங்கமும் கொண்டு, கீழிரு கரங்கள் அபயமும், இடையில் அமர்ந்தும் உள்ளன. கி.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

மேலப்பெரும்பள்ளம், தஞ்சை மாவட்டம்.

வட்டணை காட்ட வந்த நாயகர்: (படம் 20 b). காவிரிப்பூம்பட்டினத்தின் அருகில் மேலப்பெரும்பள்ளம் என்ற பகுதியில் உள்ள சிவாலயத்தில் இவ்வெழில் வாய்ந்த செப்புத் திருமேனி இன்றும் வழிபாட்டில் உள்ளது. சுமார் ஒரு மீட்டருக்கு மேல் உயரமுள்ள இவ்வுருவம் நீண்ட சடைமுடியும், கையிலே தாங்கிய வீணையும், இடக்கரத்திலே தாங்கிய சூலமும், வலக்கரம் துள்ளிக் குதிக்கும் மானுக்கு துளிர் கொடுக்கும் கரமாகவும் விளங்கும் இப்பெருமான் காலில் காலணி அணிந்து வீணையின் நாதத்தில் இணைந்து வீதிதோறும் பிச்சைபுகும் பெருமானாக, வட்டணைக் காட்ட வந்த அழகராக, அருகில் குள்ளச் சிறுபூதம் தட்டைத் தலையிலே தாங்கிவர எழில் வாய்ந்த திருவுருவாய் எழுந்தருளிய திருக்கோலமாக உள்ளது. இது சிறப்பு வாய்ந்த செப்புத் திருமேனியாகும். வீணை தரித்த பிச்சாடனராக இந்த அமைதியிலே தோற்றுவிக்க அடிப்படையான சிற்பநூல், தியானச் செய்யுட்கள் கிடையா. ஆனால் இவ்வூர்ப் பெருமானைப் போற்றியுள்ள அப்பர்பிரானின் திருப்பதிகத்தில் இரண்டு செய்யுட்கள் சிறப்பு வாய்ந்தவை.

"கறுத்ததொரு கண்டத்தர் காலன் வீழக்
  காலினாற் காய்ந்துகந்த காபா லியார்,
முறித்ததொரு தோலுடுத்து முண்டஞ் சாத்தி
  முனிகணங்கள் புடைசூழ முற்றந் தோறுந்,
தெறித்ததொரு வீணையராய்ச் செல்வார் தம்
  வாய்ச் சிறுமுறுவல் வந்தெனது சிந்தை வெளவ
மறித்தொருகால் நோக்காதே மாயம் பேசி
  வலம்புரமே புக்கங்கே மன்னினாரே"

"பட்டுடுத்துப் பவளம் போல் மேனி யெல்லாம் பசுஞ்
 சாந்தங் கொண்டணிந்து பாதம் நோவ,
இட்டெடுத்து நடமாடி யிங்கே வந்தார்க் கெவ்வூரீர்
 எம்பெருமா னென்றேன் ஆவி,
விட்டிடுமா றதுசெய்து விரைந்து நோக்கி வேறோர்
 பதிபுகப் போவார் போல,
வட்டணைகள் படநடந்து மாயம்பேசி
 வலம்புரமே புக்கங்கே மன்னினாரே"

கணங்கள் புடைசூழ வந்தார் என்றும், சிந்தை வவ்வ சிறு முறுவல் செய்தார் என்றும், தெறித்ததொரு வீணையராய்ச் சென்றார் என்றும், வட்டணைகள் பட நடந்த பெருமான் என்றும் அப்பர்பிரான் போற்றியுள்ள இச்செய்யுட்களே இவ்வுருவை வடித்தெடுக்க தியானச் செய்யுட்களாக அமைந்தன என்று திட்டவட்டமாகக் கூறலாம். இவ்வூரில் இரண்டாம் இராஜாதிராஜனின் கல்வெட்டு ஒன்றில் இங்கு எழுந்தருளப்பட்ட செப்புத் திருமேனிகள் குறிக்கப்படுகின்றன. அவற்றில் ஒரு திருமேனியின் உருவம் வட்டணை காட்ட வந்த நாயகரின் உருவம் என்று கல்வெட்டு குறிக்கிறது. இவற்றில் இருந்து இவ்வுருவம் அப்பர் பாடலின் அடிப்படையிலேயே செய்யப்பட்டது என்பதும் அதே பெயரைக் கல்வெட்டுகளில் குறித்திருக்கின்றனர் என்பதும் தெளிவாகும்.

வேடனும், தேவியும்: (படம் 21 a). சிவன் கோயிலில், வேடன் உருவில் தாடியுடைய சிவபிரானின் திருமேனி சதுரவடிவ பீடத்தில் உள்ள பத்மாசனத்தில், நிற்கும் நிலையில் காணப்படுகிறது. காதுகளில் ஓலைக் குழைகளும், உடலில் சன்னவீரமும் காணப்படுகின்றன. இடதுகரம் வில்லைத்தாங்கியுள்ள நிலையில் உயர்த்தப்பட்டுள்ளது; வலதுகரம் அம்பு ஒன்றை ஏந்தியிருப்பதாக உள்ளது. பாதக்குறடு அணிந்துள்ள இத்திருமேனி, சிவபிரான் வேடனாக வந்து பார்த்தனுக்குப் பாசுபதம் அளித்ததைக் குறிக்கிறது. வேடன் அருகில், இருகரங்கள் கொண்ட தேவி பத்மாசனத்தின் மீது நின்றுகொண்டிருக்கிறாள். கீழ் தொங்கிய வலக்கரமும், வரதம் அளிக்கும் இடக்கரமும் கொண்ட தேவிக்கு, தமிழ்ப் பாணியில் முடியலங்கரிக்கப்பட்டுள்ளது. தேவியின் அணிகள் சோழர்கள் காலத்து அமைதியில் உள்ளன. கிராதமூர்த்தியும், தேவியுமாகிய இத்திருமேனிகள் கி. பி. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை.

நாகப்பட்டினம், தஞ்சை மாவட்டம்.

கிராதமூர்த்தி: (படம் 21 b). காயாரோஹணம் கோயிலில், பத்ர பீடத்தின் மேலுள்ள பத்மாசனத்தில், நிற்கும் நிலையிலுள்ள, இருகரங்கள் கொண்ட சிவபிரானின் திருமேனி உள்ளது. கொண்டை, குறுந்தாடி, முறுக்கிவிடப்பட்ட மீசை, காதுகளில் ஓலைக்குழைகள் ஆகியவை இத்திருமேனியை அழகு செய்கின்றன. இத்திருமேனியின் இடதுகரம் வில்லைத் தாங்கும் வகையிலும், வலதுகரம் அம்பு ஏந்திய நிலையிலும் அமைந்துள்ளன. இது கி. பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த, பிற்காலச் சோழர்கள் காலத்தது. இத்திருமேனி, தஞ்சாவூர், தாராசுரம் ஆகிய ஊர்க் கோயில்களில் காணப்பெறும் கிராதமூர்த்திகளின் திருமேனிகளை ஒத்துள்ளது.

கதிரவன்: இருகரங்களிலும் தாமரைத் தண்டுகளைத் தாங்கியுள்ள கதிர்வன், பத்மாசனத்தில் நின்றுகொண்டிருக்கிறார். திருமேனியின் பின்புறம் காணப்படும் ஒளி மண்டலமும், ஆடை, அணிகலன்கள் போன்றவையும், இது கதிர்வன் என்பதைப் பறைசாற்றுகின்றன. இத்திருமேனி கி. பி. 11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

வீரபாண்டி, மதுரை மாவட்டம்.

சந்திரசேகரர்: (படம் 22 a). முக்கண்ணும், நான்கு கரங்களும் உடைய சிவபிரானை, மானும், மழுவும் தாங்கிய மேலிருகைகளும், அபயம், வரதமளிக்கும் கீழிருகைகளும், சந்திரனைக் கொண்ட உயர்ந்த சடைமுடியும் அணி செய்கின்றன. அகலமான மடிப்புகள் கொண்ட சிற்றாடை, முழங்கால் வரை நீண்டுள்ளது.

ஆடவல்லார்: (படம் 22 b) நான்கு கரங்களுடைய சிவபிரான் குள்ளச் சிறு பூதத்தின் மீது நடமாடுகிறார். வலது மேற்கரத்தில் உடுக்கையும், இடது மேற்கரத்தில் நெருப்பும் காணப்படுகின்றன. வலது கீழ்க்கரம் அபயமளிக்கிறது. இடது கீழ்க்கரம் உடலின் குறுக்கே அமைந்துள்ளது. தூக்கிய இடது திருவடி, குள்ளச் சிறு பூதத்தின் மேலுள்ள வலது திருவடி, அரவம் சுற்றப்பட்ட வலது கீழ்க்கரம், உயரிய சடைமுடி, ஒளி மண்டலம் ஆகியவற்றுடன் காட்சியளிக்கும் சிவபிரானின் திருமேனி சதுர வடிவமான பீடத்தில் பத்மாசனத்தில் உள்ளது.

மேற்கூறப்பட்ட திருமேனிகள் பாண்டியர் காலத்த, கி. பி. 14-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை.

சோமாஸ்கந்தர்: (படம் 23 a). சிவபிரான், முருகன், உமையன்னை ஆகிய மூவரும், செவ்வக வடிவ பீடத்தின் மேலுள்ள பத்மாசனத்தில் அமர்ந்துள்ளனர். மானும், மழுவும் தாங்கிய மேலிருகரங்களும், அபய, வரதம் அளிக்கும் கீழிரு கரங்களும் கொண்ட சிவபிரானின் வலதுகால் கீழ் தொங்கியும், இடதுகால் பீடத்தின் மீதும் உள்ளன. அமர்ந்திருக்கும் உமையம்மையின் வலதுகரம் குமுதத்தைத் தாங்கியுள்ளது. உமையம்மையைக் கரண்ட மகுடம் அணி செய்கிறது. கமல மலர்களைக் கரங்களிரண்டிலும் கொண்ட குகன், கரண்ட மகுடம் அணிந்து, சற்றே குஞ்சித்த திருவடிகளுடன் நின்று கொண்டிருக்கிறார். ஒளி மண்டலம் இம்மூன்று திருமேனிகளையும் அழகு செய்கிறது.

பார்வதி 1: (படம் 23 b). பத்ர பீடத்தின் மேலுள்ள பத்மாசனத்தில் நின்றுகொண்டிருக்கும் தேவியின் வலது கரம், கமல மலரைத் தாங்கியுள்ளது. இடதுகரம் கீழே தொங்கவிடப்பட்டுள்ளது. தேவியின் தலையில் கரண்ட மகுடமும் காலில் சிலம்பும் விளங்குகின்றன.

பார்வதி 2: (படம் 23 c). இத்திருமேனி பத்ரபீடத்தின் மீதுள்ள பத்மாசனத்தில் நின்ற நிலையில் உள்ளது. இத்தேவி, வலது கரத்தில் குமுதம் ஒன்றை ஏந்தியும், இடதுகரம் கீழே தொங்கிய கோலத்திலும் உள்ளாள். தேவியின் தலையைக் கரண்ட மகுடம் அணி செய்கிறது.

திருவானைக்கா, திருச்சி மாவட்டம்.

ஐங்கரன் : (படம் 24 a). ஆனைக்கா கோயிலில் வழிபாட்டில் உள்ள ஐங்கரன், சதுர பீடத்தின் மேலுள்ள பத்மாசனத்தில் நின்றுகொண்டிருக்கிறார். முறித்த தந்தத்தைத் தாங்கிய வலது மேற்கரமும், வரதமளிக்கும் கோலத்திலுள்ள வலது கீழ்க்கரமும், மோதகப் பாத்திரம் ஏந்திய இடது மேற்கரமும், பத்மாசனத்தில் உள்ள மழுவின் பிடியை வருடும் இடது கீழ் கரமுமாக நாற்கரங்களுடன் காட்சி அளிக்கிறார். அவரது இருகாதுகள், தும்பிக்கை, பூணூல் போன்று உடலைச் சுற்றியுள்ள அரவம், சற்றே இடப்பக்கம் சரிந்துள்ள வயிறு ஆகியவை இத்திருமேனியின் சிறப்பு அம்சங்கள். கி. பி. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது இத்திருமேனி ஆயினும், வட இந்திய கலிங்கச் சிற்பங்களையும், வங்கத்துச் சிற்பங்களையும் ஒத்திருக்கிறது.

சதுரங்கப் பட்டினம், செங்கல்பட்டு மாவட்டம்

அனுமன் : (படம் 24 b). திருமால் கோயிலில் வழிபாட்டில் உள்ள இத்திருமேனி கூப்பிய கரங்களுடன் நிற்கும் நிலையில் உள்ளது. தலை மயிர், பின்புறம் முடிபோன்று அமைக்கப்பட்டுள்ளது. ஆபரணங்களால் இச்சிலை அழகு பெறுகிறது. கி. பி. 15-ஆம் நூற்றாண்டுக் காலத்தைச் சேர்ந்த இத்திருமேனி, விஜய நகர மன்னர் காலத்திய வேலைப்பாடுகளை நினைவூட்டுகிறது.

ஓவியங்கள் : (படம் 25). காகித அட்டையில் தாவர வண்ணங்களில் 'கிராதார்ஜுனிய' கதையைக் குறிக்கும் ஓவியம் வரையப்பட்டுள்ளது. பார்த்தனுக்குப் பாசுபதம் வழங்கும் சிவபிரானைப் போற்றும் முனிவர்களும், திசைக் காவலர்களும் தேவ மாதர்களும், ஓவியத்தின் மேற் பகுதியில் சித்திரிக்கப்பட்டுள்ளனர். இடது மேற் கோடியில் வேடன் உருக் கொண்ட சிவபிரானும், பார்த்தனும் வில், அம்பு ஆகியவற்றால் போர் புரியும் காட்சி காணப்படுகிறது. வேட்டுவ மகள் வடிவில் உள்ள பார்வதி இறைவனை அணைந்து நிற்கிறாள். கிரீடமணிந்து, கீழ் நோக்கிய முடியும், மேல் நோக்கிய கரங்களும், இடத்தோளில் காண்டீபமும், தூக்கிய இடது காலும் கொண்ட பார்த்தன், தன் தவத்தைக் குலைக்க எண்ணி தன்னைச் சுற்றியுள்ள தேவ கன்னிகைகளை மதியாது, மரத்தினடியில் தவம் செய்யும் காட்சி சித்திரிக்கப்பட்டுள்ளது. சிவபிரான், பார்த்தனுக்கு நான்கு கரங்களுடன் காட்சி தருகிறார். மானும், மழுவும் ஏந்திய மேலிரு கரங்களும், அபய, வரத மளிக்கும் கீழிரு கைகளும் வரையப்பட்டுள்ளன. கூப்பிய கரங்களுடன், முழந்தாளிட்டு பார்த்தன் பாசுபதம் பெறுகிறான். குள்ளச்சிறுபூதம் இடையில் காணப்படுகிறது. சிவபிரானின் வலப் பக்கம், திருமகளுடன் கூடிய திருமால் காட்சியளிக்கிறார். ஓவியத்தின் கீழ்ப் பகுதியில் யானைகளும், காட்டுப் பன்றிகளும், வேடர்களும் வரையப்பட்டுள்ளன. வேடன் ஒருவன் யானையின் மீது அம்பை எய்வது போலவும், இரு வேடர்கள் காட்டுப் பன்றி ஒன்றைத் தூக்கிச் செல்வது போலவும் சித்திரங்கள் காணப்படுகின்றன. கேரளப் பாணியில் உள்ள இவ்வோவியம் கி. பி. 18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

மர வேலைப்பாடுகள் : (படம் 15). தமிழகத்துக் கோயில் தேர்களை அணி செய்யும் நுண்ணிய மர வேலைப்பாடுகள் உலகப் புகழ் பெற்றுள்ளன. ஆயினும்

கி. பி. 15-ஆம் நூற்றுண்டைய நுண்ணிய மரவேலைப்பாடமைந்த கதவுகள் இன்னும் சில கோயில்களில் காணப்படுகின்றன. இம்மாதிரியான கதவுகள், மதுரை சொக்க நாதர் கோயிலிலும், அழகர் மலைக் கோயிலிலும், திருப்பரங்குன்றம் சுப்பிரமணியர் கோயிலிலும் காணப்படுகின்றன.

2-கல்வெட்டுகள்

இந்திய அரசின் கல்வெட்டுத் துறையினர் சென்ற எண்பது ஆண்டுகளாகத் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கல்வெட்டுகளைப் படியெடுத்து வந்துள்ளனர். தமிழகத்திலிருந்து மட்டும் இதுவரையில் இருபத்தையாயிரத்துக்கும் மேல் கல் வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. அவைகளில் ஆறுயிரம் கல்வெட்டுகளின் முழுவாசகங்கள் அச்சாகியுள்ளன. மீதமுள்ள சுமார் இருபதனுயிரம் கல்வெட்டு கள் பதிப்பிக்கப்படவேண்டும். இதுவரையில் படியெடுக்கப்பட்ட தல்லாது இன் னும் பல ஆயிரம் கல்வெட்டுகள் படியெடுக்கப்பட வேண்டும்.

கல்வெட்டுத் துறையிலே பணியாற்றிய முன்னோர்களெல்லாம் தமிழக வர லாற்றை அறிந்துகொள்ளக் கூடிய சில முக்கியமான கல்வெட்டுகளை மட்டுமே படி யெடுத்து வந்தனர். தமிழகத்தின் முழுமையான வரலாற்றைத் தெரிந்து கொள்ள வேண்டுமெனில் அத்துணை கல்வெட்டுகளையும் படியெடுக்க வேண்டுவது மிகவும் இன்றியமையாததாகும்.

இதை மனதிற்கொண்டு, தமிழ்ப் புலவர் திரு. சா. கணேசன் அவர்களால் அரசுக்கு, ஒரு திட்டம் பணிந்தனுப்பப்பட்டது. அதில்,

(அ) ஊர் வாரியாகக் கல்வெட்டுகள் படியெடுத்தல்,

(ஆ) கல்வெட்டாய்வாளர்களால் இதுவரையில் படியெடுக்கப்பெற்ற கல் வெட்டுகளைச் சரிபார்த்தல், படியெடுக்கப்பெறாத கல்வெட்டுகளைப் படியெடுத்தல்,

(இ) ஊர் வாரியாகக் கல்வெட்டுகளை அச்சிடுதல்,

(ஈ) அச்சிடுவதற்காக இத்துறையிலேயே ஒரு அச்சுப் பொறி அமைத்தல்

ஆகியவைகள் குறிக்கப்பெற்றிருந்தன.

அத்திட்டத்தை ஏற்றுக்கொண்டு, அதற்குவேண்டிய அலுவலர்களையும் மற்ற சாதனங்களையும் அரசு அனுமதித்துள்ளது. செயல்முறையாக, முதன்முதலில் சென்னைமாநகரில் கல்வெட்டுப் படியெடுக்கும் பணி துவங்கப்பட்டது. இதுவரையில் படியெடுக்கப்பெறாத மொத்தம் 225 கல்வெட்டுகள் படியெடுக்கப்பெற்றன. அவை களில் 71 கல்வெட்டுகள் திருவல்லிக்கேணியிலிருந்தும், 88 கல்வெட்டுகள் மயிலாப் பூரிலிருந்தும் படியெடுக்கப்பெற்றன.

மயிலாப்பூரிலிருந்த பல கோயில்கள் கி. பி. 16-ஆம் நூற்றுண்டின் இறுதிப் பகுதியில் சீர்குலைக்கப்பெற்றிருக்க வேண்டும் என கல்வெட்டுகள் மூலம் தெரிய வருகிறது. சாந்தோமில் தங்கியிருந்த போர்த்துகீசியரால் சில கோயில்கள் அழிக்கப் பட்டிருக்கக் கூடும். விசயநகரப் பேரரசர் இராமராயர் பெரும்படையுடன் சாந்தோமுக்கு வந்து, கோயில்களுக்கு மேலும் அழிவேற்படாத வகையில் தடுத்து நிறுத்தினுர் என்ற வரலாற்றுச் செய்தியை இங்கு நினைவில் கொள்ளல் தகும்.

மயிலைக் கபாலீச்சுரர் கோயில், அம்மன் சன்னதியில் காணப்பெறும் பல கல்வெட்டுகள் திரிசூலம் கோயிலைச் சார்ந்தவைகளாகக் காணப்படுகின்றன. அவை களுள் ஒன்று கி. பி. 13-ஆம் நூற்றுண்டில் ஆட்சி புரிந்த மூன்றும் குலோத்துங்க சோழனின் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட அரசியல் கலகங்களைப் பற்றிக் குறிப்பிடு கிறது.

மயிலை, மாதவப்பெருமாள் கோயிலிலிருந்து மூன்று கல்வெட்டுகள் படியெடுக் கப்பெற்றன. அவைகளில் ஒன்று கி பி. 11-ஆம் நூற்றுண்டில் ஆட்சி செய்த சோழப் பேரரசன் இராஜாதிராஜனைச் சார்ந்தது. அது "திருவாலீசுரமுடையார்" என்ற பெருமானைக் குறிக்கிறது. மயிலையிலுள்ள வாலீசுரர் கோயில் கி. பி. பதினேராம் நூற்றுண்டிலேயே ஒரு பெரிய கோயிலாக இருந்திருக்க வேண்டும் என்பதை இக்கல்வெட்டு உறுதிப்படுத்துகிறது. இக்கோயிலில் காணப்பெறும் மற்ருெரு கல்வெட்டு 'அண்ணன் பல்லவராயன்' என்பானைக் குறிப்பிடுகிறது. இவன் இரண்டாம் இராஜாதிராஜனின் படைத்தளபதியாக இருந்து பாண்டியர்களையும், சிங்களர்களையும் வீழ்த்தியதை இங்கு நினைவில் கொள்ளல் தகும்.

திருவாலீசுரர் கோயிலிலிருந்து மட்டும் இத்துறை, பதினைந்து கல்வெட்டுகளைப் படியெடுத்துள்ளது. அவைகளுள் ஒன்று மிகவும் முக்கியமானதாகும். ஏனெனில், அது. கி. பி. பன்னிரண்டாம் நூற்றுண்டில் ஆட்சி செலுத்தியவனும், தாராசுரம் கோயிலை எடுப்பித்தவனுமான இரண்டாம் இராஜராஜனின் காலத்தில் பொறிக்கப் பெற்றுள்ளது. அக்கல்வெட்டு திருவான்மியூர் எம்பெருமானை "மருந்தாண்டார்" எனக் குறிப்பிடுகிறது,

மயிலாப்பூரிலுள்ள விருபாக்ஷர் கோயிலிலிருந்து இருபது கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. ஜடாவர்மன் சுந்தரபாண்டியனின் பதின்மூன்றும் ஆட்சி ஆண்டிலோ அல்லது குலசேகரனின் பதின்மூன்றும் ஆட்சியாண்டிலோ பொறிக்கப் பட்டுள்ள ஒருகல்வெட்டு, "திருப்பூம்பாவை நாயனுர்" பற்றிக் குறிப்பிடுகிறது. நால்வருள் ஒருவரான திருஞானசம்பந்தர் மயிலையம்பதிக்கு வருகை தந்தபோது அவரால் உயிர்ப்பிக்கப்பெற்ற பூம்பாவையை இது குறிக்கிறது. விருபாக்ஷர் கோயிலில் காணப்பெறும் மற்ருெரு கல்வெட்டு கி. பி. 15-ஆம் நூற்றுண்டில் ஆண்ட விசயநகரப் பேரரசர் தேவராயரைச் சார்ந்ததாக உள்ளது.

காரணீச்சுரர் கோயிலிலிருந்து இருபது கல்வெட்டுகள் படியெடுக்கப் பட்டுள்ளன. இங்கு கிடைக்கப்பெற்ற கல்வெட்டுகளிலிருந்து பஞ்சநதிவாணன் நீலகங்கரையன் என்ற குறிசில் கி. பி. 12-ஆம் நூற்றுண்டில் சோழப் பேரரசின் கீழ் சென்னைப் பகுதியை ஆண்டு வந்திருக்கிறன் என்று உணரமுடிகிறது. மேலும்,

சென்னையில் எடுப்பிக்கப்பட்ட கோயில்களைப் பற்றியும், புது குடியிருப்புகள் ஏற்படுத்தப்பட்டது பற்றியும் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. சென்னையில் படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகள் அனைத்தும் அச்சாகிவிட்டன.

இதனை அடுத்து, கன்னியாகுமரி மாவட்டத்தில் கல்வெட்டு ஆய்வு தொடங்கப் பெற்றது. திருவிதாங்கூர் தொல்பொருள் ஆய்வுத்துறையினர் சுமார் 600 கல்வெட்டுகளை இப்பகுதியில் படியெடுத்திருக்கின்றனர். அவைகளில் 309 கல்வெட்டுகள் அச்சாகி உள்ளன. மற்ற கல்வெட்டுகள் அனைத்தும் இன்னம் அச்சாகவில்லை. திருவிதாங்கூர் தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் அவர்களைத் தொடர்பு கொண்டு கேட்டபொழுது அக்கல்வெட்டுப் படிகள் யாவும் நல்ல நிலையில் இல்லை என்று தெரிய வந்தது. எனவே இத்துறையினர் கன்னியாகுமரி மாவட்டம் அனைத்தும் மேற்பார்வையிட்டனர். இம்மாவட்டத்தில், இத்துறையினரால் 699 கல்வெட்டுகள் படியெடுக்கப் பெற்றன. அவைகளில் 150 கல்வெட்டுகள் அச்சாகி உள்ளன.

இத்துறையால், மேற்கூறியனவற்றை அல்லாது தமிழ் நாட்டின் மற்ற பகுதிகளிலும் பல முக்கியமான கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. அவைகள் பின்வருமாறு :

இருளப்பட்டி, (படம் 26) அரூர் வட்டம், தர்மபுரி மாவட்டம்.

1. ஒரு நடுகல்லின் மீது பொறிக்கப்பட்டிருக்கும் இக்கல்வெட்டு கி. பி. நான்கு, ஐந்தாம் நூற்றாண்டைச் சார்ந்த தமிழ், வட்டெழுத்து வரிவடிவத்தில் பொறிக்கப் பெற்றுள்ளது. இது, படையெடுத்துத் தாக்க வந்த எதிரியை முறியடிக்கச் சென்ற கங்க அரசனுக்கு, உதவியாக இருந்த பாண அரசனின் வீர மரணத்தைப் பற்றிக் குறிக்கிறது. இக்கல்வெட்டு விண்ணவர்மனின் 3-ஆம் ஆட்சி ஆண்டில் எழுதப்பெற்றுள்ளது.

2. கி.பி. நான்கு, ஐந்தாம் நூற்றாண்டைச் சார்ந்த தமிழ், வட்டெழுத்து வரி வடிவத்தில், ஒரு நடுகல்லின் மீது எழுதப் பெற்றுள்ள இக்கல்வெட்டு இரண்டு வீரர்களின் வீர மரணத்தைப் பற்றிக் குறிக்கிறது. முதலாமவன் பெயர் விண்ணப்பேரேனாதி. அவன் விஜயமங்கலத்து அரசன் என்றும், உழமுதுகன் என்பானின் மகன் என்றும், பாண அரசனின் படைத்தளபதியென்றும் குறிக்கப்பெறுகிறான். இரண்டாமவன் விண்ணப்பேரேனாதியின் படைத் தளபதியான கொற்றந்தைகோடன் என்பானாவான். மேலே கூறப்பட்டுள்ள கல்வெட்டில் காணப்படும் போரில் தான் இவ்விருவர்களும் வீரமரணம் அடைந்திருக்கவேண்டும்.

நவலை, தர்மபுரி மாவட்டம்.

1. ஒரு நடுகல்லின் மீது பொறிக்கப்பட்டுள்ள இவ்வட்டெழுத்துக் கல்வெட்டு சிவமாறனின் மூன்றாம் ஆட்சி ஆண்டைச் சார்ந்ததாகும். இது பெருமலை நாட்டு மன்னன் கந்தவான்னதியரையரால், பெருமன் கோடல் என்ற கோட்டை பிடிபட்ட போது கொட்டி உண்ணி என்பான் உயிர் துறந்ததைக் குறிக்கிறது.

கிளி ஏரி, நவலை வட்டம், தர்மபுரி மாவட்டம்.

1. நடுகல்லின் மீதுள்ள வட்டெழுத்துக் கல்வெட்டான இது பூங்குடி வடுகன் என்பான் வடவல்லூர் என்னுமிடத்தில் குதிரை மீது வந்த ஒருவரைத் தாக்கியபோது இறந்ததைக் குறிக்கிறது. கோய்லூர் நாடு, வேளாள நாடு, கோவூர் நாடு, எயில் நாடு, புறமலை நாடு, அதியனூர் நாடு போன்ற பலநாடுகள் கைப்பற்றப்பட்டதைக் குறிக்கிறது. நடுகல்லில் ஒரு குதிரையின் உருவமும், ஒரு வீரனின் உருவமும் பொறிக்கப்பட்டு உள்ளன.

2. கி. பி. 9-ஆம் நூற்றுண்டைச் சார்ந்த கன்னட எழுத்துக்களால், நடுகல் மீது பொறிக்கப்பட்டுள்ள இக்கல்வெட்டு, வீரநோளிம்பராஜனின் பதினைந்தாவது ஆட்சியாண்டைச் சேர்ந்ததாகும்.

சின்ன கௌண்டன் பட்டி, நவலை வட்டம், தர்மபுரி மாவட்டம்.

கி. பி. 9-ஆம் நூற்றுண்டின் எழுத்தமைதியுடைய கன்னட எழுத்துக்களால் நடுகல் மீது பொறிக்கப்பட்டுள்ள இக்கல்வெட்டு வீரநோளிம்பராஜனின் ஆட்சிக் காலத்தைச் சார்ந்ததாகும். வீரன் ஒருவனின் நினைவாகக் குளம் ஒன்று தோண்டப் பெற்றதைக் குறிக்கிறது.

திருவொற்றியூர், செங்கல்பட்டு மாவட்டம்.

1. ஆதிபுரீச்சுரர் கோயில், நந்தித் தூணில் காணப்பெறும் கி. பி. 9, 10-ஆம் நூற்றுண்டைச் சார்ந்த இக்கல்வெட்டு, ஷர்ஜரையரின் ஆட்சிக் காலத்தைச் சார்ந்தது. ஷர்ஜரையரின் மனைவியும், சக்திவர்ம காடுவெட்டிப் பெருமானடிகளின் மகளுமான கொண்ட மகாதேவி திருவொற்றியூர் மகாதேவர் கோயிலுக்கு ஈழவிளக்கு ஒன்றையும், நுத்தாவிளக்கு ஒன்று எரிப்பதற்காக 90 ஆடுகளையும் அளித்ததைக் குறிக்கிறது.

2. அதே நந்தித் தூணில் காணப்பெறும் இக்கல்வெட்டு கோஇராஜகேசரி வர்மனின் 3-ஆவது ஆட்சி ஆண்டைச் சார்ந்தது. கோயிலில் சில நிவந்தங்களுக்காக அளிக்கப்பட்ட கொடையைக் குறிக்கிறது.

3. அதே நந்தித் தூணில் காணப்பெறும் இக்கல்வெட்டு கோப்பரகேசரிவர்மன் முதலாம் பராந்தகனின் 40-ஆவது ஆட்சி ஆண்டைச் சார்ந்தது. திருவொற்றியூர் மகாதேவர் கோயிலில் திருநந்தா விளக்கொன்று எரிப்பதற்காக சோழ நாட்டின் பகுதியான வடகரைப் பொய்கை நாட்டில் உள்ள ஆலையூரைச் சார்ந்த பிராந்தகன் பிரம்மஸ்ரீராஜன் என்பவர் 90 ஆடுகள் அளித்ததைக் குறிக்கிறது.

வள்ளிஎறிச்சில், தாராபுரம் வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம்.

கோவை மாவட்டம், தர்மபுரி வட்டத்திலுள்ள வள்ளிஎறிச்சில் என்னும் ஊரில் உள்ள மாந்தாளீச்சுரம் கோயிலிலிருந்து இதுவரையில் படியெடுக்கப்பெருத பத்து வட்டெழுத்துக் கல்வெட்டுகளும், ஐந்து தமிழ்க் கல்வெட்டுகளும் இத்துறையால் முதன் முறையாகப் படியெடுக்கப்பெற்றன. இக்கோயிலின் திருச்சுற்றுலையில்

காணப்பெறும் தாய்மார் எழுவர், ஜேஷ்டை, முருகன், திருமால், விநாயகர் ஆகிய சிற்பங்களைக் காணும்போது, கி. பி. 9, 10, 11-ஆம் நூற்றாண்டுகளில் இவ்வூர் மிக முக்கியத் தலமாக இருந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது.

பத்து வட்டெழுத்துக் கல்வெட்டுகளுள், ஒன்று கி. பி. 1004-இல் தென் கொங்கு நாட்டின் அரசு கட்டிலேறின முதலாம் கொங்குச் சோழ மன்னன் கோ கலிமூர்க்க விக்கிரம சோழனது பதினேழாம் ஆட்சி ஆண்டில் பொறிக்கப் பெற்றுள்ளது. இக்கல்வெட்டு இக்கோயிலின் முகமண்டபம் எடுப்பிக்கப் பெற்றதைக் குறிக்கிறது. அதே கோயிலில் காணப்பெறும் மற்றொரு வட்டெழுத்துக் கல்வெட்டு, வீரியம் என்ற ஊரைச் சேர்ந்தவளும், வில்லியன் நீலன் விக்கிரமாதித்தன் என்பானின் மனைவியுமான தூறநீலி என்பாளால் ஒரு கிணறு தோண்டப் பெற்றதைக் குறிக்கிறது.

இக்கோயிலிலிருந்து படியெடுக்கப்பெற்ற மற்றொரு கல்வெட்டு கோனாட்டான் வீரசோழனின் முப்பத் தெட்டாம் ஆட்சி ஆண்டைச் சார்ந்ததாகும். இக்கல்வெட்டில் காணப்பெறும் இம்மன்னனது நீண்ட ஆட்சி ஆண்டு, கி. பி. 1045 முதல் 1080 வரையில் தென்கொங்கு நாட்டை ஆட்சி புரிந்த மன்னன் யாவன் என்று இதுவரையில் தெரியாமல் இருந்ததைப் போக்கி, இம்மன்னன்தான் ஆட்சி புரிந்திருக்க வேண்டும் என்பதைத் தெளிவு படுத்துகிறது. இம்மன்னன் கோ கலிமூர்க்க விக்கிரமவர்மனை அடுத்தும், அபிமானசோழ இராஜாதிராஜனுக்கு முன்பாகவும் ஆட்சி புரிந்திருக்க வேண்டும்.

மற்றொரு வட்டெழுத்துக் கல்வெட்டு, பெரும்பாலும் சமணப் பள்ளியாக இருக்கக் கூடிய வீரசங்காதப் பெரும் பள்ளியைக் குறிக்கிறது. வீரசங்காதப் பெரும் பள்ளி இங்குக் குறிக்கப் படுவதானது மிக மிக முக்கியமானதாகும். வள்ளிஎறிச்சிலுக்கு அண்மையிலுள்ள பிரமியம் என்னும் ஊர் வீரசங்காதச் சதுர்வேதிமங்கலம் என்று கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகிறது. ஈரோட்டுக்கு அணித்தே உள்ள, சமணர்களின் முக்கியத் தலமான விஜையமங்கலத்தில் காணப்பெறும் கல்வெட்டு ஒன்றில் வீரசங்காதப் பெரும்பள்ளி குறிக்கப்பெறுகிறது. கொங்கு நாட்டின் இப்பகுதி வீரசங்காதன் என்பவனால் ஆண்டபொழுது சதுர்வேதிமங்கலமும் சமணப் பள்ளியும் அவனுடைய பெயரால் ஏற்படுத்தப் பெற்றிருக்கலாம். ஆனால் இம்மன்னன் யாவன் என்பது தெரியவில்லை. இப்பகுதியை ஆண்ட பிற்கால மன்னர்கள் தங்களுக்குக் கலிமூர்க்க என்ற பட்டத்தைச் சூட்டிக் கொண்டதால், சமண மதத்தைத் தழுவிய ஒரு களப்பிர அரசனாக இவன் இருக்கலாம். மேலே கூறப்பட்ட முடிவு ஏற்புடைத்தது எனில், தமிழகத்தின் இருண்ட காலம் என வருணிக்கப்படுகின்ற களப்பிரரின் காலத்தை அறிந்து கொள்ளக் கூடிய ஒரு வாய்ப்பு ஏற்படும். அடுத்த ஒரு வட்டெழுத்துக் கல்வெட்டு, திருப்பாண்டிக் கொடுமுடியைச் சேர்ந்த ஒருவரால் இக்கோயிலுக்கு ஒரு நுந்தா விளக்கு எரிப்பதற்கு பொன் வழங்கப் பெற்றதைக் குறிக்கிறது. இக்கோயிலின் முகமண்டபத்திலே உள்ள தூண்களில் காணப்பெறும், கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தமிழ்க் கல்வெட்டுகள், மூன்று பெரியார்களால் இத்தூண்கள் கொடையாக அளிக்கப்பெற்றன என்பதைக் குறிக்கின்றன. அவர்களில் இருவர், தற்பொழுது சித்தோடு என வழங்கும் சிற்றிலோடு என்னும் ஊரைச் சேர்ந்தவர்கள். அவர்கள் வெள்ளாள வகுப்பில் காட கிளையைச் சார்ந்தவர்கள்,

மூன்றுமவர் முத்தூரைச் சேர்ந்தவர். அவர் வெள்ளாளர் வகுப்பில் மணிய என்ற கிளையைச் சார்ந்தவர். அவர்களில் முன்னவர் பெயர் மாராயன் தென்னவன் மூவேந்தவேளான். இரண்டாமவரின் பெயர் உத்தமசோழ தமிழவேளான் என்னும் ஆடன் புளியன். மூன்றுமவரின் பெயர் உத்தமசோழ மும்முடிசோழமாராயன் என்னும் ஆடன் புளியன்.

முன்னரே கூறப் பெற்றதைப் போன்று, இக்கோயிலின் முகமண்டபம் கலிமூர்க்க விக்கிரமசோழனின் காலத்தில் கட்டப் பெற்றதாகும். இம்மண்டபத்தில் காணப்பெறும் தூண்களும் பெரும்பாலும் அதே காலத்தில் கொடையளிக்கப் பெற்றிருக்க வேண்டும். இக்கோயிலின் நந்தி மண்டபத்தில் காணப்பெறும் கி. பி. 11-ஆம் நூற்றுண்டைச் சார்ந்த தமிழ்க் கல்வெட்டு, மொடம்பொதுவன் என்ற மங்கையின் நன்மைக்காக, மாந்தாளீச்சுரம் கோயிலில் ஒரு நுந்தா விளக்கு எரிப்பதற்கு பொதுவன் பாவை என்பாளும், பாவை படாரி என்பாளும் வள்ளிஎறிச்சில் ஊர்ச் சபையாரிடம் ஏழு பொற்காசுகளையும் பதினைஞ்சு கழஞ்சு பொன்னையும் அளித்ததைக் குறிக்கிறது.

1. மாந்தாளீச்சுரம் சிவன் கோயில் முகமண்டபத்தின் முகட்டில், தென் அங்கணம் நடுவில் உள்ள கல்லில் காணப்பெறும் இக்கல்வெட்டில் இடைப் பகுதி மட்டுமே உள்ளது. இது கி.பி. பத்தாம் நூற்றுண்டு வட்டெழுத்தில் பொறிக்கப்பெற்றுள்ளது. கிணறு அமைப்பதற்கு ஆறு கழஞ்சு பொன்னும், இரண்டு நுந்தா விளக்கு எரிப்பதற்கு முக்கழஞ்சே இரு மஞ்சாடி பொன்னும் கொடையாக அளிக்கப் பெற்றதைக் குறிக்கிறது. திருப்பாண்டிக் கொடுமுடி என்னும் ஊர் இக்கல்வெட்டில் குறிக்கப்படுகிறது.

2. இக்கோயில் முகமண்டபத்தின் தெற்குப் பக்கச் சுவரில் வெளிப்பக்கத்தில், காணப்பெறும் ஒரு வட்டெழுத்துக் கல்வெட்டில் இடைப் பகுதி மட்டும் உள்ளது. போர்வீரர்களைப் பற்றியும், குதிரைக்குப் பயறு ஒதுக்கப் பெற்றது பற்றியும் குறிக்கிறது.

3. இக்கோயில் முகமண்டபத்தின் தென்கிழக்கில் உள்ள அறையின் முகட்டில், நடுவில் காணப்பெறும் கி. பி. பதினொன்றும் நூற்றுண்டைச் சார்ந்த வட்டெழுத்துக் கல்வெட்டில் இடைப் பகுதி மட்டும் உள்ளது. ஆறு கழஞ்சு பொன் கொடையாகப் பெற்று குறிப்பிட்ட அளவு நெல் அளக்க சிலர் ஏற்றுக் கொண்டதைக் குறிக்கிறது.

4. அதே கோயில் தெற்குப் பக்கச் சுவரில், உட்பக்கத்தில், கி. பி. பத்து, பதினொன்றும் நூற்றுண்டைச் சார்ந்த வட்டெழுத்துக் கல்வெட்டில் இடைப்பகுதி மட்டும் உள்ளது. வீரசங்காதப் பெரும்பள்ளியைப் பற்றிக் குறிக்கிறது.

5. அதே கோயில் முகமண்டபத்தின் தெற்குச் சுவரில், வெளிப் பக்கம் உள்ள இக்கல்வெட்டில் கடைப் பகுதி மட்டுமே உள்ளது. அளிக்கப் பெற்ற அறக் கொடையைச் சரிவர நடத்திவராவிட்டால் தாமே [ஊர்ச் சபையே] அதை வசூலித்து நடத்து

வதாக ஏற்றுக் கொண்டதைக் குறிக்கிறது. மேலும், இக்கல்வெட்டை ஆமுருடையான் என்பவன் வெட்டுவித்தான் என்பதையும் தெரிவிக்கிறது.

6. அதே சிவன் கோயில், சுப்ரமண்யர் சன்னதியின் நிலைவாசல் மேற்கல்வில் உள்ள இக்கல்வெட்டு, கி. பி. பதினொன்றும் நூற்றாண்டு வட்டெழுத்தில் பொறிக்கப் பெற்றுள்ளது. மாந்தாளீச்சுரத்தின் முகமண்டபம் கோ கலிமூற்க விக்கிரமசோழ தேவரின் ஏழாம் ஆட்சி ஆண்டில் எடுப்பிக்கப்பெற்றதென்பதைக் குறிக்கிறது. இம் மண்டபத்தைக் கட்டியவரின் பெயர் காணப்பெறவில்லை.

7. மாந்தாளீச்சுரம் முகமண்டபத்தின் முகட்டில், வட அங்கணத்தில், பாவு கல்லில் பொறிக்கப் பெற்றுள்ள வட்டெழுத்துக் கல்வெட்டில், கடைப் பகுதி மட்டும் உள்ளது. வீரசங்காதப் பெரும்பள்ளியையும், வழிபாட்டாளர் ஒருவருக்கு, உண்ணு வதற்கு உணவு அளிப்பதற்கு வேண்டி கொடை அளித்ததையும் குறிக்கிறது.

8. அதே கோயில், முக மண்டப நடு அங்கணத்தின் நடுவில் மேல் பாவு கல்லில் உள்ள இக்கல்வெட்டு, கி. பி. 11-ஆம் நூற்றாண்டு வட்டெழுத்தில் பொறிக்கப் பெற்றுள்ளது. வீரியம் என்ற ஊரைச் சார்ந்த வில்லியன் நீலன் விக்கிரமாதித்தன் என்பவரின் மனைவி தூற நீலி என்பவள் ஒரு கிணற்றையும், நீர் கழி பாதையையும் ஏற்படுத்தியதைக் குறிக்கிறது.

9. அதே கோயில் அந்தராளத்தின் வடக்குப் பக்கச் சுவரில் காணப்பெறும் இக்கல்வெட்டில் முற்பகுதி மட்டுமே உள்ளது. இது கி.பி. பதினொன்றும் நூற்றாண்டு வட்டெழுத்து அமைதியில் பொறிக்கப்பெற்றுள்ளது. இக்கல்வெட்டு கோனாட்டான் வீரசோழப்பெருமானடிகளின் பெயரையும் அவனுடைய முப்பத்தெட்டாம் ஆட்சி யாண்டையும் குறிக்கிறது.

10. அதே கோயில், நந்தி மண்டபத்தின் முகட்டில் கிழக்குப் பக்கம் உள்ள கல்லில், கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு தமிழ் எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ள இக்கல்வெட்டு, திருக்காமக்கோட்டமுடைய பெரிய நாச்சியாற்கு, வழிபாட்டிற்காக, ஊர் மக்கள், அரிசி கொடுத்ததைக் குறிக்கிறது.

11. அதே கோயில், அதே மண்டபத்தின் முகட்டில் தெற்குப் பக்கம் உள்ள கல்லில், கி. பி பன்னிரண்டாம் நூற்றாண்டு தமிழில் பொறிக்கப் பெற்றுள்ள இக்கல் வெட்டு, பொதுவம்பாவை, பாவைபடாரி ஆகிய இரண்டு பெண்களும், வள்ளி எறிச்சிலைச் சார்ந்த மங்கையான மொடம்பொதுவன் என்ற பெண்ணின் நலனுக்காக மேற்படி கோயிலில் ஒரு நுந்தாவிளக்கு எரிப்பதற்காக ஏழு பொற்காசுகளையும், பன்னிரு கழஞ்சு பொன்னையும் கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.

12. மாந்தாளீச்சுரம் முக மண்டபத்தின் தெற்குப் பக்கத் தூணில் உள்ள இக் கல்வெட்டு, கி பி. பதினொன்று அல்லது பன்னிரண்டாம் நூற்றாண்டு தமிழில் பொறிக்கப் பெற்றுள்ளது. சிற்றில்லோடு என்ற ஊரைச் சார்ந்தவனும், வெள்ளாள வகுப்பில் காட என்ற பிரிவைச் சார்ந்தவனுமான ஆடன் புளியன் என்னும் உத்தம

சோழ தமிழவேளான் என்பவர் கற்றூணைக் கொடையாகக் கொடுத்ததைக் குறிக்கிறது.

13. அதே கோயில், முகமண்டபத்தின் வடக்குப் பக்கத் தூணில் உள்ள இக் கல்வெட்டு கி. பி. பதினொன்று அல்லது பன்னிரண்டாம் நூற்றாண்டு தமிழில் பொறிக்கப்பெற்றுள்ளது. சிற்றில்லோடு என்ற ஊரைச் சார்ந்தவனும், வெள்ளாள வகுப்பில் காட என்ற பிரிவைச் சேர்ந்தவனுமான ஆடன் புளியன் என்ற உத்தம சோழ மும்முடிச்சோழமாராயன் என்பவர் கற்றூணைக் கொடையாகக் கொடுத்ததைக் குறிக்கிறது.

14. அக்கோயில் முகமண்டபத்தின் வடக்குப் பக்கத் தூணில் உள்ள தமிழ்க் கல்வெட்டான இது, சித்தூரைச் சார்ந்தவனும், வெள்ளாள வகுப்பில் மணிய பிரிவைச் சார்ந்தவனுமான விந்தன் மாராயன் என்ற தென்னவன் மூவேந்தவேளான் என்பவர் கற்றூணைக் கொடையாகக் கொடுத்ததைக் குறிக்கிறது.

ஈரோடு, ஈரோடு வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம்.

இத்துறையானது, ஈரோட்டிலிருந்து ஐந்து கல்வெட்டுகளைப் படியெடுத்தது. ஒரு கல்வெட்டு சேர மன்னன் கோ இரவிகோதையின் காலத்தைச் சேர்ந்தது. இக் கல்வெட்டு, ஆண்டு குறிக்கப்பெற்ற இடத்தில் அழியப் பெற்றுள்ளது. அதன் காரணமாக, இதை கி. பி. 848 அல்லது 948-ஐச் சேர்ந்தது என்று கொள்ள வேண்டியுள்ளது. ஈரோட்டைச் சேர்ந்த வஞ்சி வெண்தாழி என்னும் தென்னவன் பொறையன் என்பான் தென்னூர் மக்களிடமிருந்து நிலம் பெற்றுக்கொண்டதையும், தன்னுடைய பெயரால் தாழி ஏரி என்ற ஏரியை வெட்டுவதற்காக, ஈரோட்டுச் சபையாரிடம் ஐம்பது கழஞ்சு பொன் அளித்ததையும் குறிக்கிறது. ஆண்டு ஒன்றுக்கு, ஒரு கலம் நெல் வட்டியாகப் பெற்று அக்குளத்தைப் பராமரிக்க வேண்டுமெனவும் குறிக்கிறது.

கி. பி. ஒன்பது, பத்தாம் நூற்றாண்டில், கொங்கு நாடு சேர மன்னர்கள் ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டது என்பது பற்றியும், அதனால் ஏற்பட்ட அரசியல் விளைவுகள் பற்றியும் அறிந்துகொள்வதற்கு இக்கல்வெட்டு பெரிதும் துணைபுரிகிறது. இக்கல்வெட்டு அங்கு காணப்படுகிறது என்பதை இத்துறைக்குத் தெரியப்படுத்தியவர் திரு. இராசு என்னும் தமிழ்ப் புலவராவார், மற்றைய கல்வெட்டுகள் இங்கு உள்ள திருமாலின் கோயிலில் காணப்படுகின்றன. ஒரு கல்வெட்டு, தாயன்சாத்தன் என்பவனால் வாயில் அமைக்கப் பெற்றதைக் குறிக்கிறது. மற்றொரு கல்வெட்டு சாள கிராமத்திலுள்ள காஞ்சிகுறியைச் சேர்ந்த ஒரு அந்தண நங்கை, அரங்களி கரங்கி வளஞ்சியத்தைச் சார்ந்த பன்னெட்டான் ஆச்சன் என்பானின் நலத்துக்காக ஈரோட்டிலுள்ள பள்ளி கொண்டருளுகின்ற தேவருக்குக் கொடையளித்ததைக் குறிக்கிறது.

இக்கல்வெட்டுகள் மட்டுமல்லாது, பல்லவர் காலத்தைச் சேர்ந்த திருமால், வாயிற்காப்போர் ஆகிய சிலைகளும், சோழர் காலத்தைச் சேர்ந்த மூன்று சிற்பங்களும் இந்நகரில் இருப்பதும் கண்டுணரப் பெற்றது. ஈரோட்டில் பல்லவர்காலச் சிற்ங்கள் காணப்படுகிறதென்பது, கொங்கு நாட்டில் பல்லவர் கலைத் தொடர்பிருந்தது என்பதற்கு ஆதாரமாக அமையும்.

1. விஷ்ணு கோயில் வாயில் நிலையில் உள்ள இக்கல்வெட்டு கி. பி. பத்தாம் நூற்றாண்டு தமிழ் அமைதியில் பொறிக்கப்பெற்றுள்ளது. தாயஞ்சாத்தன் என்பான் நுழைவாயிலைக் கட்டுவித்ததைக் குறிக்கிறது.

2. கி. பி. பத்தாம் நூற்றாண்டைச் சார்ந்த கன்னட எழுத்தில் உள்ள இக்கல்வெட்டு மேற்குறித்த நுழைவாயில் கட்டுவித்ததைப் பற்றியே குறிக்கிறது,

3. அதே இடத்தில் காணப்பெறும், கி. பி. பத்தாம் நூற்றாண்டு தமிழ்க் கல்வெட்டு, ஈரோட்டில் உள்ள பள்ளிகொண்ட தேவர்க்கு சாளகிராமத்தைச் சார்ந்த காஞ்சிகுறியில் வாழ்ந்த ஒரு அந்தண நங்கை அளித்த கொடையைக் குறிக்கிறது.

4. பெருமாள் கோயில் வடக்குப் பக்க நிலையிலுள்ள, கி. பி. பத்தாம் நூற்றாண்டின் எழுத்தமைதியுடைய தமிழ்க் கல்வெட்டான இது, பள்ளி அருளுகின்ற தேவர்க்கு நாற்பது நாழி எடையுள்ள வெண்கல மணியொன்றை, அரங்களி கரவியைச் சேர்ந்த பந்நாட்டான் ஆச்சனின் நன்மைக்காகக் கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.

5. நகரின் ஏரிக்கு அருகில் காணப்பெறும் இக்கல்வெட்டு ஈரோடு நகரைச் சார்ந்த புலவர் செ. இராசு என்பவரால் கண்டுபிடிக்கப்பெற்றது. இது சேர மன்னன் கோ இ ரவிகோதையின் ஆட்சிக் காலத்தைச் சார்ந்தது. சக வருடம் 770 (கி.பி. 848) ஐச் சேர்ந்தது. ஈரோட்டைச் சேர்ந்த தென்னவன் பொரையன் எனப்படும் வஞ்சி வெண்தாழி என்பார் தென்னூர் மக்களிடமிருந்து நிலம் பெற்றுக் கொண்டு, ஈரோட்டு ஊர்ச்சபையிடம் ஐம்பது கழஞ்சு பொன் கொடுத்து, தன் பெயரால் தாழி ஏரி எனப்படும் குளம் வெட்டச்செய்தார் என்பதையும், ஒரு கழஞ்சுப் பொன்னுக்கு ஒரு கலம் நெல் வீதம் ஐம்பது கழஞ்சுப் பொன்னுக்கு வட்டியாகக் கிடைத்த ஐம்பது கலம் நெல், குளத்தைப் பராமரிப்பதற்காக உபயோகிக்கப்பட்டது என்பதையும் குறிக்கிறது. கி. பி. ஒன்பது அல்லது பத்தாம் நூற்றாண்டுகளில் கொங்கு நாட்டில் ஆண்ட சேரர்களின் ஆட்சி நிலைமையைத் தெளிவாக விளக்குவதால் இக்கல்வெட்டு வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது ஆகும்.

கோட்டூர், சென்னை நகரம்.

எல்லையம்மன் கோயில் அருகில் உள்ள ஒரு கல்லின் மீது காணப்பெறும் இக்கல்வெட்டு, ரௌத்ரி ஆண்டில் மேட்டுப் பாளையத்தைச் சேர்ந்த மக்களாலும், நெசவாளர்களாலும், வியாபாரிகளாலும் கோயிலுக்குக் கொடை அளித்ததைக் குறிக்கிறது.

சாளுவங்குப்பம், மாமல்லபுரம், செங்கல்பட்டு மாவட்டம்.

சாளுவங்குப்பத்திலுள்ள அதிரணசண்ட மண்டபத்தின் முன் உள்ள தரையில் காணப்பெறும் இக்கல்வெட்டு முதலாம் இராஜராஜனின் காலத்தைச் சார்ந்தது. ஆமூர் கோட்டத்து, ஆமூர் நாட்டு திருவிழிச்சிலிலுள்ள அதிரண சண்டேச்சுரர் கோயிலில் நந்தா விளக்கொன்று எரிப்பதற்கு ஆடுகள் அளித்ததைக் குறிக்கிறது.

பெரும்புலிவாக்கம், வட ஆற்காடு மாவட்டம்.

1. அகத்தீஸ்வரர் கோயில் அர்த்த மண்டபத் தூண் ஒன்றில் காணப்பெறும் இக்கல்வெட்டு முதலாம் இராஜேந்திரனின் 30-ஆவது ஆண்டைச் சார்ந்தது. முதலாம் இராஜேந்திரனின் பட்டத்து அரசியான செம்பியன் மாதேவி எனப்படும் மலையன் குந்தவை, பெரும்புலிப்பாக்கத்துத் திருஅகத்தீஸ்வரமுடையார்க்கு, நாள் ஒன்றுக்கு திருஅமுதுக்காக ஆறுநாழி அரிசி கொடை அளித்ததைக் குறிக்கிறது.

2. அதே கோயிலின் முன்னுலுள்ள மண்டபத்தூண் ஒன்றில் காணப்பெறும் இக்கல்வெட்டு, வைரமேகவர்மனின் மூன்றாவது ஆண்டைச் சார்ந்தது. விஜய நல்லூழான் கண்டன் என்பவர் பெரும்புலிப்பாக்கம் திருஅகத்தீஸ்வரமுடையார்க்குத் திருநந்தாவிளக்கு ஒன்று எரிப்பதற்கு ஊராரிடம் இருபது கழஞ்சு பொன் கொடையாக அளித்ததையும், அதைப்பெற்றுக்கொண்ட ஊர் மக்களும் ஒவ்வொரு நாளும் ஒரு உரி எண்ணெ அளித்து இக்கொடையை நிறைவேற்றினர்கள் என்பதையும் குறிக்கிறது.

3. அதே கோயிலில் உள்ள கல்வெட்டான இதில், இடைப்பகுதி மட்டுமே உள்ளது. அகத்தீஸ்வரம் உடைய பிராஞர்க்குத் திருப்பலிகொட்டு நடத்துவதற்கு பெரும்புலிப்பாக்கம் ஊராரிடம் ஒப்படைக்கப்பெற்ற கொடையைக் குறிக்கிறது.

4. அதே கோயிலில் மேலும் எட்டுக் கல்வெட்டுகள் படியெடுக்கப்பெற்றன. அவைகள் என்ன கூறுகின்றன என்பதைச் சரிவர உணர முடியாத நிலையில் உள்ளன

மாங்காடு, ஸ்ரீபெரும்புதூர் வட்டம், செங்கற்பட்டு மாவட்டம்.

வைகுந்தப் பெருமாள் கோயில் உண்ணாழியின் வடமேற்கு அடிப்பகுதியில் காணப்பெறும் இக்கல்வெட்டு, முதலாம் இராஜேந்திரனின் 23-ஆவது ஆண்டைச் சார்ந்தது. மாங்காடு நாட்டைச் சேர்ந்த புலியூர்க் கோட்டத்திலுள்ள மாங்காட்டு கலிகேசரி விஷ்ணுகிருஹத்துத்தேவர் கோயிலில் திருநந்தா விளக்கு ஒன்று எரிப்பதற்கு, ஊர் இடையன் மாடன் கருவகோஞன் என்பவனிடம் 90 ஆடுகள் கொடையாக அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது. மாங்காட்டிற்கு அழகிய சோழ நல்லூர் என்னும் மற்றொரு பெயரும் இருந்ததாகத் தெரியவருகிறது.

சிவன்வாயில், திருவள்ளூர் வட்டம், செங்கற்பட்டு மாவட்டம்.

கரியமாணிக்க வைகுண்ட வரதராஜர் கோயில் அர்த்தமண்டபத்தின் முகட்டில் காணப்படும் கி. பி. 8, 9-ஆம் நூற்றாண்டுத் தமிழ் கல்வெட்டான இது, குமாரிச் சாணி என்னும் அந்தண நங்கையால் ஸ்ரீவைகுண்டதேவர் ஸ்ரீகோயில் என்னும் விஷ்ணு கோயில் ஒன்று எடுக்கப் பெற்றதைக் குறிக்கிறது.

வடிவுள்ளமங்கலம், வடிவுள்ளமங்கலம் வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம்

ஒரு நீண்ட சதுர கல்லின் (நடுகல்லின் பக்கக் கல்) மேல் பொறிக்கப்பட்டுள்ள இக்கல்வெட்டு, வேட்டுவக் குடியைச் சார்ந்த அழகன் கள்ளி என்பான், பூர்வதேசமும், கங்கையும், கடாரமும் கொண்ட முதலாம் இரா

ஜேந்திர சோழதேவர் காலத்தில் நடந்த போரில் வீரமரணம் எய்தியதைக் குறிக்கிறது. இவ்வீரனின் உருவமும் கல்லில் செதுக்கப்பட்டுள்ளது.

செங்கம்பள்ளி, நாமக்கல் வட்டம், சேலம் மாவட்டம்.

குமாரபாளையம் வாய்க்கால் படிக்கட்டுகளிலும், அந்த வாய்க்காலின் மேல் கட்டப்பட்டுள்ள பாலத்தின் நடுத்தூணிலும், பதின்மூன்றும் நூற்றுண்டைச் சார்ந்த தமிழ்க் கல்வெட்டுகள் நான்கு படியெடுக்கப்பட்டுள்ளன. அவை வடகரை மழநாட்டில் உள்ள அயிரூரைப் பற்றியும், திருகூடல் மகாதேவரைப் பற்றியும், குறுநாக நாடு பற்றியும், கவுணியன் சுவரன் மாறன் பற்றியும் குறிக்கின்றன.

மாமல்லபுரம், செங்கற்பட்டு மாவட்டம்.

1. தலசயனப் பெருமாள் கோயில் திருச்சுற்றின் தெற்குச் சுவரில், பதின்மூன்று, பதிநான்காவது நூற்றுண்டைச் சார்ந்த தமிழ் எழுத்தமைதியுடைய கல்வெட்டான இதில் முற்பகுதி மட்டும் உள்ளது. இது இராஜநாராயண சம்புவராயரின் பதினொன்றுவது ஆட்சிக் காலத்தில், சகஆண்டு 127(6)-ல் பொறிக்கப் பெற்று உள்ளது.

2. அதே சுவரில் கி.பி. பதின்மூன்று, பதிநான்காவது நூற்றுண்டைச் சார்ந்த தமிழ் எழுத்தமைதியுடைய கல்வெட்டான இதிலும், முற்பகுதி மட்டுமே உள்ளது. இதில் மாமல்லபுரம், ஆமூர்க்கோட்டத்திலுள்ள ஆமூர் நாட்டிலிருந்ததாகக் குறிக்கப்படுகிறது.

3. அதே சுவரில் கி. பி. 13, 14-ஆம் நூற்றுண்டைச் சார்ந்த தமிழ் எழுத்து அமைதியுடைய கல்வெட்டான இதில், நடுப்பகுதி மட்டும் உள்ளது. இக்கல்வெட்டு நாயக்க மன்னன் திக்கம நாயக்கனின் முதலிகளில் அப்பரசர் மகன் சோமண்ணனைப் பற்றிக் குறிக்கிறது.

4. அதே சுவரில் கி. பி. 13, 14-ஆம் நூற்றுண்டைச் சார்ந்த தமிழ் எழுத்து அமைதியுடைய கல்வெட்டான இதில், நடுப்பகுதி மட்டுமே உள்ளது. இது இக்கோயிலில் விளக்குக்கு எண்ணெ இடுவதற்காக அளிக்கப்பட்ட கொடையைப் பற்றிக் குறிக்கிறது.

5. அதே திருச்சுற்றின் கிழக்குப் பக்கச் சுவரில் காணப்பெறும் இக்கல்வெட்டு, (மாமல்லபுரமான) ஜநநாதபுரத்தைக் குறிக்கிறது.

தருவை, திருநெல்வேலி மாவட்டம்

திருநெல்வேலி மாவட்டத்தில், திருநெல்வேலி - அம்பாசமுத்திரம் பேருந்து சாலையில், திருநெல்வேலியிலிருந்து மேற்கே ஆறு கல் தொலைவில் தருவை என்னும் சிற்றூர் அமைந்துள்ளது. இவ்வூரில் வாழவல்லபாண்டீச்வரர் கோயில் என்றழைக்கப்படும் சிவன் கோயில் ஒன்று உள்ளது. இக்கோயில் அகத்திய மாமுனிவரால் கட்டப்பெற்றது என்று இங்குள்ள மக்கள் கூறுகின்றனர். பிற்கால பாண்டியர்கள்

காலத்தைச் சார்ந்த மொத்தம் 19 கல்வெட்டுகள் இக்கோயிலின் மீது பொறிக்கப் பெற்றுள்ளன. அவைகளில் ஆறு கல்வெட்டுகள் பாண்டிய மன்னன் இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தையும், ஆறு கல்வெட்டுகள் முதலாம் மாறவர்மன் குலசேகரன் காலத்தையும், ஒரு கல்வெட்டு சடையவர்மன் வீரபாண்டியனின் காலத்தையும் சார்ந்தவையாகும்.

பெரும்பாலும் எல்லா கல்வெட்டுகளுமே, அக்கோயிலுக்கு அளிக்கப்பெற்றுள்ள கொடையைப் பற்றியே குறிப்பிடுவனவாக உள்ளன. இக்கோயிலின் முகமண்டபத்திலே காணப்பெறும் ஒரு கல்வெட்டு, மலைமண்டலத்திலுள்ள காலடி என்னும் ஊரைச் சார்ந்த கூபகராயன் என்னும் இரவிசங்கரன் என்பானால், இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் *(கி.பி. 1238-1253)* வாழவல்லபாண்டீச்சுரம் கோயில் எடுப்பிக்கப்பெற்றது என்பதைக் குறிக்கிறது. முதலாம் மாறவர்மன் குலசேகரனின் காலத்தில் (கி. பி. 1268-1312) பொறிக்கப்பெற்றுள்ள மற்றொரு கல்வெட்டு, சில பெரியோர்களால் இக்கோயிலிலுள்ள க்ஷேத்ரபாலருக்கு, அர்த்தசாம பழனம் நடத்துவதற்காக ஒவ்வொரு மாதமும் ஒரு மரக்கால் நெல் அளிக்கப் பெற்றதைக் குறிக்கிறது. மற்றொரு கல்வெட்டின் மூலம், இவ்வூருக்கு கூபகராய நல்லூர் என்ற ஒரு பெயர் வழங்கி வந்தமை புலனாகிறது. அது கூபகராயனின் பெயரால் ஏற்பட்டதாக இருக்கலாம். இவ்வூர், தென்கரை நாட்டின் ஒரு பகுதியாக விளங்கியது என்பதும் கல்வெட்டு மூலம் உணர முடிகிறது.

1. வாழவல்ல பாண்டீச்சுரர் கோயில் அர்த்தமண்டபத்தின் தெற்குப் பக்கச் சுவரில் காணப்பெறும் இக்கல்வெட்டு, முதலாம் மாறவர்மன் குலசேகரனின் 27-ஆவது ஆண்டைச் (கி. பி. 1294) சார்ந்தது. சில சிவபிராமணர்களால் கோயிலுக்கு நிலம் விற்கப்பட்டதைக் குறிக்கிறது.

2. அதே கோயில் முகமண்டபத்தின் தெற்குப் பக்கச் சுவரில் காணப்பெறும் இக்கல்வெட்டு, முதலாம் மாறவர்மன் குலசேகரதேவனின் 7-ஆவது ஆண்டைச் (கி. பி. 1275) சார்ந்தது. க்ஷேத்ரபால பிள்ளையார் முன் அர்த்தசாமபழனம் நடத்துவதற்கு காலடி எழுத்தன், காலடி இரவியன், சீராமன், உய்யவந்தான் ஆகியோரால் அளிக்கப்பட்ட கொடையைக் குறிக்கிறது.

3. அதே கோயில் மகாமண்டபத்தின் தெற்குப் பக்கச் சுவரில் காணப்பெறும் இக்கல்வெட்டு, இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் 11-ஆவது ஆண்டைச் (கி. பி. 1249) சார்ந்தது. வாழவல்ல பாண்டிய ஈஸ்வரமுடையார் கோயில் நிமந்தக்காரர்களில் ஒருவரான ஆதிச்சநம்பி வாழவல்ல பாண்டியக் கோன் என்பவர் நாச்சியார்க்கு இரண்டு திருநந்தா விளக்குகள் கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.

4. அதே கோயில் மகாமண்டபத்தின் தெற்குப் பக்கச் சுவரில் காணப்பெறும் இக்கல்வெட்டு, தென்கரை நாட்டிலுள்ள விக்கிரம பாண்டியச் சதுர்வேதிமங்கலம் எனப்படும் ஓமனூரில் உள்ள வீரபத்ரன் மடம், தக்ஷிணக் கோணக மடம் ஆகியவற்றைச் சார்ந்த துறவிகளுக்குத் திருவமுது படைப்பதற்காக இரவி சங்கரன் ஐயன் மழவராயர் என்பவர் பத்து மா நிலம் இறையிலியாக அளித்ததைக் குறிக்கிறது.

5. அதே கோயிலில் கிழக்குப் பக்கச் சுவரின் இரண்டாவது குமுதத்தில் காணப்பெறும் இக்கல்வெட்டு, மாறவர்மன் முதலாம் குலசேகரனின் 25-ஆவது ஆண்டைச் சார்ந்தது. தென்கரை நாட்டிலுள்ள கூபகராயநல்லூர் எனப்படும் தருவையின் வாழவல்ல பாண்டீச்சுரமுடைய கோயிலின் முப்பது வட்டத்துத் தேவ கன்மிகள், சோமண்ணமடயிலி வானதாயபன்மன் என்பவரால் எழுந்தருளிவிக்கப் பட்ட விநாயகருக்கு ஒவ்வொரு நாளும் ஒரு நாழி அரிசி திருவமுது படைக்க ஏற்பாடு செய்ததைக் குறிக்கிறது.

6. அதே கோயில் மணிமண்டபத்தின் கிழக்குப் பக்கச் சுவரில் காணப் பெறும் இக்கல்வெட்டு "எம்மண்டலமும் கொண்டருளிய" என்னும் பட்டம் பெற்ற முதலாம் மாறவர்மன் குலசேகரதேவரின் 18-ஆம் ஆண்டைச் (கி.பி. 1286) சார்ந்தது. குலவன் மாதேவிச் சதுர்வேதிமங்கலத்திலுள்ள சுப்ரமண்யர் கோயிலுக்குத் திருநந்த வனம் ஒன்று அமைப்பதற்கு அரசன் அளித்த கொடையைக் குறிக்கிறது.

7. அதே கோயில் மகாமண்டபத்தின் கிழக்குப் பக்கச் சுவரில் காணப்பெறும் இக்கல்வெட்டு, முதலாம் மாறவர்மன் குலசேகரதேவரின் 12-ஆம் ஆண்டைச் (கி. பி. 1280) சார்ந்தது. வாழவல்லபாண்டீச்சுரம் உடையார்க்கு அத்யயனம் செய்வற்காக பெருமாள் விக்கிரம பாண்டியதேவர் என்பவர் ...... ரிகு பெருமாள் பட்டன் என்பவருக்கு நிலம் கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.

8. அதே கோயில் மகாமண்டபத்தின் தெற்குப் பக்கச் சுவரில் காணப்பெறும் இக்கல்வெட்டு பொன், நூல்தறி, உணவுப் பொருட்கள் ஆகியவற்றின் மீதும், மக்கள், பொற்கொல்லர், தேவரடியார் ஆகியோரின் மீதும் விதிக்கப்பட்ட வரிப்பணத்தை மேற்படி கோயில் தானத்தாரிடம், கோயில் சீரமைப்பு வேலைகளுக்காகக் கொடையாக அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.

9. அதே கோயில் மகாமண்டபத்தின் வடக்குப் பக்கச் சுவரில் காணப்பெறும் இக்கல்வெட்டு முதலாம் குலசேகரதேவரின் ஆட்சிக் காலத்தைச் சார்ந்தது. காலடியைச் சேர்ந்த இரவிசங்கரன் என்னும் மழவராயன் என்பவர் வாழவல்ல பாண்டீச்சுரருக்கும், பள்ளியறை நாச்சியார்க்கும், சிறுகாலைச் சந்தி பூசையில், தயிர், வெற்றிலை, பாக்கு, நந்தா விளக்குக்கு எண்ணெ ஆகியவை அளிப்பதற்கு காசு கொடை அளித்ததைக் குறிக்கிறது.

10, அதே கோயில் மகாமண்டபத்தின் தெற்குப் பக்கச் சுவரில் காணப்பெறும் இக்கல்வெட்டு, அரசனிடம் முறையிட்ட விண்ணப்பதாரர்களின் · சாட்சியங்களைத் தீர ஆராய்ந்த பின், ஒழுகு பண்ணை நிலத்திற்கு விக்கிரமச் சதுர்வேதிமங்கலத்து ஏரியிலிருந்து நீர்ப்பாசனத்திற்குத் தண்ணீர் விடவேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டதையும், மேற்படி ஒழுகு பண்ணை நிலம் வாழவல்ல பாண்டீச்சுரருக்கு, இறையிலி தேவதானமாக, சங்கரன்அழகன், சங்கரன்சொக்கன், அழகன்திருநட்டன் ஆகியோரால் வழங்கப்பட்டது என்பதையும் குறிக்கிறது.

11. அதே கோயில் கிழக்குச் (வாயிலின் இடது பக்கம்) சுவரில் காணப்பெறும் இக்கல்வெட்டு இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் ஐந்தாவது ஆண்டைச்

(கி.பி. 1243) சார்ந்தது. வாழவல்ல பாண்டீச்சரமுடையார்க்குத் திருப்படிமாற்றுக்காக அளிக்கப்பட்ட கொடையைக் குறிக்கிறது.

12. அதே கோயில் கிழக்குப் பக்கச் சுவரில் காணப்பெறும் இக்கல்வெட்டு இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் நான்காவது ஆண்டைச் (கி. பி. 1242) சார்ந்தது. வாழவல்ல பாண்டீச்சுரம் உடையார்க்குத் திருப்படிமாற்றுக்கு அளிக்கப்பட்ட கொடையைக் குறிக்கிறது.

13. அதே கோயில் கிழக்குப் பக்கச் சுவரில் காணப்பெறும் இக்கல்வெட்டு சடையவர்மன் வீரபாண்டியனின் ஆட்சிக் காலத்தைச் சார்ந்தது. கோயிலுக்கு அளிக்கப்பட்ட சில கொடைகளைக் குறிக்கிறது.

14. அதே கோயில் முகமண்டபத்தின் கிழக்குப் பக்கச் சுவரில் காணப்பெறும் இக்கல்வெட்டு முதலாம் மாறவர்மன் குலசேகரனின் 13-ஆம் ஆண்டைச் (கி.பி. 1281) சார்ந்தது. வாழவல்ல பாண்டீச்சுரம் உடையார்க்கு நிலம் கொடையாக அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.

15. அதே கோயில் முகமண்டபத்தின் கிழக்குப் பக்கச் சுவரில் காணப்பெறும் இக்கல்வெட்டு இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் ஏழாவது ஆண்டைச் (கி. பி. 1245) சார்ந்தது. வாழவல்ல பாண்டீச்சுரம் உடையார்க்குத் திருநந்தா விளக்கு ஒன்று கொடையாக அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.

16. அதே கோயில் மகாமண்டபத்தின் தெற்குப் பக்கச் சுவரில் காணப்பெறும் இக்கல்வெட்டு, மாறவர்மன் ...... காலத்தைச் சார்ந்தது. கோயிலுக்கு நிலம் விற்றுக் கொடுக்கப்பட்டதைக் குறிக்கிறது.

17. அதே கோயில் மகாமண்டபத்தின் தெற்குப் பக்கச் சுவர்க் குமுதத்தில் காணப்பெறும் இக்கல்வெட்டு, மாறவர்மன் குலசேகரதேவரின் 18-ஆம் ஆண்டைச் (கி.பி. 1286) சார்ந்தது. பெருமாள் விக்கிரம பாண்டியதேவர் என்பவரால் கோயிலுக்குச் சில கொடைகள் அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.

18. அதே கோயில் மகாமண்டபத்தின் தெற்குப் பக்கச் சுவரில் காணப்பெறும் இக்கல்வெட்டு, மாறவர்மன் சுந்தரபாண்டியனின் நான்காவது ஆண்டைச் சார்ந்தது. வாழவல்ல பாண்டீச்சுரம் உடையார்க்குத் திருப்படிமாற்று முதலியவை நடைபெறுவதற்கு நிலம் கொடையாக அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.

19. அதே கோயில் மகாமண்டப நுழைவாயிலின் இடது பக்கத்திலுள்ள கிழக்குப் பக்கச் சுவரில் காணப்பெறும் இக்கல்வெட்டு, கோனேரின்மை கொண்டான் காலத்தைச் சார்ந்தது. வாழவல்ல பாண்டீச்சுரம் உடையார் கோயில் சிவபிராமணர்களுக்கு திருவமுது அளிக்க நிலம் கொடையாக அளிக்கப்பட்டதைக் குறிக்கிறது.

20. வரதராஜப்பெருமாள் கோயில் உண்ணாழியின் வடக்குப் பக்கச் சுவர்க் குமுதத்தில் காணப்பெறும் இக்கல்வெட்டு, கோனேரின்மை கொண்டான் என்பவரின்

காலத்தைச் சார்ந்தது. கோயில் சுவாமியின் திருப்படிமாற்றுக்கு நிலம் கொடையாக அளிக்கப்பெற்றதைக் குறிக்கிறது.

வைத்தீஸ்வரன் கோயில், தஞ்சை மாவட்டம்.

வைத்தீஸ்வரன் கோயில் சிவன் கோயிலிலிருந்து 24 கல்வெட்டுகள் படி எடுக்கப்பெற்றன. பெரும்பாலும் எல்லா கல்வெட்டுகளுமே இக்கோயிலுக்கு நிலம் வழங்கப்பட்டதைப் பற்றியும், கொடையளிக்கப் பெற்றது பற்றியும் குறிக்கின்றன. கல்வெட்டுகளில் இவ்வூர், புள்ளிருக்கும் வேளூர் என்றும், வடகரை இராஜாதிராஜ வளநாட்டிலுள்ள திருவாலி நாட்டின் ஒரு பகுதியென்றும் குறிக்கப் பெறுகிறது. இங்கு காணப்பெறும் கல்வெட்டுகளில் சோழ மன்னன் முதலாம் குலோத்துங்கன், காடவரையன் கோப்பெருஞ்சிங்கன், விசயநகர மன்னன் கிருஷ்ணதேவராயர் ஆகியோர் குறிக்கப் பெறுகின்றனர்.

சாத்தமங்கலம், வட ஆற்காடு மாவட்டம்.

இவ்விதழின் மூன்றும் பகுதியில் இவ்வூர்க் கல்வெட்டுகளைப் பற்றிய கட்டுரை ஒன்று எழுதப் பெற்றுள்ளது.

1. இரண்டாம் நந்திவர்மனின் 14-ஆம் ஆண்டைச்சார்ந்த இக்கல்வெட்டு ஒரு கற்பாறையின்மேல், தமிழ் எழுத்தில் எழுதப் பெற்றுள்ளது. ஊர்த் தலைவரான இளையார் அப்பர் நந்தி என்பார் சமணப் பள்ளியைச் சாராத துறவிகளுக்கு, நாள் ஒன்றுக்கு, ஒரு கழஞ்சு பொன்னுக்கு ஒரு உழக்கு அரிசி, என்ற விகிதத்தில் உணவு அளிப்பதற்காக ஏழு கழஞ்சு பொன் கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.

2. அதே கற்பாறையில் காணப்பெறும் மற்றொரு தமிழ்க் கல்வெட்டு இரண்டாம் நந்திவர்மனின் 33-ஆம் ஆண்டைச் சார்ந்தது. இவ்வூரிலுள்ள குளத்தைப் பராமரித்து வருவதற்காக ஊர்ச்சபையார் அளித்த அறக்கொடையைக் குறிக்கிறது.

3. அதே கற்பாறையில் பொறிக்கப் பெற்றுள்ள மற்றொரு தமிழ்க் கல்வெட்டு நந்திப் போத்தரசரின் 56-ஆம் ஆண்டைச் சார்ந்தது. விழுக்கத்தைச் சேர்ந்த ஜினரையர் என்பாரின் மகள் பூண்டமூப்ப, சமணப் பள்ளி ஒன்றுக்கு பதினேழு கழஞ்சு பொன்னைக் கொடையாக அளித்ததைக் குறிக்கிறது.

4. அதே கற்பாறையில் பொறிக்கப் பெற்றுள்ள தமிழ்க் கல்வெட்டான இது கம்பவர்மனின் 6-ஆம் ஆண்டு பொறிக்கப் பெற்றுள்ளது. காடகதியரையர் என்பாரின் மகள் மாதவி என்பாள் கோயில் திருப்பணி செய்ததையும், முகமண்டபம் எடுப்பித்ததையும், பாழி ஒன்றைத் திருப்பணி செய்ததையும், யக்ஷி யக்காபடாரிக்கு ஒரு கோயில் எடுப்பித்ததையும் குறிக்கிறது.

5. அதே கற்பாறையில் பொறிக்கப் பெற்றுள்ள மற்றொரு தமிழ்க் கல்வெட்டு பார்த்திவேந்திரவர்மனின் 11-ஆம் ஆண்டைச் சார்ந்தது. வெண்குன்றக் கோட்டத்திலுள்ள வெண்குன்ற நாட்டைச் சேர்ந்த ஒரு ஊரார் சில நிலத்தைக் கொடையாக அளித்து, அதை, அதே கோட்டம், அதே நாட்டிலுள்ள சாத்தமங்கலத்து ஊர்ச் சபையாரிடம் ஒப்படைத்ததைக் குறிக்கிறது.

6. அதே கற்பாறையில் பொறிக்கப்பெற்றுள்ள தமிழ்க் கல்வெட்டான இது கோ இராஜராஜகேசரி என்னும் முதலாம் இராஜராஜனின் 12-ஆம் ஆண்டைச் சேர்ந்தது. சாத்தமங்கலத்துப் பள்ளியைச் சேர்ந்தவனும், நந்தித் தேவரின் மாணுக்கனுமான பலதேவபடாரன் என்பான் விமலஸ்ரீ என்னும் தீர்த்தப்பள்ளி ஆழ்வாருக்கு ஒரு நுந்தாவிளக்கு எரிப்பதற்காகத் தனது ஊரான சாத்தமங்கலத்திலிருந்து நிலம் இறையிலியாக அளித்ததைக் குறிக்கிறது. சாத்தமங்கலம், வெண்குன்றக் கோட்டத்திலுள்ள வெண்குன்ற நாட்டைச் சார்ந்தது என்று குறிக்கப்படுறது.

7. அதே பாறையில் காணப்பெறும் இக்கல்வெட்டு மிகவும் அழிந்த நிலையில் உள்ளது.

8. சந்திரநாத சுவாமி கோயிலில் உள்ள ஒரு பாறையின் மீது காணப்படும் இக்கல்வெட்டு, பார்த்திவேந்திரபன்மரின் மூன்ரும் ஆண்டைச் சார்ந்தது. வெண்குன்ற நாட்டைச் சேர்ந்த சாத்தமங்கலத்திலுள்ள விஷ்ணுகிருஹத்துக்குப் பூசைகள் நடத்துவதற்காக நிலம் அளிக்கப் பெற்றதைக் குறிக்கிறது.

செப்பேடு, கொற்கை.

கொற்கைக் கிராமத்தார் ஒருவரிடம் செப்பேடு ஒன்று உள்ளது. இதில் சக ஆண்டு 1411-ம், கொல்லம் ஆண்டு 733-ம் குறிக்கப்பட்டுள்ளன. கொற்கையில் உள்ள வெற்றிவேல் நங்கைக் கோயில் பூசைக்காக நிலம் அளித்ததைக் குறிக்கிறது. கொடையளித்தவர்கள், மதிவரோதயநல்லூர் (கொற்கை) மக்கள் ஆவர். இக்கொடையைக் குறைவற நிறைவேற்றும் பொறுப்பு பூதனுதன் காலிங்கராயகம்பன் என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டதாகக் குறிக்கிறது. விஜயராகவ நாயக்கர் காலத்தில் இச்செப்பேடு எழுதப்பட்டிருக்கிறது. அதில் இம்மன்னனின் பெயரும், அவர் கீழ் உள்ள அதிகாரிகளின் பெயர்களும் குறிக்கப்பட்டுள்ளன. செப்பேட்டில் குறிக்கப்பட்டுள்ள சக ஆண்டும், கொல்லம் ஆண்டும் ஒன்றுக்கொன்று முரணுனவையாக உள்ளதால் இச்செப்பேடு உண்மையானதுதானு என்ற ஐயம் எழுகிறது.

வைகைக்கரை சேந்தன் கல்வெட்டு.

கி. பி. ஏழாம் நூற்ருண்டில் ஆட்சி புரிந்த பாண்டிய மன்னன் சேந்தன் காலத்திய ஒரு கல்வெட்டு, மதுரையில் வைகையாற்றங்கரையிலே பாதுகாப்பில்லாது கிடந்தது. எனவே, மத்திய அரசு கல்வெட்டுத் துறையைச் சார்ந்த தலைமைக் கல்வெட்டாய்வாளரிடம் தொடர்புகொண்டு, அக்கல்வெட்டு இருக்கும்படியான இடம் அறியப் பெற்றது. பின்னர் அக்கல்வெட்டை எடுத்துச்சென்று மதுரைக் கோயில் கலைக்கூடத்தில் பாதுகாப்பாக வைக்கும்படி மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொண்டதின் பேரில், இப்பொழுது மதுரைக்கோயிற் கலைக் கூடத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

3 - பாதுகாத்தல்

1. சேரர் கல்வெட்டுகள், ஆர்நாட்டார்மலை, புகளூர், திருச்சி மாவட்டம்

வரலாறு: புகளூருக்கு அருகில் உள்ள ஆர்நாட்டார்மலை என்ற குன்றில் இயற்கையாக அமைந்த பண்டைய குகைத்தளங்கள் இருக்கின்றன. அவற்றில் சமணப் பெரியார்கள் வாழ்ந்த தடயங்கள் உள்ளன. தமிழக வரலாற்றிற்கு இன்றியமையாத மிகவும் தொன்மையான கல்வெட்டுகள் இங்கே உள்ளன. இங்கு வாழ்ந்த சமணப் பெரியார்களுக்கு அமைத்த பள்ளிகளை இக்கல்வெட்டுகள் குறிக்கின்றன. இவற்றில் ஒன்று கோ ஆதன் செல்லிரும்பொறையின் மகன் பெருங்கடுங்கோன் என்றும், பெருங்கடுங்கோனின் மகன் இளங்கடுங்கோ என்றும், இளங்கடுங்கோ இளங்கோவான காலத்தில் யாற்றூரைச் சார்ந்த செங்காயபன் என்ற சமணப் பெரியாருக்கு பாழி அமைத்ததைக் குறிக்கிறது. தமிழ் நாட்டில், சங்ககாலத்தில் வாழ்ந்த சேர மன்னர்களுடைய பெயர்கள் இங்கு குறிப்பிடப் பட்டிருப்பது மிகமிகச் சிறப்பானதாகும். சேர மன்னர்களைப் பற்றி இதுவரை கிடைத்துள்ள மிகவும் தொன்மையான கல்வெட்டு இதுவே ஆகும்.

இங்குள்ள கல்வெட்டுகள் கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து, கி.பி. இரண்டாம் நூற்றாண்டு வரை உள்ள காலத்தைச் சார்ந்தவை. மலைமேல் இப்பொழுது முருகப் பெருமானின் கோயில் உள்ளது. இதற்கு, மலையின் கிழக்குப் பக்கத்திலிருந்து படிகள் அமைக்கப்பெற்றுள்ளன. இப்படிகளின் மீது ஏறி உயரே சென்றால் கோயிலை அடைவதற்கு பத்து படிகளுக்கு முன்னால் தென்புறமாக ஒற்றையடிப் பாதை ஒன்று மலை மீது செல்வதைக் காணலாம். இப்பாதை வழியே சென்றால் மலையின் தென் புறத்தில் இயற்கையாக அமைந்த ஒரு குகைத் தளத்தைக் காணலாம். இந்த தளத்தில், கல்லிலே வழவழப்பாகச் செதுக்கப்பெற்ற பல படுக்கைகளையும், அவற்றின் தலையில் எழுதப்பெற்றுள்ள தமிழ் எழுத்துக்களையும் காணலாம். இந்த குகைத் தளத்தின் மேலே உள்ள பாறையின் முகப்பில் சேர மன்னர்களைக் குறிக்கும் கல்வெட்டுகள் பொறிக்கப்பெற்றுள்ளன. நல்லியூர் பிட்டன், கொற்றன், கீரன், கருவூர் பொன் வாணிகன் அத்தி முதலிய பெயர்களும் இங்குக் காணப்படுகின்றன. குறும்புக்காரச் சிறுவர்களும், இதன் அருமை தெரியாதவர்களும் இந்தப் படுக்கைகளின் மீது செதுக்கியும், ஆபாசமான படங்களைக் கிறுக்கியும் கல்வெட்டுகளுக்கு அழிவு செய்து வந்தனர். காலப் போக்கினாலும் கல்வெட்டுகள் அழியத் தலைப்பட்டன. இக்குகைத் தளத்திலிருந்து பாறைகளின் ஊடே சென்றால் வடக்குப் புறத்திலுள்ள ஒரு இயற்கைக் குகைத்தளத்தை அடையலாம். அங்கும் பல படுக்கைகள் கல்லில் செதுக்கப்பெற்றுள்ளதைக் காணலாம். ஒன்றில் எழுத்துக்களும் உள்ளன. சுமார் 200 மீட்டர் நீளத்திற்கு இந்த குகைத் தளத்தை அடையும் பாதை மிகவும் சிறிய ஒற்றையடிப் பாதையாகவும், ஒரு புறம் உயர்ந்த பாறையும், மறுபுறம் செங்குத்தான சரிவும் உள்ளதாய் இருந்தது. பாதையும் வழுக்கும் இயல்புடையதாயிருந்தது. பள்ளி மாணவர்களும் இன்னும் பிறரும் எளிதில் இக்குகைக்குச் சென்று வரமுடியாது.

வரலாற்று சிறப்பு வாய்ந்த இக்குகைத் தளங்களையும், கல்வெட்டுக்களையும் பாதுகாக்க அரசு ஆணையின் மூலம் (அரசு ஆணை எண்: எம். எஸ். எண்: 1682, கல்வி-1966-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 6-ஆம் நாள்) 5000 ரூபாய் ஒதுக்கப்பட்டது.

பணி: கோயில் படிகளிலிருந்து தென்புற குகைத் தளத்திற்கு செல்லும் வழியில் உரிய இடங்களில் படிகள் அமைக்கப்பட்டன. தென்புறக் குகையை யாரும் எளிதில் சென்று அடைய முடியாதபடி இரும்புக் கம்பி வேலி போடப்பட்டது. கீழ்ப் புறத்தும் மேற்புறத்தும் கல்லாலான கட்டடம் ஒன்று எழுப்பப்பெற்றது. கதவு ஒன்று பொருத்தப்பட்டு பூட்டும் வகை செய்யப்பட்டது. குகைத் தளத்தை மூடிக் கிடந்த இடிபாடுகளும், குப்பைக் கூளங்களும் அகற்றப்பட்டன. கல்வெட்டுகள் எல்லாம் சுத்தம் செய்யப்பெற்றன. வரலாற்றுக் குறிப்புடைய பலகை ஒன்று அமைக்கப்பட்டது. வடபுற குகைத் தளத்தை அடையும் வழியில் கைப்பிடிகள் அமைக்கப்பட்டன. குகைத் தளத்தையும் யாரும் எளிதில் சென்று அடைந்துவிடாதவாறு காக்க இரும்புக் கம்பி வேலியும், கதவும் இடப்பட்டன.

2. ருத்திரபதி கோயில், கீழக்கடம்பூர், தென் ஆற்காடு மாவட்டம்.

வரலாறு: காட்டுமன்னார்குடியிலிருந்து ஆறு கல் தொலைவிலும், மேலக் கடம்பூரிலிருந்து இரண்டு கல் தூரத்திலும், கீழக்கடம்பூர் என்ற ஒரு சிற்றூர் உள்ளது. இவ்வூரில் ஒரு வயலின் நடுவே உள்ள பாழடைந்த சிவன் கோயில், இப்பொழுது ருத்ரபதி கோயில் என்று அழைக்கபடுகிறது. இக்கோயில் மிகவும் சிறப்பு வாய்ந்தது. பன்னிரெண்டாம் நூற்றாண்டைச் சார்ந்த தமிழ்க் கல்வெட்டுகள் இக்கோயிலில் உள்ளன. இவை சைவ நாயன்மார்களின் பெயர்களைக் குறிக்கின்றன

நிலைமை: இக்கோயில் பாழடைந்துள்ளது. உண்ணாழி, அர்த்த மண்டபம், மகாமண்டபம் ஆகிய பகுதிகள் உள்ளன. மகாமண்டபமும் விமானமும் கீழே விழுந்துள்ளன. இக்கோயிலைச் சுற்றி செடிகளும், புதர்களும் மண்டிக்கிடந்தன. கோயிலில் உள்ள கற்கள் இடம் பெயர்ந்துள்ளன. கோயில் அதிட்டானத்தில் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவை சைவ நாயன்மார்களின் பெயர்களாகும். ஆயினும் ஒரு நாயன்மார் சிலைகூட இப்பொழுது காணப்பட வில்லை.

கல்வெட்டிலுள்ள பெயர்கள் பின்வருமாறு:

1. குங்கிலியார்.
2. ஆருவாமுடையாண்டான்.
3. மாநக்கஞ்சாரர்.
4. ஆநாயாண்டார்.
5. உலகாண்டமூர்த்தி.
6. முருகாண்டார்.
7. அர்த்தநாரி.
8. திருநாளைப் போவார்.
9. திருக்குறிப்பு தொண்டர்.
10. தண்டிப் பெருமாள்.
11. . . . . . . புக்க தேவர்.
12. . . . .
13. பேயார்.
14. நீலநக்காண்டார்.
15. தேவேந்திரர்.
16. ஆனை உரித்தேவர்.
17. லிங்கம் புராணதேவர்.
18. புதன்.
19. சந்தியா நிருத்த தேவர்.
20. திருக்கண்ணப்பர்.
21. காலகாலதேவர்.
22. இரத சக்ரவர்த்தி.

கோட்டங்களில் அர்த்தநாரி, தக்ஷிணாமூர்த்தி, லிங்கபுராணதேவர், சந்தியா நிருத்ததேவர் ஆகிய சிற்பங்கள் உள்ளன.

ஒரு அழகிய கஜசம்காரர் சிலையும், ஒரு பழுதடைந்துள்ள கங்காதரர் சிலையும் அருகிலுள்ளன. ஆவுடையாரோடு கூடிய தாராலிங்கமும், ஒரு உருளை வடிவான லிங்கமும் காணப்படுகின்றன. சில சிற்பங்கள் களவு போய்விட்டதாகக் கூறப்படு கின்றது. அதே ஊரிலுள்ள பிள்ளையார் கோயிலில் இரண்டு சிற்பங்கள் மீட்டு வைக்கப்பட்டுள்ளன. அவைகள் ஊர்த்தவ தாண்டவர், கங்காள மூர்த்தி ஆகிய சிற்பங்களாகும்.

பணி: எண்: 61, கல்வி, தேதி 16-1-68; என்ற அரசு ஆணைப்படி இக் கோயிலைப் பாதுகாத்தலுக்கு ரூபாய் 1600 வழங்கப்பட்டுள்ளது. செடி கொடிகள் நீக்கப்பட்டு, கோவிலைச் சுற்றி முள்கம்பி வேலி போடப்பட்டுள்ளது. அறிவிப்புப் பலகை வைக்கப்பட்டுள்ளது.

3. கங்கைகொண்ட சோழீச்சுரம், கூழம்பந்தல், செங்கல்பட்டு மாவட்டம். (படம் 38, 39, 40)

காஞ்சிபுரத்திலிருந்து வந்தவாசி செல்லும் வழியில் சுமார் 15 கல் தொலைவில் கூழம்பந்தல் என்ற சிற்றூர் உள்ளது. இவ்வூர் கங்கைகொண்ட சோழபுரம் என்று கல்வெட்டுகளில் குறிக்கப்படுகிறது. ஆதலின் கங்கைகொண்ட சோழனாகிய முதல் இராஜேந்திர சோழன் காலத்தில் இவ்வூர் நிறுவப்பெற்று இருக்கவேண்டும். இந்த ஊரின் வழியாகத்தான் உக்கல் என்ற தொன்மைச் சிறப்பு வாய்ந்த ஊரை அடைய லாம். கூழம்பந்தல் என்னும் ஊரின் வடகிழக்கே கருங்கல்லாலான சிவாலயம் ஒன்று காணப்படுகிறது. ஊரின் மேற்கில் திருமால் கோயில் ஒன்றும், தென்மேற்கில் தன் இருக்கையிலிருந்து பெயர்ந்து வீழ்ந்து கிடக்கும் மாவீரர் சிலை ஒன்றும், ஊரின் தெற் கில் நின்ற நிலையில் நிற்கும் கொற்றவைச் சிலை ஒன்றும் இருக்கின்றன. இங்குள்ள கோயில்களில் மிகப்பெரியது சிவாலயமாகும். சிவாலயம் கங்கைகொண்ட சோழீச் சுரம் என்று கல்வெட்டுகளில் குறிக்கப்படுகிறது. இக்கோயிலை ஈசான சிவபண்டிதர் என்ற பெரியார் கட்டுவித்தார் என்று அறிகிறோம். விமானம் முழுவதும் கல்லால் ஆனது. அதே போன்று முன்மண்டபமும், மகாமண்டபமும் கருங்கல்லாலானவை. விமானத்தின் சுவர்களிலும், அதிட்டானத்திலும் சோழர், விஜயநகர அரசர்கள் காலத்திய கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இக்கோயில் பழுதடைந்து வழிபாடு இல்லாமலிருந்தது.

கோயிலின் நிலை: விமானத்தில் பல இடங்களில் பெரும் செடிகளும், மரங் களும் வளர்ந்து அவற்றின் வேர்கள் கட்டடத்திற்குள் நெடுந் தூரம் ஊடுருவி கட்டடத்தை பாழாக்கி இருந்தன. சிகரத்தின் மேற்புறம் பல கற்கள் கீழே விழுந் துபட்டமையால் செங்கல்லால் அப்பகுதியை மூடியிருந்தனர். மகாபத்மம் பல துண்டுகளாகச் சிதைக்கப்பட்டு கீழ் தரையில் சிதறிக் கிடந்தது. சிகரத்தில் உச்சி யில் புல் பூண்டுகள் முளைத்திருந்தன. அர்த்தமண்டபத்தின் மேல் தளம் பழு தடைந்து செடி கொடிகள் நிரம்பி இருந்தது. முன் மகாமண்டப பக்கச்சுவர்கள் மட்டும் மிகவும் சிதைந்த நிலையில் இருந்தன. மேல் தளம் முற்றிலும் அழிந்து

போயிற்று. மகாமண்டபத்தை அடைவதற்கு தென்புறத்தில் அமைக்கப்பட்டிருந்த படிக்கட்டுகள் பழுதடைந்திருந்தன. வாயிலின் இருமருங்கும் காத்து நின்ற வாயில் காவலர் சிலைகள் கீழே வீழ்ந்து உடைந்து கிடந்தன. மகாமண்டபத்தின் கிழக்கே சீரற்ற ஒரு பீடத்தின் மேல் நந்தி சாய்ந்த நிலையில் இருந்தது. இதைச் சுற்றிலும் திருச்சுற்று மதில் எழுப்பப்பட்டிருக்கவேண்டும். ஆனால் அதன் அடித்தளம் மட்டுமே எஞ்சி உள்ளது. இதன் கிழக்கே நின்ற நிலையிலும், வீழ்ந்த நிலையிலும் சிதறிக் கிடந்த பல தூண்களைக் கொண்ட மண்டபத்தின் அடிப்பகுதி இடிபாடுகளில் மறைந்து புல் பூண்டு நிறைந்து காணப்பெற்றது. கோயில் கோட்டங்களை அலங்கரித்த ஓரிரு சிற்பங்கள் ஊரின் பாதைகளில் கிடந்தன. பழுதடைந்து, வழிபாடின்றி, கேட்பார் அற்றுக் கிடந்த இக்கோயிலை, இத்துறை எடுத்துப் பாதுகாத்துப் பழுதுபார்க்க முனைந்தது. தமிழ்நாடு அரசு ஆணை எண்: 1234, கல்வி, நாள், 19-1-67, மேலும் அரசு ஆணை எண்; 652, கல்வி, நாள், 17-5-69 இதன்படி ரூ 20,000 இக்கோயில் பாது காப்பிற்காக அனுமதிக்கப்பட்டது.

மூன்று பகுதிகளாக பழுதுபார்க்கும் வேலை செய்யப்பெற்றது. முதல் பகுதி யில் விமானம் பழுதுபார்க்கப்பட்டது. விமானத்தின்மேல் இருந்த செடிகளும் மரங்களும் ரசாயனப் பொருள்கள் ஊற்றி அகற்றப்பட்டன. வேர்கள் ஊடுருவி சென்று இருந்ததால் கர்ணகூடங்களும், சாலைகளும் நீக்கப்பட்டு வேர்கள் நீக்கப் பட்டு, கர்ணகூடங்களும் சாலைகளும் சீராகவைக்கப்பட்டன. சிகரத்தின் மேற்குப் பகுதியில் இருந்த செங்கற்களை அகற்றி விட்டு அதற்குப் பதிலாக கருங்கற்களைச் செதுக்கி முன் போன்ற நிலைக்கு கொண்டுவரப்பட்டது. பல துண்டுகளாகச் சிதறிக் கிடந்த மகாபத்மம் ஒன்றுசேர்க்கப்பட்டு, பசையால் ஒட்டப்பட்டு சீர்திருத்தி அமைக்கப்பெற்றது. விமானத்தின் பல பகுதிகளில் இருந்த காரைச் சாந்துகள் நீக்கப்பட்டன. விமானம் சீராக்கப்பட்டது. அந்தராளத்தின் மேல் தளத்தில் உள்ள செடி கொடிகள் நீக்கப்பட்டு, செங்கல் தளவரிசை சீராக்கப்பட்டு, நீர் கசியா வண்ணம் மேல் பூச்சு பூசப்பட்டது. மகாமண்டபத்திலிருந்த சுவர்களில் கற்கள் வரிசையாக எண் இடப்பட்டு இறக்கப்பட்டன. இடையே உள்ள பிளவுகள் நீக்கப் பட்டு முன் போல் சுவர்கள் வியாளவரி வரையில் சீராக நிறுத்தப்பட்டன. தென்புற வாயிலை அலங்கரித்த படிக்கட்டுகள் சீராக அமைக்கப்பட்டன. உடைந்து வீழ்ந்து கிடந்த வாயில் காவலர் சிலைகள் பசையால் ஒட்டப்பட்டு உரிய இடங்களில் பொருத் தப்பட்டன. வாயில் நிலை கல் இல்லாமையால் சிமெண்டால் செய்யப்பட்டு கதவு பொருத்தப்பட்டது. வடபுறத்து இருந்த வாயிலுக்கு கதவு பொருத்தப்பட்டது. கீழ் புறத்தில் இருந்த வாயிலின் மேல் விட்ட கல் உடைந்து இருந்தது பசையால் பொருத்தப்பட்டு முன் போல் அமைக்கப்பட்டது. வாயில் கதவு ஒன்று பொருத்தப் பட்டது. நந்தி இருந்த பீடம் சீராக்கப்பட்டது. திருச்சுற்றில் கிடந்த கற்களை அகற்றி சீராக்கும் போது விமானத்தில் இருந்த சுமார் 4 அடி தூரத்தில் பூமிக்கடியில் மற்றொரு கல்லினால் கட்டப்பட்ட அடித்தளம் காணப்பட்டது. இது விமானம் சரிந்து விடாமல் இருப்பதற்கு கட்டப்பட்டதாகத் தோன்றுகிறது.

நிருத்த மண்டபத்தில் இருந்த இடிபாடுகள் நீக்கப்பட்டு வீழ்ந்து கிடந்த தூண்கள் எல்லாம் நிறுத்தப்பட்டன. அறிவிப்பு பலகை ஒன்று பொருத்தப் பட்டது.

ஊரின் மேற்கே இருந்த திருமால் கோயில் திருவுண்ணாழி செங்கல்லாலும், முன் மண்டபம் கருங்கல்லாலும் கட்டப்பட்டிருந்தது. செங்கல் கட்டடம் முழுதும் இடிந்து விழுந்து விட்டது. கருங்கல் கட்டடம் பழுதடைந்து சாய்ந்து நிற்கின்ற நிலை. இடிபாடுகளுக்கிடையே நிலமகளுடனும் திருமகளுடனும் விளங்கும் திருமால் சிலை நின்ற நிலையில் காணப்பெற்றது. சுமார் 2 மீட்டர் உயரமுடைய சிலை சாய்ந்திருந்தது. இடிபாடுகள் எல்லாம் அகற்றப்பட்டன. சிலை நேராக நிறுத்தப்பட்டது. ஊரின் தென்மேற்கில் இடம் பெயர்ந்து வீழ்ந்து கிடந்த மாவீரர் சிலை சீராக்கப்பட்டு உரிய இடத்தில் பொருத்தப்பட்டது.

4. ஆங்கில வீரர்களின் கல்லறை, பாஞ்சாலங்குறிச்சி, திருநெல்வேலி மாவட்டம்.

பாஞ்சாலங்குறிச்சி, வீரபாண்டிய கட்டபொம்மன் கோட்டையிலிருந்து சுமார் இரண்டு கல் தொலைவில், பாஞ்சாலங்குறிச்சிப் போரில் இறந்துபட்ட ஆங்கில வீரர்களுடைய கல்லறை ஒன்று உள்ளது. இங்கு 45 வீரர்கள் அடக்கம் செய்யப் பெற்றுள்ளனர். இக்கல்லறைகளைச் சுற்றி சுமார் $1\frac{1}{2}$ மீட்டர் உயரமுள்ள மதில் ஒன்று கட்டப்பட்டுள்ளது. 1801-ஆம் ஆண்டு மார்ச் மாதம்24-ம் தேதியிலும் அதே ஆண்டு மே மாதம் 24-ம் தேதியிலும் இறந்தவர்களுடைய கல்லறைகள் என்பது, ஒரு கல்லறையில் உள்ள ஒரு கற்பலகையில் இருந்து தெரிகிறது. இதிலிருந்து கட்டபொம்மனைத் தூக்கிலிட்ட பிறகு, மீண்டும் பாஞ்சாலங்குறிச்சியைத் தலைநகராக்கி வீரப்போர் புரிந்த ஊமைத்துரையுடன் நடந்த போரில் இறந்துபட்ட வீரர்களின் கல்லறை இது என்பது தெளிவாகும். இவ்வீரர்களில் தளபதியாக இருந்தவர்களுடைய கல்லறைகள் சற்று உயரமாகக் கட்டப்பட்டுள்ளன. மற்றவை மூன்று வரிசைகளில் அடக்கம் செய்யப்பட்டுள்ளன. திருநெல்வேலி நிர்வாக பொறியாளர் இக்கல்லறையைப் பழுதுபார்ப்பதற்காக ரூ 5930-க்கு ஒரு மதிப்பீடு தயாரித்தார். அந்த மதிப்பீட்டின்படி மதிலில் பழுதடைந்த பகுதிகள் சீராக்கப்பட்டன. இடிந்து போயிருந்த் கல்லறைகள் நேராக்கப்பட்டன. விழுந்து கிடந்த கற்பலகை உரிய இடத்தில் பொருத்தி வைக்கப்பட்டது. நுழை வாயிலில் ஒரு இரும்பு கதவு பொருத்தப்பட்டது.

5. கட்டபொம்மன் அரண்மனைப் பகுதிகள், பாஞ்சாலங்குறிச்சி, திருநெல்வேலி மாவட்டம். (படம் 27 லிருந்து 33 வரை)

''வானம் பொழியுது பூமி விளையுது மன்னவன் காணிக்கு ஏது கிஸ்தி'' என்று வீரமுழக்கம் செய்து, அன்னியனான ஆங்கிலேயருக்கு அடிபணிய மறுத்து விடுதலை வேள்வித் தீயில் தன் ஆவியைவிட்ட பாஞ்சாலங்குறிச்சி குரிசில் வீரபாண்டிய கட்டபொம்மனைத் தமிழ் மக்கள் நன்கு அறிவர். அம்மாவீரன் வாழ்ந்த இடத்தை ஆங்கிலேயர் தகர்த்துத் தரைமட்டமாக்கினர். பாஞ்சாலங்குறிச்சி வீரருக்கும், ஆங்கிலேயருக்கும் பாஞ்சாலங்குறிச்சியில் பலமுறை போர் நடந்தது. முதலில் ஆங்கிலேய வீரன் ஆலன் என்பான் கோட்டையைக் கைப்பற்ற முனைந்து தோல்வியுற்றான். நெல்லை மாவட்டக் கலெக்டர் ஜாக்சன் என்பான் கட்டபொம்மனை சதி செய்து கைது செய்ய முயன்றான். ஆனால் வீரன் கட்டபொம்மு வெற்றிவாகைச் சூடினான். ஆனால்

1799-இல் கர்னல் பானர்மென் என்பான் தலைமையில் பாஞ்சாலங்குறிச்சி கோட்டை முற்றுகையிடப்பட்டது. பாஞ்சாலங்குறிச்சி வீரர்களின் ஆற்றலின் முன்னர் ஆங்கிலேயர் பலர் ஆவியிழந்தனர். இப்போரில் வீழ்ந்த ஆங்கிலேயர்களின் கல்லறைகள் இன்றும் ஓட்டப்பிடாரத்திற்கு அண்மையில் இப்போருக்கு சாட்சியாக விளங்குகின்றன.

மாவீரன் கட்டபொம்மன் சூழ்ச்சியால் கைது செய்யப்பட்டான். கயத்தாறில் தூக்குமேடையில் வீரன் ஆவிதுயத்தான். இப்போர் முடிந்த ஓராண்டுக்குள் கட்டபொம்முவின் வீரத்தம்பி ஊமைத்துரை பாஞ்சாலங்குறிச்சி கோட்டையைப் பழுதுபார்த்துத் தலைமையேற்றார். 1801-ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் பாஞ்சாலங்குறிச்சி மீது மறுபடியும் படையெடுத்தனர். ஊமைத்துரை நடத்திய வீரப்போரில் ஆங்கில வீரர் பலர் அடிபட்டு மாய்ந்தனர். அவ்வாறு அடிபட்டு வீழ்ந்த 45 வீரர்களுடைய கல்லறைகள் பாஞ்சாலங்குறிச்சி கோட்டைக்கு அருகிலிருக்கின்றன. ஆயினும் கோட்டை வீழ்ந்தது. இம்முறை ஆங்கிலேயர் கோட்டையையும், அரண்மனையையும் பீரங்கி கொண்டு தகர்த்துத் தரைமட்டமாக்கினர். கோட்டை வீழ்ந்தபோது அங்கு இருந்த பொருள்களெல்லாம் சூறையாடப்பட்டிருக்க வேண்டும். சுமார் 35 ஏக்கர் பரப்பளவுக்கு மேல் இருந்த கோட்டைப் பகுதிகள் மண்மேடாக இருந்து வந்தது. அண்மையில் கட்டபொம்முவினுடைய குலதெய்வம் ஜக்கம்மாதேவிக்கு கோட்டை மேட்டின் மத்தியில் ஒரு கோயில் எடுக்கப்பட்டது. கோட்டைமேடு முழுவதும் புதர்கள் மண்டிக் கிடந்தன. இங்குமங்குமாக ஒருசில இடங்களில் சுவர்களின் அடிப் பகுதிகள் காணப்பட்டன. புறத்தே வாழும் மக்களால் கோட்டைப் பகுதிகளில் இருந்து மண் வெட்டி எடுக்கப்பட்டுள்ளது. கோட்டை மேட்டை அகழ்ந்து அரண்மனைப் பகுதிகளை வெளிக் கொணர அரசு ஆணையிட்டது.

பணி: கோட்டை மேட்டிலிருந்த புதர்கள் அகற்றப்பட்டன. ஜக்கம்மாள் கோயிலுக்கு அருகில் தென்புறத்தில் அகழ்வாய்வு தொடங்கப்பட்டது. அவ்விடத்திலேயே அரண்மனையின் அடிப்பகுதிகள் கண்டுபிடிக்கப்பட்டன. நாளோலக்க மாளிகையும், கல்யாண மண்டபமும், அடுக்களையும், வசிக்கும் அறைகளும் சூழ விளங்கிய அரண்மனையின் அடிப்பகுதி வெளிப்பட்டது. தென்கோடியில் கிழக்கு நோக்கிய வாயில் காணப்பட்டது. வாயிலின் இருமருங்கிலும் ஆறு அறைகள் காணப்பட்டன. உள்ளே நுழைந்ததும் வடபுறத்திலே $1\frac{1}{2}$ மீட்டர் ஆழமுள்ள சதுரமான குழி ஒன்று காணப்பட்டது. குழியின் பக்கங்கள் சுண்ணும்புச் சாந்தால் பூசப்பட்டிருந்தன. தானியங்களைக் கொட்டிவைப்பதற்கு இவ்வறை உபயோகிக்கப்பட்டு இருக்கலாம். இங்கிருந்து ஒரு சரிவான வழியின் மூலம் நாளோலக்க மாளிகையை அடையலாம்.

நாளோலக்க மாளிகையின் மேல் புறம் செங்கல்லால் கட்டப்பட்ட உயர்ந்த பீடமொன்று காணப்பட்டது. அதன் முகப்பில் விளக்கு வைப்பதற்குப் பிறைகள் வரிசையாக அமைக்கப்பட்டிருந்தன. அப்பீடத்தின் அடிப்பகுதி மிக அழகாகச் சுதை வேலைபாட்டால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மரத்தூண்களைத் தாங்குவதற்கு கல்லாலான அடிப்பகுதிகள் இரண்டு பீடத்தின் மேல் காணப்பட்டன. பீடத்தின் மேல் பகுதி சதுரமான செங்கற்களால் பாவப்பட்டு, சுண்ணும்புச் சாந்து பூசப்பட்டு இருந்தது. இதன் ஒரு பகுதியில் யாரோ சிலர் புதையல் தேடி குழி தோண்டியிருந்

தனர். இதைச் சுற்றிலும் இருந்த சுவர் சுதைப் பூசப்பட்டிருந்தது. இங்கு வலப்பக்கச் சுவற்றில் ஆங்கிலேயர் பீரங்கியால் தாக்கியபோது வந்து பாய்ந்த இரும்பாலான பீரங்கிக் குண்டு சுவற்றில் பதிந்த நிலையில் காணப்பட்டது. இந்தப் பீடத்தின் மேல் அரசனின் அரியணை இருந்திருக்கக் கூடும் என்று ஊகிக்கப்படுகிறது. இப்பகுதியில் இருந்த இடிபாடுகளை நீக்கிய போது சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட சுதை வேலைப்பாடுகளும், வண்ணம் பூசப்பட்ட சுதை காரைகளும், பெருவாரியாகக் கிடைத்தன. ஒரு காரைத் துண்டில் வண்ணம் பூசப்பட்ட ஒரு முகம் காணப்பட்டது. இப்பகுதி அழகிய வண்ணம் பூசப்பட்ட ஓவியங்களால் நிறைந்திருக்க வேண்டும் என்பதற்கு இவை சான்று பகர்கின்றன. இந்த மண்டபத்தின் முன்னர் வெளியான பகுதியும் ஓரங்களில் உயர்ந்த திண்ணைகளும் மண்டபத்தை நோக்கி அமரும் வகையில் அமைக்கப்பட்டிருந்தன. இவற்றில் கிழக்கிலும் தெற்கிலும் இருந்த திண்ணைகள் சற்று உயரமாகவும், வட புறம் இருந்த திண்ணை சற்று தாழ்வாகவும் அமைக்கப் பட்டு திண்ணைகளின் ஓரங்களில் மரத்தூண்களைத் தாங்கிய கல்லாலான அடிப்பகுதிகள் உரிய இடங்களில் இருந்தன. திண்ணைகளும், தரைப்பகுதியும் அரைத்த வெண்மையான சுண்ணாம்புச் சாந்தினால் பூசப்பட்டிருந்தன. வடகிழக்கில் ஓர் அறை காணப்பட்டது. அவ்வறைக்குச் செல்லும் வாயில் நிலையும் காணப்பட்டது. நாளோலக்க மாளிகையிலிருந்து கழிநீர்ப் பாதை ஒன்று இவ்வறையின் வழியாக பூமியினடியில் அமைக்கப்பட்டிருந்தது. இவ்வறையின் தரை வெறும் சுண்ணாம்புச் சாந்தால் பூசப்பட்டிருந்தது. அறையின் ஒரு புறத்தில் கைகால் கழுவ திட்டு ஒன்று அமைக்கப் பெற்றிருந்தது. நாளோலக்க மாளிகையில் இருந்து அதை ஒட்டி வட புறத்தே கல்யாண மண்டபம் ஒன்று, நடுவில் உயர்ந்த சதுரமான தெற்றியும், சுற்றி நான்கு புறமும் ஓடும் திண்ணைகளும் அவற்றின் புறத்தே அமைக்கப்பட்டிருந்த அறைகளும் உடையதாகக் காணப்பட்டது. நடுவில் இருந்த தெற்றி வெற்று மண்ணாலானது. சுற்றிலும் சுண்ணாம்புச் சாந்து பூசப்பட்டிருந்தது. மேல் பகுதி இடிபாடுகளினால் சேதமடைந்து இருந்தது. கிழக்குப்புறத் திண்ணையின் அருகே நீர்வடியும் பாதை அமைக்கப்பட்டிருந்தது. திண்ணைகளில் ஏறுவதற்கு ஆங்காங்கே கருங்கல் படிகள் அமைக்கப்பட்டிருந்தன. திண்ணைகளின் ஓரங்களில் மரத்தூண்களைத் தாங்கும் கல்லாலான அடிப்பகுதி ஆங்காங்கு வைக்கப்பெற்று இருந்தன.

கல்யாண மண்டபத்திலிருந்து வடக்கு நோக்கி ஒரு வாயில் அமைக்கப்பட்டிருந்தது. அங்கு மரக் கதவுகளும், நிலைகளும் இருந்திருக்க வேண்டும். அவற்றைப் பிடுங்கியெடுத்தத் தடயங்கள் காணப்பட்டன. இவ்வாயிலுக்கும் வடபால் கிழக்கு மேற்காக சில அறைகள் காணப்பட்டன. அவற்றிலொன்று அடுக்களையாக இருந்திருக்க வேண்டும். அடுப்பெரித்த சாம்பல்களும், கலங்கள் வைக்கும் திட்டுகளும், கைகால் கழுவும் பகுதிகளும் அங்கு காணப்பட்டன. அரச மாளிகையிலிருந்து சுமார் ஐந்து மீட்டர் மேற்கில் மற்றும் ஒரு பெரிய கட்டடத்தின் அடிப்பகுதி காணப்பட்டது. நடுவில் தாழ்வாகவும், சுற்றிலும் உயர்ந்த திண்ணைகளோடும் மரத்தூண்களால் தாங்கப்பட்ட மேல்கட்டடங்களோடும் இக்கட்டடம் இருந்திருக்க வேண்டும் என்பதற்கான தடயங்கள் கிடைத்தன. தாழ்வான நடுப்பகுதியில் உயரமான நான்கு மரத்தூண்கள் இருந்திருக்க வேண்டும். அவற்றைத் தாங்கிய கல்லாலான அடிப்பகுதிகள் இன்னம் இருக்கின்றன. இவற்றைச் சுற்றிலும் அறைகள் காணப்பட்டன. இக்கட்டடத்தின் நுழைவாயில் தெற்கு நோக்கி இருந்தது. தென்புறத்

தில் வாயிலின் இருமருங்கிலும் திண்ணைகள் இருந்தன. திண்ணைகளின் அடிப்பகுதி அழகிய சுதை வேலைப்பாடுடன் திகழ்ந்தன.

வடபுறக் கோடியிலிருந்த ஒரு கிணறு தூர் எடுக்கப்பட்டது. சில பீரங்கிக் குண்டுகளும், பீர் புட்டிகளும் கிணற்றினுள் காணப்பட்டன. அரச மாளிகையின் கிழக்கில் கருங்கல்லாலான தறியும் கரடு முரடான கற்கள் பாவிய கட்டும் தறியும் காணப்பட்டன. இது யானை கட்டும் தறியாக இருக்கலாம். இக்கட்டுத் தறியின் வடக்கே தெற்கு நோக்கிய கட்டடம் ஒன்று காணப்பட்டது. இக்கட்டடத்தின் வடகோடியில் உயர்ந்த பீடமும், நடுவில் சதுரமான தூண்களின் அடிப்பகுதியும் காணப்பட்டன. இக்கட்டடத்தின் அமைப்பைக் கண்டால் இது ஒரு கோயில் போல தோற்றமளிக்கிறது.

இவை தவிர கோட்டை மேட்டில் பல சிறு கட்டடங்களின் பகுதிகள் ஆங்காங்கே காணப்படுகின்றன. இக்கோட்டையின் பகுதிகளில் அகழ்வாய்ந்த போது பல மட்கலங்களும், கருங்கல்லாலும், இரும்பாலுமான பீரங்கிக் குண்டுகளும், அழகிய சுதை வேலைப்பாடுகளும், ஆங்கிலேயேர்களின் பீங்கான் தட்டுகளும், மண் விளக்கும், சில மண் பாவைகளும் கிடைத்தன. அரச மாளிகையில் நாளோலக்க மாளிகையும், கல்யாண மண்டபமும் சேதமடைந்த பகுதிகளில் சுண்ணும்புக் காரையாலும், வெள்ளை சிமெண்டினாலும் பூசப்பட்டு வெய்யிலிலும், மழையிலும் பாழடைந்து விடாமல் பாதுகாக்கப்பட்டுள்ளன. மண்ணாலான தரைப் பகுதிகள் வாரமொரு முறை அலகிட்டு, மெழுகிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. கோட்டை மேட்டின் கிழக்குக் கோடியில் புதர்களின் நடுவில் பல வீரக் கற்கள் காணப்பட்டன. இவற்றில் நாயக்க வீரர்கள் தங்கள் பெண்டிர் சூழ வீற்றிருக்கும் காட்சி செதுக்கப்பட்டுள்ளது. இச்சிலைகள் அனைத்தும் கட்டபொம்முவின் முன்னோர்களின் சிலைகளாகக் கருதப்படுகின்றன. இவை அனைத்தும் ஜக்கம்மா கோயிலுக்கு அருகில் கொண்டு வந்து பாதுகாக்கப்பட்டுள்ளன. வரலாற்றுக் குறிப்பு உள்ள ஒரு பலகை பொருத்தப்பட்டு உள்ளது. முழு நேர காவலர் ஒருவர் நியமிக்கப்பட்டு, அரண்மனைப் பகுதிகள் பாதுகாக்கப்படுகின்றன.

6. சொக்கீச்சுரர் கோயில், (படம் 34 லிருந்து 37 வரை), காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டம்.

வரலாறு: காஞ்சி நகரில், காமாட்சி அம்மன் கோயில் அருகில், சுமார் கி. பி. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சோழர் காலத்திய கோயில் ஒன்று இருக்கிறது. அதை சொக்கீச்சுரர் கோயில் என்று அழைக்கின்றனர். அடியில் இருந்து உச்சி வரையில் கருங்கல்லால் கட்டப்பட்ட ஒரே தளம் உள்ள கற்கோயில் இது. இக்கோயிலின் அதிட்டானத்தில் உள்ள சோழர் காலக் கல்வெட்டு ஒன்று இக்கோயிலைத் 'தெர்க்கிருந்த நக்கர் கோயில்' என்று குறிக்கிறது. இக்கல்வெட்டு 'கரிகால சோழ பிள்ளையார்' என்று ஒரு கடவுளையும் குறிக்கிறது.

நிலைமை: இக்கோயில் வழிபாடின்றி மிகவும் பழுதடைந்து கிடந்தது. சிகரத்தின் மேலிருந்த தூபி காணவில்லை. சிகரக் கற்கள் இடம் பெயர்ந்து மிகவும் பழுதடைந்திருந்தன. கோயிலின் தென் புறமும், வட புறமும் இருந்த சுவர்கள்

சரிந்து கற்கள் கீழே சிதறிக்கிடந்தன. தென் புறத்தில் முன் மண்டபத்தில் தேவ கோட்டத்தில் இருந்த கணபதியின் சிலை ஒன்று மட்டும் தன் நிலையில் இருந்தது. விமானத்தில் சிகரத்தை அலங்கரித்த சிலைகளும், விமான ஓரங்களை அலங்கரித்த நந்தியின் சிலைகளும் கீழே விழாவிடினும் கற்கள் நிலை பெயர்ந்து காணப்பட்டன. முகமண்டபத்தின் மேல் தளம் பழுதடைந்து விளங்கியது. முகமண்டபத்திற்கு முன்னர் பெரும் மண்டபம் ஒன்று இருந்திருக்க வேண்டும். இம்மண்டபம் முற்றிலும் மறைந்து போயிற்று.

தமிழ்நாடு அரசு ஆணை எண்: 774, கல்வி, தேதி 11-6-69-இன்படி இக்கோயில் பழுதுபார்க்கும் பணிக்காக, ரூபாய் 9,000/- அனுமதிக்கப்பட்டது.

இக்கோயிலைப் பழுது பார்ப்பதில், யுனஸ்கோ ஸ்தாபனத்தின் வல்லுனரான திரு. ஜி. ஆர். எச். ரைட் அவர்களும், மாமல்லையில் உள்ள அரசினர் சிற்பத் தொழிற் பயிற்சி நிலைய மேலாளருமான திரு. வை. கணபதி ஸ்தபதி அவர்களும் தக்க ஆலோசனை நல்கினர்கள்.

பணி: வேலை தொடங்குவதற்கு முன்னர் சிதறிக்கிடந்த கற்கள் சேகரிக்கப்பட்டு எந்த எந்த புறங்களைச் சேர்ந்தவையோ, அவ்வப்புறங்களில் வரிசையாக அடுக்கப்பட்டு எண் இடப்பட்டன. கோயில் முழுமைக்கும் வரை படம் தயாரிக்கப்பட்டது. இப்படத்தில் நிலையில் இருக்கும் கற்கள் இவை, வீழ்ந்து கிடக்கும் கற்கள் இவை, காணமற்போன கற்கள் இவை என குறிக்கப்பட்டது. காணமற் போன கற்களுக்கு, புதிய கற்கள் கொண்டு வரப்பட்டு உரிய அளவில் செதுக்கப்பட்டன. சிகரத்திலிருந்து கீழ் வரையில் கற்களின் வரிசைகளும், எண்ணிக்கைகளும் எளிதில் அழிக்கக் கூடிய வண்ணத்தால் குறிக்கப்பட்டன. பிறகு கோயிலில் உள்ள வெளிக் கற்கள் படிப்படியாக எடுக்கப்பட்டன. பிறகு மீண்டும் அவை முறையே அடுக்கப்பட்டு முன் இருந்த நிலைக்குக் கொணரப்பட்டன. வீழ்ந்து கிடந்த சிலைகள் உரிய இடங்களில் பொருத்தப்பட்டன. பழுதடைந்த முன் மண்டபத்தின் மேல் தளம் சீராக்கப்பட்டு சிமெண்டு சாந்து பூசப்பட்டு ஒழுகாமல் செய்யப் பெற்றது. கற்களின் இணைப்புச் சந்துகளில் கண்ணாடி போன்ற இரசாயனப் பசை பூசப்பட்டு நீர் உள்ளே புகாமல் தடுக்கப்பட்டது. வரலாற்றுக் குறிப்புப் பலகை ஒன்று வைக்கப்பட்டது.

4 - தொல்லாய்வும், அகழ்வாய்வும்.

வசவசமுத்திரம், செங்கல்பட்டு மாவட்டம். *(படம் 41)*

வசவசமுத்திரம் என்னும் சிற்றூர் பாலாற்றின் வடகரையில்; மாமல்லைக்கு 11 கல் தெற்கில் அமைந்துள்ளது. அது வாயலூரின் புறநகராக விளங்குகிறது. வாயலூரில் பழங்காலக் கோயில் ஒன்று அழிந்த நிலையில் உள்ளது. இக்கோயிலில் உள்ள தூண் ஒன்றின் மீது இராஜசிம்ம பல்லவ மன்னனுடைய கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து இராஜசிம்மன் கடல் கடந்த லட்சத்தீவுகளை ஆண்டு வந்தான் என்பது தெரியவருகிறது.

செங்கற்பட்டு வட்ட, வரித்தண்டலர், திரு. பி. சுந்தரமாணிக்கம் இத்துறையின் கவனத்திற்குக் கூர்மையான முனைகளுள்ள சில பானைகள் வசவசமுத்திரத்தில் கிடைத்துள்ளன என்று தெரியப்படுத்தினர். அவ்விடம் இத்துறையின் அலுவலர் ஒருவரால் பார்வையிடப்பட்டது. அங்கு கண்டெடுத்த பொருள்களும் அவற்றின் சிறப்பும் பொதுமக்களின் பார்வைக்குக் கொண்டுவரப்பட்டன.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பழம் பொருள்களோடு, உடைந்த நிலையில் உள்ள கூர்முனை ஜாடிகள் பல காணப்பட்டன. சில பெரிய செங்கற்களும், மேலை நாட்டுப் பானை ஓடுகளும், மத்தியதரைக்கடல் நாட்டில் வழக்கில் இருந்த மதுக்குடத்தின் கழுத்தும் கண்டுபிடிக்கப்பட்டன. பானை ஓடுகளின் காலம் கி.பி. இரண்டாம் நூற்றுண்டு முதல் நான்காம் நூற்றுண்டு வரை எனக் கருதலாம்.

பாலாறு, முற்காலத்தில் பல்லவர்களுக்கு முக்கிய ஆருக இருந்தது. பாலாற்றின் உபநதியான வேகவதி ஆற்றங்கரையில் காஞ்சிபுரம் அமைந்துள்ளது. வேகவதி காஞ்சிபுரத்திற்கு சில மைல்களுக்குள் பாலாற்றுடன் இணைந்துவிடுகிறது. காஞ்சிபுரம் பாலாற்றின் மூலமே கடலுடன் இணைக்கப்பட்டிருந்தது. காஞ்சிநகர் ஒரு துறைமுகப்பட்டினம் என சீன யாத்திரிகர் 'யுவான் சுவாங்' கூறுவது இதன் காரணமாகத்தான் இருக்கக் கூடும். படகுகள் காஞ்சியிலிந்து பாலாற்றங்கரையின் முகத்துவாரத்திற்குப் பொருள்களையும், மனிதர்களையும் ஏற்றிச் சென்றிருக்க வேண்டும். ஆகையால் பாலாற்று முன்துறை தொண்டை மண்டலத்திலிருந்து தமிழ் மக்கள் கடல் கடந்த நாடுகளுடன் தொடர்புகொள்ள ஒரு முக்கிய இடமாக விளங்கியிருக்க வேண்டும். ஆகையினுல் சமீபத்தில் கண்டெடுக்கப்பட்ட பொருள்கள் பாலாற்று முன்துறையின் தனிச் சிறப்பை முதன்முறையாக நிலைநாட்டுகின்றன.

ஆனைமலை, கோவை மாவட்டம். *(படம் 42a, 42b, 43a, 43b)*

அகழ்வாய்வு : பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டப் பொறியாளர் அவர்களால் ஆனைமலையில் உள்ள மானும்பொழி என்ற ஊரில், காணப்பெற்ற ஒரு கல் பதுக்கை, இத்துறையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. சாலையின் குறுக்

கில் அது இருந்ததால் அதை அகற்ற வேண்டியிருந்தது. அக்கல்பதுக்கையை இத் துறை அகழ்வாய்வு செய்தது. அப்போதைய தென்பிராந்திய தொல்பொருள் ஆய்வு மேற்பார்வையாளர் திரு. எஸ். ஆர். ராவ் அவர்கள், அகழ்வாய்வு உதவியாளர் திரு. கே. வி. ராமன் அவர்களையும், ஒரு வரைபடவாளரையும் அனுப்பி உதவினர்.

இப்பதுக்கை மூன்று செங்குத்தான சுற்பாளங்களைக் கொண்டுள்ளது. இதன் மேலே மூடப்பட்டிருந்தத் தலைக்கல் காணப்படவில்லை. பதுக்கை, புதர்களாலும் கரையான் புற்றுக்களாலும் மூடப்பட்டிருந்தது. அப்புதர்களும், புற்றுக்களும் அகற்றப்பட்டன. வட்டவடிவமான ஒரு குழி தோண்டப்பட்டது. முன்னரே, புதையல் காணும் ஆசையில் யாரோ இதைத் தோண்டியுள்ளனர் என்பது இவ்வகழ் வாய்வால் வெளிப்பட்டது. ஆயினும் பதுக்கைக் கட்டப்பட்ட முறை அறிய இவ்வ கழ்வாய்வு உதவியது. இப்பதுக்கை ஒரு தரைக் கல்லையும், நான்கு செங்குத்தானக் கற்களையும் கொண்டுள்ளது. முன் பக்கக் கல் கீழே விழுந்து மூன்று துண்டுகளாக உடைந்திருந்தது. பின்புறம் இரண்டு கற்கள் ஒரே வரிசையில் வைக்கப்பட்டன. அவற்றில் துளை அமைக்கப்பட்டுள்ளது. தலைக்கல்லை வைத்து மூடிய பிறகு ஈமப் பொருள்களை உள்ளே போடுவதற்கு இத்துளை அமைக்கப்பட்டுள்ளது. இது மற் றொரு கல்லால் மூடப்பட்டுள்ளது. இவற்றைக் கெட்டிக்கக் கூழாங்கற்கள் மிகுதி யாகப் போடப்பட்டுள்ளன. பின்புறம் நெருக்கமாகச் சிறுகற்கள் குவிக்கப்பட்டிருந் தன. அடிக்கல்லின் மேல் தலைக்கல்லின் பகுதி ஒன்று உள்ளே காணப்பட்டது. அக்கல் கிடந்த நிலையில் யாரோ அடுப்பு அமைத்து எரித்திருக்கிறார்கள் என்று தெரிந்தது.

இவ்வகழ்வாய்வில் இருந்து இங்கு கல்பதுக்கை எவ்வாறு அமைக்கப்பட்டது என்று அறிய முடிந்தது. சிறிய கற்களைக் கொண்டு சதுரமான வடிவு முதலில் அமைக்கப்பட்டது. அதன் வெளியில் கற்கள் நிரப்பப்பட்டன. உள்புறம் மண் மட்டுமே இருந்தது. இதன் நடுவில் அடிக்கல், குத்துக்கற்கள், தலைக்கல் ஆகியவற் றை அமைத்து கல்லறையை அமைத்திருக்கிறார்கள். அதன் பின்புறமிருந்து ஈமப் பொருள்கள் கல்லறைக்குள் இடப்பட்டவுடன் அதன் வாய் மூடப்பட்டு கற்கள் குவிக்கப்பட்டுள்ளன. பின்னர் நடுவிலிருந்த கல்லறையின் பகுதியைத் தவிர மற்ற அனைத்தையும் மண்ணால் மூடியுள்ளனர்.

பொறியியல் வல்லுநர் பாதையைப் பதுக்கையினின்றும் விலக்கிவிட்டு பழமையான இச்சின்னத்தைப் பாதுகாக்க இருந்த இடத்திலேயே விட்டு வைத்துள் ளனர்.

கொற்கை, திருநெல்வேலி மாவட்டம். (படம் 44a முதல் 50b வரை)

வரலாற்றுக் குறிப்பு: கொற்கை என்னும் சிற்றூர் திருவைகுண்டம் வட்டத் தில் தாமிரபரணி ஆற்றுக்கு மூன்று கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. தாமிரபரணி ஆறு முற்காலத்தில் இந்நகரத்தின் அருகே இருந்து, இவ்விடத்திலேயே கடலில் கலந்தது. முதுமக்கள் தாழிகளுக்குப் புகழ்பெற்ற இடமாக விளங்கும் ஆதிச்ச நல்லூர், தாமிரபரணி ஆற்றின் கரையிலே, கொற்கைக் கிராமத்திற்கு 15 கி. மீட்டர் தொலைவிலுள்ளது. கற்கால மனிதர்கள் வாழ்ந்த தடயங்கள் காணப்படும் சாயர் புரம் என்ற ஊர், இங்கிருந்து மூன்று கி. மீட்டர் தொலைவில் உள்ளது.

கொற்கை, பாண்டிய மன்னர்களின் ஒரு தலைநகரமாகவும், முக்கியமான ஒரு துறைமுகப்பட்டினமாகவும் கிறித்துவ ஆண்டிற்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன்பே இருந்தது. இத்துறைமுகத்தை சங்க நூல்களின் மூலமும், மேற்கத்திய பூகோள வல்லுனர்களின் குறிப்பாலும் அறிந்து கொள்ளலாம். சங்க இலக்கியங்கள் கொற்கையை 'புகழ்மலி சிறப்பிற் கொற்கை' என்றும் 'நற்றேர் வழுதி கொற்கை' என்றும், பாண்டிய அரசனாகிய வெற்றிவேல் செழியனுடைய தலைநகர் என்றும் குறிக்கின்றன. பாண்டிய அரசர்கள் கொற்கைக் கோமான் என்றும், கொற்கை வேந்து என்றும் குறிக்கப்படுகின்றனர். தாலமி, இந்த இடத்தை 'கரோய் நாடு' எனக் குறிக்கிறார். "கொல்கிக் வளைகுடாவில் முத்துக் குளிக்கும் இடம் ஸோஸி கௌரை. கொல்கை வாணிபத்தின் மையமாகவும், சோலன் ஆற்றுக்கு முகத்துவாரமாகவும் இருந்தது". கீழ்க்காணும் குறிப்பு பெரிபிளஸின் நூலில் காணப்படுகிறது. "தெற்கிலுள்ள இந்த இடம் குமரியிலிருந்து கொல்சி (கொற்கை) வரைப் பரவியுள்ளது. அங்கே தண்டிக்கப்பட்ட குற்றவாளிகளைக் கொண்டு முத்துக் குளிக்கும் தொழில் நடந்து வந்தது".

முந்தைய அகழ்வாய்வு: இன்று சிற்றூராகத் திகழும் இவ்வூரே பண்டைய புகழ் வாய்ந்த கொற்கை துறைமுகம் என டாக்டர் கால்டுவெல்தான் முதன் முதலில் எடுத்துக் கூறினர். அவர் 1876-ஆம் ஆண்டு சில அகழ்வாய்வுகளை நடத்தினர். அவர் கண்டுபிடித்தப் பொருள்களைப் பற்றி 1877-ஆம் ஆண்டு இந்தியன் ஆன்டிகுவரியில் வெளியிட்டார். அவர் பதினேரு அடி சுற்றளவு உடைய முதுமக்கள் தாழி ஒன்றையும், அதனுள் ஒரு மனித எலும்புக் கூடும், முழு மண்டையோடும் இருக்கக் கண்டார். கால்டுவெல், இவ்வூர் நில அமைப்பு ஆராய்ச்சிக்குறிய சிறப்பு வாய்ந்தது எனக் குறிப்பிட்டுள்ளார். ஸர், மார்ட்டிமர் வீலர், இந்தியத் தொல்பொருள் ஆய்வின் இயக்குநராக இருந்தபொழுது, இவ்விடத்திற்கு வந்ததாகக் கூறப்படுகிறது.

தற்பொழுதைய அகழ்வாய்வு (1968—69): தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையினரால் அவ்விடத்தின் தொன்மையையும், பண்பாட்டுத் தொடர்ச்சியையும் அறிய அகழ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது.

அகழ்வாய்வின் சுருக்கம்: அகழ்வாய்வில் இரண்டு முதுமக்கள் தாழிகள் கிடைத்தன. அவைகளில் ஒன்று முழுதும் நொறுங்கிய நிலையிலிருந்தது. மற்றென்று நல்ல நிலையில் உள்ளது. ஒரு உறை கிணறு போன்ற அமைப்பும் அதன் மேல் செங்கல் கட்டடம் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டது. தமிளி எழுத்துக்கள் பொறித்த, (கி. மு. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து கி. பி. இரண்டாம் நூற்றாண்டு வரைக் குறிப்பிடத்தக்க) பானை ஓடுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கருப்பு நிற வழவழப்பான பானை ஓடுகளும் கிடைத்தன. இப்பானை ஓடு, மௌரியர் பானை ஓடு என்று சிலர் கருதுகின்றனர். மற்றும் சிலர் இதனை "ரோலட்டெட்" இனப் பானை ஓடு என்று கருதுகின்றனர். அடுத்து நிகழும் அகழ்வாய்வுகள் இதைப் பற்றிய செய்திகளைத் தெளிவுபடுத்தலாம். மோரியப்பானை ஓடு என்றக் கருத்தை ஒப்புக்கொள்வோமானல், இதுவே முதல் முறையாக ஒரு மௌரியப்பானை ஓடு தமிழ் நாட்டிலே, அதுவும் தென்னகத்தின் கோடியிலே கண்டுபிடிக்கப்பட்டதாகும். அகழ்வாய்வின்போது ஏராளமான அளவிற்கு முத்துச் சிப்பிகள் கண்டுபிடிக்கப்பட்டதைக் கொண்டு கொற்கை முத்து குளிப்பதற்கு ஒரு சிறப்பான இடமாக இருந்தது என்பது உறுதிப்

படுகிறது. கரித்துண்டுகளைக் கொண்டு காலத்தைக் கணக்கிடும் C 14 முறையால், சேகரித்த கரித்துண்டுகளின் காலம் 2755+95 ஆண்டுகள் என்று, அதாவது கி. மு. 785-ஆம் ஆண்டு என்று கணக்கிடப்பட்டுள்ளது. இவ்விடத்தின் முக்கியத்துவத்தை இவ்வகழ்வாய்வு நன்கு தெளிவுபடுத்தியது.

அகழ்வுகள் : இங்கு ஏழு குழிகள் அகழப்பட்டன.

கொற்கை-1 : ஊரின் மேற்குக் கோடியில் இக்குழி தோண்டப்பட்டது. இக்குழியின் அளவு 3·65 x 2·75 மீட்டர். இது மக்கள் வாழ்ந்திருக்க முடியாதப் பாறைப் பகுதி வரைத் தோண்டப்பட்டது. கி. பி. 10—11-ஆம் நூற்றாண்டுகளில் ஆண்ட இராஜராஜனின் செப்புக்காசு ஒன்று மேல் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டது. நொறுங்கிய ஈமத்தாழி ஒன்று 2·54 மீட்டர் ஆழத்தில் கண்டு பிடிக்கப்பட்டது. இத்தாழி கிடைத்த நிலையிலேயே மௌரியர் பானை ஓடு ஒன்றும் கண்டு பிடிக்கப் பட்டது. இந்தக் குழியில் வேலைப்பாடு உடைய மணி ஒன்று கிடைத்தது.

கொற்கை-2 (படம். 45-b) : ஊரின் வன்னி மரத்தின் அருகே 2·5 மீட்டர் சதுரக் குழித் தோண்டப்பட்டது. கருப்பு சிவப்பு நிறமுள்ள, முது மக்கள் தாழி ஒன்று 1·62 மீட்டர் ஆழத்தில் கண்டுபிடிக்கப் பட்டது. அத்தாழியில் எந்தவித மான ஈமப்பொருள்களோ எலும்புகளோ இல்லை.

கொற்கை-3 (படம். 44 a & b) : ஊரின் தெற்கே, கொற்கைக் குளத்தின் நடுவில் 2·70 மீட்டர் சதுரம் உள்ள ஒரு குழி அகழப்பட்டது. நில மட்டத்தில் ஒரு செவ்வக வடிவமுள்ள கட்டடத் தளம் கண்டுபிடிக்கப் பட்டது. நிலத்தின் மேல் ஆற்று மணலைப் பரப்பி, அதன் மீது 'பார்' என்று கூறப்படும் மணற்பாறைச் சில்லுகளைப் பரப்பி அதன் மீது தளம் அமைத்து இருக்கின்றனர். குழியின் தென் புறத்தே செதுக்கப்பட்ட கருங்கற்களால் ஒரு வரி தளமாகக் காணப்பட்டது. அதன் மீது காரை ஊற்றி செங்கல் வைத்து கட்டடம் எழுப்பியுள்ளனர். மேற்குப் பகுதி யில் செங்கல்லாலேயே தளம் எடுக்கப்பட்டுள்ளது. இது கி.பி. 13, 14-ஆம் நூற் றுண்டு கட்டடத்தின் பகுதியாகக் காணப்படுகிறது.

கொற்கை-4 (படம். 46, 47) : கிராமத்தின் வடக்குப் பகுதியில் உள்ள பாதைக்கும், ஊராட்சிமன்ற அலுவலகத்திற்கு அண்மையில் 2·5 மீட்டர் சதுர குழித் தோண்டப்பட்டது. கிழக்கு மேற்காக அமைந்த ஒரு செங்கற் கட்டடம் வடக்கே படிகளுடன் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த கட்டடம் இரண்டு வரிசைகள் கொண்ட ஒன்பது அடுக்கு வரிசையுடன் கட்டப்பட்டுள்ளது. செங்கற்கள் 45x29x7·5 செ. மீட்டர் அளவுகள் உடையதாய் இருந்தன. வடக்குக் கோடியிலுள்ள படிக ளுக்குக் கீழே கிளிஞ்சல் குவித்து வைக்கப்பட்டிருந்தன. கட்டடத்தின் கீழே மூன்று பெரிய அளவினையிடைய சுடுமண் உறைகள் ஒன்றின் மீது ஒன்றாக வைக்கப்பட்டு இருந்தன. உறைகளுக்கு மேலே செங்கற் கட்டடம் இருப்பதால், உறைக்குள் இருப் பது என்ன எனத் தீர்மானிக்க முடியவில்லை. உடைந்த பானை ஓடுகள், சங்குகள், மணற்பாறைகள் கொண்டு உறையின் பக்கங்களை நிரப்பியுள்ளனர். பள்ளத்தை நிரப்புவதற்குப் பயன்பட்ட பானை ஓடுகள் சொரசொரப்பாகவும் 13 அல்லது 14-ஆம் நூற்றுண்டைச் சார்ந்ததாகவும் உள்ளன. செங்கற் கட்டடமும் உறைகளும் ஒரே

காலத்தைச் சார்ந்தவையாக உள்ளன. ஆயினும் அவைகளைக் கட்டியதன் நோக்கம் தெளிவாகத் தெரியவில்லை. இக்குழியில் பல நிலைகளில் தமிளி எழுத்துக்கள் பொறித்துள்ள (கி. மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி. பி. இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்த) பானை ஓடுகள் கிடைத்துள்ளன. 2.69 மீட்டர் ஆழத்தை அடைந்தபோது ஒரு அடுப்பு எரிக்கப்பட்ட தடயம் காணப்பட்டது. இதில் சேகரித்த கரித்துண்டுகள் கி. மு. 785-ஆம் ஆண்டைச் சேர்ந்ததாக C14 என்னும் விஞ்ஞான முறையால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கொற்கை 6-7: கொற்கை 4 இன் மேற்கிலும், தெற்கிலும் கட்டடத்தின் தொடர்ச்சி இருக்கிறதா என்பதைக் கண்டுபிடிக்க இவ்வகழ்வாய்வு செய்யப்பட்டது. தென்புறக் கட்டடத்திற்குக் கீழே கிளிஞ்சல் குவித்து வைக்கப்பட்டிருந்தன. இவ்விரண்டு குழிகளிலும் குறிப்பிடத்தக்க ஒன்றும் கிடைக்கவில்லை.

கொற்கை-5 (படம். 45 a): ஊரின் மேற்கே 2.5 மீட்டர் சதுரம் உள்ள ஒரு குழி தோண்டப்பட்டது. இவ்வகழ்வாய்வு 7 நிலைகளை வெளிப்படுத்தியது. இரண்டு வரிசைகளில் அடுக்கிய கழி ஜாடிகள் கண்டு பிடிக்கப்பட்டன. கிழக்கில் நான்கு ஜாடிகள் ஒன்றின் மீது ஒன்றாகவும், மேற்கில் இரண்டு ஜாடிகள் ஒன்றின் மீது ஒன்றாகவும் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவற்றில் எலும்புத் துண்டுகளும், கருப்பு, சிவப்புப் பானை ஓடுகளும் இருந்தன.

எழுத்துள்ள பானை ஓடுகள்: கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு வரையான காலத்தைச் சார்ந்த எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் அகழ்வாய்வின் போது கண்டு பிடிக்கப்பட்டன. எழுத்துக்கள் கருப்பு நிற, சிவப்பு நிற, கருப்பு சிவப்பு நிற ஆகிய பானை ஓடுகளில் காணப்படுகின்றன. அப்பானை ஓடுகளில் உள்ள சொற்கள் பகுதிகளாகவே உள்ளன. முழுமையானவையாக இல்லை. எழுத்துகள் தமிளி வடிவிலும், பிராமி வரிவடிவிலும் உள்ளன. தமிளி எழுத்துகளின் வரிவடிவங்கள், தமிழ் நாட்டின் குன்றுகளிலும், அரிக்கமேடு, உறையூர், ஆகிய இடங்களில் நடந்த அகழ்வாய்விலும் கிடைத்த எழுத்துக்களை ஒத்திருக்கின்றன. ஸ, ஐ, ஆகிய இரண்டு எழுத்துக்கள் பிராமி வகையைச் சார்ந்தவை. ஆதலின் இவற்றின் மொழிகள் தமிழ், பிராகிருதம் ஆகும். பொதுவாக எல்லா எழுத்துக்களும் பண்டைய வடிவிலேயே இருக்கின்றன. ஆயினும் ஒரு பானை ஓட்டிலுள்ள இரண்டு எழுத்துக்கள் சதுரவடிவில், கி. பி. 2-ஆம் நூற்றாண்டு அமராவதி வரிவடிவங்களை ஒத்து இருக்கின்றன. ஒரு பானை ஓட்டில் இரண்டு வரியில் எழுத்துக்கள் உள்ளன. பானை ஓடுகளில் உள்ள சொற்கள் கீழே படித்தளிக்கப்பட்டுள்ளன.

எண்	குழி	ஆழம்	சொற்கள்
1.	கொற்கை—4	2·30 மீட்டர்	த ஒ
2.	,,	1·44 ,,	(சா ?) ந த ந-
3.	,,	1·50 ,,	மா தி ப ல
4.	,,	2·44 ,,	ஸ த

5.	கொற்கை—5	1·05	,,	கி வா (வ ?) (நெ)
6.	,,	1·23	,,	வா ந தி ய ந
7.	,,	2·06	,,	ஸா யெ
8.	கொற்கை—6	0·43	,,	டா நெ டா அ

5 - காட்சியும் கருத்தரங்கும்.

"உங்கள் பெருமையை உணர வருக" காட்சி 1965.

மத்திய அரசின் தொல்பொருள் துறையின் இருபதாவது ஆலோசனைக் கூட்டம், பாட்னாவில் நடைபெற்றபோது, தொல்லியலின் சிறப்பை மக்கள் உணரும்படி செய்ய மாநில அரசுகள், காட்சிகள் அமைக்க வேண்டுமென, மாநில அரசுகளைக் கேட்டுக்கொண்டது. அதனைத் தொடர்ந்து தமிழ் நாடு அரசின் தொல்லியல் துறை, "உங்கள் பெருமையை உணர வருக" என்ற சிறப்புக் காட்சி ஒன்றை சென்னையிலுள்ள இராஜாஜி மண்டபத்தில், 1965-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 12-ஆம் நாளிலிருந்து 26-ஆம் நாள் வரை அமைத்தது. தமிழக முன்னாள் முதல் அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்களால் தொடங்கி வைக்கப்பெற்ற அக்காட்சி, தமிழகத்தின் தொன்மைச் சின்னங்களைத் தெரிந்துகொள்ளுவதற்கு ஒரு சாதனமாக அமைந்ததோடு எல்லாத் தரப்பு மக்களையும் கவர்ந்து அவர்களது பாராட்டைப் பெற்றது.

தமிழ் நாட்டிலுள்ள வரலாற்றுச் சிறப்புடைய தொன்மையான சின்னங்களின் நிழற்படங்களும், தஞ்சைக் கலைக்கூடத்திலிருந்து கொண்டு வந்த ஏறேறும் பெருமான் போன்ற செப்புத் திருமேனிகளும், மர, தந்த வேலைப்பாடுகளும், செப்பேடுகளும், காசுகளும் காட்சியில் இடம்பெற்றன. அனைத்து வகையான கலைச் செல்வங்களையும் ஒரே இடத்தில் கண்டு களிக்கும் வண்ணம் ஏற்பாடு செய்யப் பெற்றிருந்த அக்காட்சி சென்னை நகரில் இதுவரையில் நடைபெற்ற காட்சிகளிலெல்லாவற்றையும் விட பெரியதாக அமைந்திருந்தது.

அக்காட்சியைக் காணவந்த மக்கள் கூறிய ஆலோசனைகள் கருத்துச் செறிவு நிறைந்திருந்தன. அவற்றில் சில கீழே தரப்பட்டுள்ளன.

1. பொது மக்களுக்கும், வெளி நாட்டிலிருந்து வருபவர்களுக்கும் பயன் தரத்தக்க வகையில் சென்னையில் இக்காட்சி நிலையாக அமைக்கப்பட வேண்டும்;

2. இத்தகைய காட்சிகள் அடிக்கடி அமைக்கப்பட வேண்டும்;

3. இத்தகைய காட்சி எல்லா நகரங்களிலும் அமைப்பதற்கு இயலாவிடினும், எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் அமைக்கப்பட வேண்டும். (காட்சிக்கு வருகை தந்த மக்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் இந்தக் கருத்தை வெளியிட்டனர்);

4. பொது மக்களுக்கும் மாணவர்களுக்கும் பயன் தரக்கூடிய வகையில், இக் காட்சியை செய்திப் படமாகத் தயாரிக்கப்பட வேண்டும்;

5. காட்சியில் அமைக்கப் பெற்ற எல்லா நிழற் படங்களும் அடங்கிய ஒரு தொகுப்பு நூல் தயாரிக்கப்பட்டு, விற்பனைக்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்;

6. நிழற்படங்களும், அஞ்சல் அட்டை அளவுள்ள நிழற் படங்களும், நிழற் படத் தொகுப்புகளும் தயாரிக்கப்பெற்று பொது மக்களுக்கு, அடக்க விலைக்கே கிடைக்கும்படி செய்தல் வேண்டும்.

காட்சியில் வைக்கப் பெற்றிருந்த சிறந்த நிழற்படங்களையும், பொருள், காலம் ஆகிய முறையில் வரையறுக்கப்பட்டு அமைக்கப் பெற்றிருந்ததையும், கல்வெட்டுப் பகுதியில், எழுத்துக்களின் வளர்ச்சி பற்றி காட்டப் பெற்றிருந்ததையும் மக்கள் பெரிதும் பாராட்டினார்கள். மதுரையிலிருந்து கொண்டுவந்திருந்த பாவை விளக்கு தஞ்சைக் கலைக்கூடத்தைச் சேர்ந்த ஏறேரும் பெருமான் ஆகிய செப்புத் திருமேனிகள் எல்லாருடைய மனதையும் கவர்ந்தன.

காட்சியைக் காண வந்தவர்கள் பார்வையாளர் ஏட்டில் எழுதி வைத்த சில பல கருத்துக்கள் :—

தமிழகத் தொல்கலைக் கண்காட்சியைக் காணும் வாய்ப்பினை இன்று பெற்று பேருவகை கொண்டேன். கண்ணையும், கருத்தையும் கவரத்தக்க வகையில் படங்களும், கலைகளும், பொருள்களும் வைக்கப்பட்டிருப்பது பாராட்டுதற்குரியது. சிறப்புக்குரிய தொன்மையில் புகழும், பெருமையும், பற்றும், கவர்ச்சியும், வியப்புணர்ச்சியும் ஏற்படுவது இயற்கை. இந்த வளர்ச்சிகளெல்லாம் கண்காட்சியைக் காணும்போது ஏற்படுகின்றன. தென்னகத்துக் கட்டிடக்கலைச் சிறப்புக்களையும், சிற்பக்கலைச் சிறப்புக்களையும் தக்க வரலாற்று விளக்கங்களுடன் திரைப்படம் மூலமும், நூல் வடிவின் மூலமும் நம் நாட்டினர்க்கும், உலகினர்க்கும் காட்ட அரசினர் முன் வருவது நலம் பயக்கும். இந்தக் கண்காட்சியை இந்தியாவிலுள்ள பெரு நகரங்கள் தோறும் காட்ட முயலுவது சிறப்புடையது. சென்னையில் நிலையான ஒரு இடத்தில் இக்கண்காட்சியை நிறுவுவது சென்னை மாநகருக்கு வருகைதரும் பிறநாட்டினரும், நம் நாட்டினரும் கண்டு களிக்க வாய்ப்பாக அமையும். இத்தகைய முயற்சி மேலும் மேலும் வளர்க ! வெல்க !

இரா. நெடுஞ்செழியன்
22—12—'65.

நமது தொன்மைச் சிறப்புகளையும், வரலாற்றுத் தொடர்ச்சியினையும் விளக்கும் கண்காட்சி இதுபோல் இதுவரை நான் கண்டதில்லை. மிகவும் பயனுள்ள கண்காட்சி. காட்சி அமைக்கப்பட்டுள்ள முறை மிகவும் போற்றத்தக்கது. நமது பண்டைய பெருமக்களின் வாழ்க்கைச் சிறப்புகளையும் கலைப் பெருமைகளையும் எவ்வளவு நேரம் பார்த்தாலும் தெவிட்டாத பெருநிலை—அனைவருக்கும்.

ஈ. வெ. கி. சம்பத்
22—12—'65.

கலைக்கோயில்களின் சிறப்பை உணர்த்தும் கண்காட்சி இது. பழங்காலத்துக் கலைஞர்களின் கற்பனைகளையும் திறனையும் ஓரிடத்தில் ஒருங்கே கண்டு மகிழும் மகிழ்ச்சியை இங்குப் பெற முடிகிறது. நம் முன்னோர்களின் பெருமையை உணர்ந்து, ''எங்கள் தந்தையர் நாடு'' என்று பெருமிதம் உற முடிகிறது.

மு. வரதராசன்
18—12—'65.

கல்லிருக்கு மிடமெல்லாம் கலைக ளாக்கிக்
கடவுளர்தம் திருவுருவம் பலப டைத்துச்
சொல்லிருக்கும் புகழ்படைத்த மன்னர் பல்லோர்
தூயஅன்பி னாற்றொண்டு செய்து பாரில்
நல்லிருக்கு வாழ்பரத கண்டந் தன்னில்
நாளும் வாழ்கின்றார் அவர்தம் சீர்த்தி
அல்லிருக்க வொட்டாமல் ஒளியைப் பாய்ச்சும்
அறஞ் சொல்லும் சிற்பத்தின் திறமும் சொல்லும்.

மலைகுடைந்த பல்லவரின் அரிய கோயில்
மாண்பமைந்த சுடுமண்ணால் அமைந்த கோயில்
சிலைகடைந்து தூணாக்கிச் சுவரு மாக்கித்
திருவமுடைச் சோழர்பலர் செய்தகோயில்
அலைகடைந்த அமுதென்னத் தெய்வ மெல்லாம்
அழகழகென் றமர் விஜய நகரக் கோயில்
தொலை கடந்து பாராமல் சிறிது போதில்
துன்னியிங்குக் கண்டுமனம் பூரித் தேனே!

பாறையெலாம் மெழுகாகப் பணியச் செய்த
பாங்கினையே புகழ்வேனோ மனமாம் பாறை
வேறுதின மெண்ணாமல் தியானித் தேத்த
விளங்குபல மூர்த்தி செய்த விதஞ்சொல் வேனோ
கூறுபல வாம்நடன மாதிச் சிற்பம்
குலவுகலை வகைதன்னைக் கூறு வேனோ
வீறுடைய கவியல்லேன் சொல்ல மாட்டேன்
வியப்பேயோர் உருவாகி நின்றே னம்மா.

இத்தகைய கலைக்கருவூ லங்க ளெல்லாம்
எங்கெங்கோ கிடந்தவற்றைத் தொகுத்துச் சேர்த்து
வைத்திவற்றைப் பாரீரே பாரீர் என்று
வகைவகையாய் நிரற்படுத்தி விளக்கங் காட்டி
அத்தமிவை நம்கலையின் ஆழங் காணீர்
அற்புதமற் புதமென்றே இயம்பிக் காட்டும்
சுத்தமனத் தொண்டர்தமைப் போற்று கின்றேன்
சுதந்தரநல் லரசினையே வாழ்த்து கின்றேன்.

கி. வா. ஜகந்நாதன்
25—12—'65.

உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் ஒவ்வொருவரும், இக்கண்காட்சியைப் பார்த்து பயன் அடைய வேண்டுமென்பது என் விருப்பம்.

தி. க. பகவதி
25—12—'65.

இந்தக் காட்சிகளைக் காணும் போது தமிழுலகம் தலை நிமிர்ந்து நிற்கின்றது. இவை அழியாமல் என்றென்றும் பாதுகாக்கப் பெற வேண்டிய அற்புதச் சின்னங் களாகும். இது போன்ற நிரந்தரக் கண்காட்சி தமிழகத்தின் எல்லா மாவட்டங்களி லும் நிறுவப் பெறவேண்டும்.

மிகவும் பயனுள்ள, எண்ணியெண்ணிப் பெருமைப் படுவதற்குரிய சிற்பக் கண் காட்சி. இத்தகைய பெருமை வாய்ந்த தமிழர்கள், வருங்காலத்திலும் இச்சிறப்பும் பெருமையும் அழிக்கப்படாதவாறு, இப்பெருமைக்கு இழுக்கு நேராதவாறு தங்களை எல்லா வகையிலும் உயர்த்திக் கொள்ள வேண்டும்.

தி. க. ஷண்முகம்
25—12—'65.

தேசபக்தியும் தெய்வபக்தியும் நாட்டு மக்களின் உள்ளத்தில் நின்று நிலவ வேண்டிய பண்புகள். இவற்றை ஒருங்கே வளர்ப்பன நமது தொல்கலைக்காட்சிப் பாதுகாப்புப் பணிகளே. நகரம் தோறும் இத்தகைய அமைப்புகளை நிறுவ வேண்டி யது நமது தலையாய கடமை. உள்ளம், காலம் கடந்தும், இடம் கடந்தும் பறந்து சென்று ஒரு கனவுலகைக் கண்ட இன்பம் கிடைத்தது. வாழ்க தமிழகக் கலை! இக் காட்சிகளை நூல் வடிவில் தருதல் பயனுடையது.

மு. க. தங்கவேலன்
26—12—'65.

பண்டைத் தமிழன் பண்பிலும், திறமையிலும் பெருமிதம் கொள்ளச் செய்யும் காட்சி.

கா. திரவியம்
26-12-'65.

கல்வெட்டுக் கருத்தரங்கு, சென்னை—1966.

தமிழகத்திலுள்ள கல்வெட்டுச் செல்வங்களை மக்களுக்கு உணர்த்துவதற்காக, ஒரு கல்வெட்டுக் கருத்தரங்கும், அதையொட்டிய காட்சியும், 1966-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் சென்னை இராஜாஜி மண்டபத்தில் நிகழ்த்தப்பெற்றன. கருத்தரங்கும், காட்சியும், மாண்புமிகு தமிழக முதல்வரால் துவக்கி வைக்கப் பட்டன.

கருத்தரங்கு: மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்கள், கல்வெட்டுக் கருத்தரங்கிற்குத் தலைமை வகித்தார். மதம், கவின்மிகு கலைகள், தமிழ் மொழி வளர்ச்சி, வரலாறு, பொருளாதார வர லாறு, கல்வெட்டு ஆராய்ச்சி ஆகிய பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, கருத்தரங்கு நடைபெற்றது. புதுச்சேரியிலுள்ள பிரஞ்சிந்திய ஆராய்ச்சி நிறுவன இயக்குநர், பேராசிரியர் ஜீன் பிலியோசா, பேராசிரியர் கே. ஏ. நீலகண்டசாஸ்திரி, பேராசிரியர், கே. கே. பிள்ளை, திரு. டி. என். இராமச்சந்திரன், பேராசிரியர், மா. இராசமாணிக்கம்

பேராசிரியர் டி. வி. மகாலிங்கம் போன்ற அறிஞர்கள் கருத்தரங்கில் பங்கு கொண்டனர். மத்திய அரசின் கல்வெட்டாய்வாளர் அலுவலகத்தின் மேலாளராகிய திரு. எச். கே. நரசிம்மசுவாமி அவர்களும் கருத்தரங்கில் கலந்து கொண்டார். விரிவுரையாளர்கள், ஆராய்ச்சி மாணவர்கள், பொது மக்கள் அனைவரும் இக் கருத்தரங்கில் பங்குகொண்டனர். இதில் நாற்பது ஆராய்ச்சிக் கட்டுரைகள் படிக்கப்பட்டன.

காட்சி: 1966-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 8-ஆம் நாள் முதல் 22-ஆம் நாள் முடிய. சென்னை இராஜாஜி மண்டபத்தில் தமிழகத்துக் கலை வளர்ச்சியை விளக்கும் கவின்மிகு காட்சி அமைக்கப்பட்டது. புதுச்சேரியிலுள்ள பிரஞ்சிந்திய ஆராய்ச்சி நிறுவனம், சென்னைப் பல்கலைக்கழகம், மைசூரிலுள்ள இந்திய அரசின் கல்வெட்டாய்வாளர் அலுவலகம், சென்னை அரசினர் பொருட்காட்சி சாலை ஆகியவற்றின் உதவிகொண்டு இக்காட்சி அமைக்கப்பட்டது. திருவாளர்கள் மர்ரே எஸ். இராஜம், ஐ. மகாதேவன் ஆகியோர் இக்காட்சி சிறப்புற அமைவதற்கு பெரும் உதவி புரிந்தனர்.

கல்வெட்டுப் பிரதிகள், நிழற் படங்கள், விளக்கப் படங்கள், செப்பேட்டுச் சாசனங்கள் ஆகியவற்றை அளித்துதவிய இந்திய அரசாங்கத் தலைமைக் கல்வெட்டாய்வாளர்க்கு எமது நன்றி உரித்து. இக்காட்சிக்கென பேராசிரியர் பிலியோசா அவர்கள், கல்வெட்டுப் பிரதிகளையும் நிழற் படங்களையும், கம்போடியாவிலிருந்து கொண்டு வந்தார். உறையூர் அகழ்வாய்வில் கிடைத்த தமிளி எழுத்துக்கள் பொறிக்கப் பெற்ற பானை ஓடுகளை, சென்னைப் பல்கலைக்கழகத் தொல் பொருள் ஆய்வுப் பிரிவு கொடுத்துதவியது.

தமிழ் எழுத்துக்களின் வளர்ச்சி, தமிழகத்தின் பொருளாதார, சமூக, கலாச்சார வளர்ச்சி ஆகியவற்றை அறிந்துகொள்வதற்கு இக்காட்சி பெரிதும் பயன் பட்டது. சிறப்பு பெற்ற கல்வெட்டாய்வாளர்களின் படங்களும் காட்சியை அலங்கரித்தன.

பள்ளிச் சிறுவர்களும் பண்டைய எழுத்துக்களைப் பற்றி அறிந்துகொள்வதற்காக, நூதன முறையில் ஒரு சிறுவர் அரங்கமும் அமைக்கப் பட்டது.

சிறப்புக் காட்சி, மதுரை, நவம்பர் 1966.

தமிழக அரசின் ஆணையின் படியும், மதுரை மாவட்ட ஆட்சியாளர் அவர்களின் வேண்டுகோளின் படியும் இத்துறையால் மதுரைப் புதுமண்டபத்தில் நவம்பர்த் திங்கள் 6-ஆம் நாள் தொடங்கி 13-ஆம் நாள் முடிய ஒரு சிறப்புக் காட்சி அமைக்கப்பெற்றது. காட்சியானது 1966-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 6-ஆம் நாள் சென்னை முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பெற்றது.

"பூம்புகார் போற்றுதும்" காட்சியும், கருத்தரங்கும், ஆகஸ்டு, 1967.

பண்டைய சிறப்பு வாய்ந்த துறைமுகமான காவிரிப்பூம் பட்டினத்தைப் பற்றியும், அண்மையில் அங்கு நடைபெற்ற அகழ்வாய்வு பற்றியும் பொது மக்கள் அறிந்து

கொள்ளும் வகையில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை 1967-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் சென்னையில் ஒரு கருத்தரங்கும், காட்சியும் அமைத்தது.

நகரப் பள்ளி மாணவர்களுக்கு ஒரு ஒப்புவித்தல் போட்டி நடத்தப்பட்டது. பூம்புகாரைக் குறிக்கும் எழுபத்தைந்து வரிகள் பட்டினப்பாலையிலிருந்தோ, அல்லது சிலப்பதிகாரத்திலிருந்தோ ஒப்புவித்தல் போட்டிக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அறிவிக்கப்பட்டது. பல்வேறு பள்ளிக்கூடங்களிலிருந்து சுமார் 80 மாணவர்கள் இப்போட்டியில் கலந்து கொண்டனர்.

நகரக் கல்லூரி மாணவர்களிடையே ஆர்வத்தை உண்டு பண்ணக் கருதி 1967-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 8-ஆம் நாள் இவ்வலுவலகத்தில் ஒரு பேச்சுப் போட்டி நடத்தப்பட்டது. அதில் பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த இருபத்தாறு மாணவர்கள் கலந்து கொண்டனர்.

1967-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 14-ஆம் நாள் மாலை கருத்தரங்கும் காட்சியும் துவக்கி வைக்கப்பெற்றன. இவ்விழாவிற்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமை தாங்க, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள், காட்சியைத் திறந்து வைத்தார்கள். மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி அவர்கள், போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார்.

கருத்தரங்கு: 1967-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 15-ஆம் நாள் நடத்தப்பெற்ற காவிரிப்பூம் பட்டினத்தைப் பற்றிய கருத்தரங்கு ஏராளமான மக்களைக் கவர்ந்தது. இக்கருத்தரங்கில் பேராசிரியர் மு. வரதராசனார், பேராசிரியர் இலக்குவனார், தமிழ் நாடு சட்டப் பேரவைத் தலைவர், புலவர் கோவிந்தன், பேராசிரியர் கே. கே. பிள்ளை முதலானோர் சிறப்புரையாற்றினர். கருத்தரங்கின் நிறைவு விழாவிற்குத் திரு. சா. கணேசன் அவர்கள் தலைமை தாங்க, சட்டமன்ற உறுப்பினர் திரு. ம. பொ. சிவஞான கிராமணியார் அவர்கள் பேருரை ஆற்றினார்கள்.

சிறப்புக் காட்சி: 1967-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 14-ஆம் நாள் துவங்கி 20-ஆம் நாள் முடிய பூம்புகாரைப் பற்றிய ஒரு சிறப்புக் காட்சி அமைக்கப்பட்டது. காட்சியில் வரலாற்றுச் சிறப்புமிக்கப் பழம் பொருள்களும், நிழற் படங்களும், விளக்கக் குறிப்புகளும், மாதிரி உருக்களும் இடம் பெற்றன. இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறை காவிரிப்பூம்பட்டினத்தை அகழ்வாய்வு செய்தது. அகழ்வாய்வில் கிடைத்த வரலாற்றுச் சிறப்பு மிக்க பழம் பொருள்களை அத்துறை, இக்காட்சிக்கு அளித்ததோடல்லாமல், அத்துறையினுடைய அலுவலர்களை அனுப்பி காட்சியை அமைக்கவும், கண்காணிக்கவும் ஏற்பாடு செய்தது. சென்னையிலுள்ள சாந்தி ஸதன் நிறுவனம், தன்னால் காவிரிப்பூம்பட்டினத்தில் சேகரிக்கப்பெற்ற காசுகளையும், சுதை வேலைப்பாடுகளையும் இக்காட்சிக்குக் கொடுத்து உதவியது. பண்டைய காவிரிப்பூம்பட்டின நகர அமைப்பின் மாதிரி உருவைச் செய்து தரும்படி தொழில் துறை இயக்குநர் அவர்கள் மாமல்லையிலுள்ள சிற்பப் பயிற்சிக் கூடத்திற்கு அனுமதி அளித்ததின் பேரில் பூம்புகாரின் மாதிரி உரு ஒன்றும் அமைக்கப்பெற்றது.

இக்காட்சி நல்லதொரு பயனைத் தேடித் தந்தது. பொதுமக்களாலும், நாளிதழ்களாலும் இக்காட்சி போற்றப்பட்டது. பல்வேறுபட்ட பள்ளிகளி லிருந்தும், கல்லூரிகளிலிருந்தும் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் இக் காட்சியைக்கண்டு அவர்களுடைய பாராட்டுகளைக் காட்சியில் வைக்கப்பெற்றிருந்த குறிப்புப் புத்தகத்தில் எழுதியுள்ளனர்.

"இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு" கலைக்காட்சி, சனவரி, 1968.

1968-ஆம் ஆண்டு சனவரித் திங்களில் இத்துறை இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டையொட்டி, தமிழ்நாடு அரசின் ஆணைப்படி, கலைக்காட்சிக் குழுத் தலைவர் உயர்திரு. சா. கணேசன் அவர்கள் தலைமையில், ஒரு காட்சி இத்துறையால் அமைக்கப்பெற்றது. தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு பகுதிகளிலிருந்தும் பொருள்கள் கொண்டுவரப்பெற்று பல்கலைக்கழகத் தேர்வு மண்டபத்தில் அவைகள் காட்சியாக வைக்கப்பட்டன.

1968-ஆம் ஆண்டு, சனவரித் திங்கள் 3-ஆம் நாள் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் அ. லக்ஷ்மணசாமி முதலியார் அவர்கள் தலைமையில், மேன்மைமிகு திரு. சி. இராஜாஜி அவர்களால் இக்காட்சி திறந்து வைக்கப்பட்டது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு. சி. என். அண்ணாதுரை அவர்கள், இக் காட்சியையொட்டி தயாரிக்கப்பெற்ற "கையேடு" என்ற புத்தகத்தை வெளி யிட்டார்கள்.

இக்காட்சியில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில், அகழ்வாய்வின்மூலம் கிடைத்த வரலாற்றுச் சிறப்பு மிக்க பழம் பொருள்கள் இடம் பெற்றன. மேலும், ஓவியங்கள், இசைக்கருவிகள், அஞ்சல் தலைகள், வனவிலங்குகளின் நிழற்படங்கள், செப்புத்திருமேனிகள், தந்த வேலைப்பாடுகள், மர வேலைப்பாடுகள், காசுகள், அணிகலன்கள், ஓலைச் சுவடிகள், புத்தகங்கள், வாகனங்கள் ஆகியவைகளும், கோயில்கள், சிற்பங்கள் ஆகியவைகளின் நிழற்படங்களும் இதில் இடம்பெற்றன. தமிழ்நாட்டிலுள்ள கோட்டைகளைப் பற்றிய தனியான ஒரு பிரிவும் காட்சியில் அமைக்கப்பட்டது.

அனைத்துலகத் தமிழ் மாநாட்டில் நடைபெற்ற கருத்தரங்குகளில் ஒரு பிரிவுக்கு, தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் அவர்கள் தலைமை தாங்கினார். மாநாட்டில் கலந்துகொண்டு தமிழ், வட்டெழுத்து, கிரந்தம் ஆகிய எழுத்துக்களின் வளர்ச்சி பற்றிய ஒரு ஆராய்ச்சிக் கட்டுரையையும் படித்தார்.

கொற்கைக் காட்சி, நவம்பர் 1969.

கொற்கை அகழ்வாய்வில் கிடைத்த பழம் பொருள்களைக் கொண்டு, 1969 நவம்பர்த் திங்கள் தொல்பொருள் ஆய்வுத்துறைக் கட்டடத்தில் சிறப்புக் காட்சி ஒன்று அமைக்கப்பட்டது.

முதுமக்கள் தாழிகள், இரும்பாலும் செம்பாலும் செய்யப்பட்ட பொருள்கள், தமிழி எழுத்து பொறிக்கப்பட்ட பானை ஓடுகள், சங்குகள், சிப்பிகள், வண்ணமணிகள்

போன்ற அகழ்வாய்வில் கண்டெடுக்கப்பட்ட பொருள்களனைத்தும் காட்சியில் வைக்கப்பெற்றன. கொற்கை அகழ்வாய்வு சம்பந்தமான நிழற்படங்கள், விளக்கப் படங்கள், நிலப் படங்கள் முதலியனவும் பார்வைக்கு வைக்கப்பெற்றன. இக்கலைக் காட்சிக்கு எண்ணிறந்த பார்வையாளர்கள் வருகை தந்தனர். இக்காட்சியைக் காண ஓய்வுபெற்ற தொல்பொருள் ஆய்வுத்துறைப் பொது இயக்குநர் பத்மஸ்ரீ திரு. எ. கோஷ் அவர்கள் வருகை தந்தார்.

இக்காட்சி, சட்டமன்ற உறுப்பினர் ம. பொ. சிவஞான கிராமணியார் அவர்கள் முன்னிலையில், தமிழ்நாடு அரசு, கல்வி அமைச்சர், மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் துவக்கி வைக்கப்பெற்றது. புதுச்சேரி, பிரஞ்சிந்திய ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் பேராசிரியர் ஜீன் பிலியோஸா அவர்களும், இந்துமத அறநிலைய பாதுகாப்புத்துறை ஆணையாளர் திரு. நரசிம்மன், ஐ.ஏ.எஸ்., அவர்களும் இத்துறை நூல்களை வெளியிட்டனர்.

1. புறக்கூத்து, பல்லவர் காலச் சிற்பம், கி.பி. 5-6 ம் நூற்றுண்டு, தாந்தோன்றீச்சுரர் கோயில்—காஞ்சிபுரம்.

A dancing scene, Pallava period, 5th-6th cent. A.D.
Tāntōnrīswarar temple, Kanchipuram.

2. அகக்கூத்து, பல்லவர் காலச் சிற்பம், கி. பி. 5-6 ம் நூற்றாண்டு, தாந்தோன்றீச்சுரர் கோயில்—காஞ்சிபுரம்.

A dancing scene, Pallava period, 5th-6th cent. A.D. Tāntōnrīswarar temple, Kanchipuram.

3. அகக்கூத்து, பல்லவர் காலச் சிற்பம், கி. பி. 5-6 ம் நூற்றுண்டு, தாந்தோன்றீச்சுரர் கோயில்—காஞ்சிபுரம்.

A dancing scene, Pallava period, 5th-6th cent. A.D.
Tāntōnrīswarar temple, Kanchipuram.

4. அகக்கூத்து, பல்லவர் காலச் சிற்பம், கி பி. 5-6 ம் நூற்றுண்டு,
தாந்தோன்றீச்சுரர் கோயில்—காஞ்சிபுரம்.

A dancing scene, Pallava period, 5th-6th cent. A.D.
Tāntōnriswarar temple, Kanchipuram.

5. அகக்கூத்து, பல்லவர் காலச் சிற்பம், கி. பி. 5-6 ம் நூற்றுண்டு
தாந்தோன்றீச்சுரர் கோயில்—காஞ்சிபுரம்.

A dancing scene, Pallava period, 5th-6th cent. A.D.
Tāntōnrīswarar temple, Kanchipuram.

6 a ஒரே சிற்பத்தில் நான்முகன், சிவலிங்கம், உமை, முருகன், நரசிம்மர்
பல்லவர் காலம், முன்னூர், தென்னாற்காடு மாவட்டம்.

Sculptured panel showing Brahma, Linga, Umā, Subrahmaṇya and Narasimha, Pallava period, Munnur, District South Arcot.



6 b ஒரே சிற்பத்தில் நான்முகன், சிவலிங்கம், உமை, முருகன், நரசிம்மர், திருமகள்
முதலிய—பல்லவர் காலம், மணிமங்கலம் செங்கை மாவட்டம்.

Sculptured panel, showing Brahma, Linga, Umā, Subrahmaṇya Narasimha, Sridevi and others, Later Pallava period, Manimangalam, Dist. Chingleput.

7 a சேட்டையும் பிற உருவங்களும், பல்லவர் காலம்.
முன்னூர்—தென்னாற்காடு மாவட்டம்.

Jyēshṭā and others, Pallava period,
Munnur, District South Arcot.



7 b 24 சமணத் துறவிகளின் (தீர்த்தங்கரர்களின்) உருவம், பல்லவர் காலம்,
திருநாதர் குன்று, செஞ்சி—தென்ஆற்காடு மாவட்டம்.

24 Jain Saints (Tīrtankaras), Thirunāthar Kunṟu,
Gingee, District South Arcot.

8 a. திருமால், பல்லவர் காலம், கி. பி. 8 ம் நூற்றூண்டு, வடக்காலத்தூர், தஞ்சை மாவட்டம்.
Vishṇu, Pallava period, 8th century A. D.
Vadakkalattur, District Thanjavur.

8 b உமையை அணைந்த சடைமுடி அண்ணல், பல்லவர் காலம், கி. பி. 8 ம் நூற்றூண்டு, கோபுரப்பட்டி, திருச்சி மாவட்டம்.
Ālinganachandrasekhara, Pallava Period,
Gopurapatti, District Trichy.

9 a. நரசிம்மர்

Narasimha

9 b. திருமால்

Vishṇu

முத்தரையர் காலம், கி.பி. 8-ம் நூற்றுண்டு,

செந்தலை—தஞ்சை மாவட்டம்.

Muttaraiya period, 8th cent. A.D.

Sendalai, District Tanjavur.



10 a. பரிவாரதேவர் (யமன்).
Parivāra deity.



10 b. திருமால்
Vishṇu

பாண்டியர் காலம், கி. பி. 8-ம் நூற்றுண்டு, இராசாக்கல்மங்கலம்,
திருநெல்வேலி மாவட்டம்.

Paṇḍya period, 8th Century A.D., Rajakkalmangalam, District Thirunelveli.

11 a பெண் அணங்கு—Female deity

11 b பெண் அணங்கு—Female deity

பரிவார தேவதை, பாண்டியர் காலம், கி. பி. 8-ம் நூற்றுண்டு,
இராசாக்கல்மங்கலம்—திருநெல்வேலி மாவட்டம்.

Parivāra Deities, Pāṇḍya period, 8th Cent. A.D.
Rajakkalmangalam, District Thirunelveli.

12. திருமகள், பாண்டியர் காலம், கி. பி. 8-ம் நூற்றாண்டு, திருச்சுழி, ராமநாதபுரம் மாவட்டம்.

Srīdēvi, Pāṇḍya period, 8th century A. D. Thiruchuli, District Ramnad.

13 நிலமகள், பாண்டியர் காலம் 8-ம் நூற்றாண்டு,
திருச்சுழி—இராமநாதபுரம் மாவட்டம்.

Bhūdēvi, Pāṇḍya period, 8th century A.D.
Thiruchuli, District Ramnad.



14 a. சதுர்முகலிங்கம், கடைச் சோழர் காலம், கி. பி. 12-ம் நூற்றுண்டு காளஹஸ்தி, சித்தூர் மாவட்டம்.

Chaturmukhalinga, Later Chō̤lā period, 12th Cent. A.D. Kalahasti, District Chittoor.

14 b. சோமசித்தாந்திகள் போற்றிய தெக்கணுமூர்த்தி, சோழர் காலம், கி. பி. 11-ம் நூற்றுண்டு, திருஒற்றியூர், செங்கை மாவட்டம்.

Dakshiṇāmūrti, Chō̤lā period, 11th Cent. A.D. Thiruvorriyur, District Chingleput.





15. மரச்சிற்பங்கள் நிறைந்த கதவு—நாயக்கர் காலம், கி. பி. 16-ம் நூற்றுண்டு,
சிவாலயம், நல்லூர், தஞ்சை மாவட்டம்.

Carved wooden door, Nayak period, 16th century A. D.
Nallur, District Tanjavur.

16. மலைமகள்மணாளர், செப்புத்திருமேனி, கடைப் பல்லவர் காலம் கி. பி. 9-ம் நூற்றாண்டு, வடக்காலத்தூர், தஞ்சை மாவட்டம்.

Kalyāṇasundara, Bronze, Later Pallava period, 9th century A. D.
Vadakkalathur, District, Tanjavur



17 பின்புறம்.

Back view

18. ஆடவல்லபெருமான், செப்புத்திருமேனி, கடைப் பல்லவர் காலம்,
கி. பி. 9-ம் நூற்றுண்டு, வடக்காலத்தூர்—தஞ்சை மாவட்டம்.

Nataraja, Bronze, Pallava period, 9th Cent. A.D.
Vadakkalathur, District Thanjavur.



19. உமாபரமேச்வரி, செப்புத்திருமேனி, கடைப் பல்லவர் காலம், கி. பி. 9-ம் நூற்ருண்டு, வடக்காலத்தூர்—தஞ்சை மாவட்டம்.

Umāparameswari, Bronze, Pallava period. 9th Cent. A.D.
Vadakkalathur, District Thanjavur.



20 a. கொற்றவை, செப்புத்திருமேனி, சோழர் காலம், கி.பி. 11-ம் நூற்றூண்டு, தருமை ஆதீனம்.

Durga, Bronze, Chōḷa period, 11th cent. A.D. Dharmapuram mutt collection.

20 b. வட்டணை காட்ட வந்த நாயக்கர், செப்புத் திருமேனி, சோழர் காலம், கி.பி. 12-ம் நூற்றூண்டு, மேலப்பெரும்பள்ளம், தஞ்சை மாவட்டம்.

Vīnādhara Bhikshāṭaṇa Later Chola period 12th century A.D. Melapperumballam, District Tanjavur



21 a. கிராதரும் தேவியும்
செப்புத்திருமேனி, கடைச் சோழர் காலம், கி. பி. 12-ம் நூற்றுண்டு, மேலப்பெரும்பள்ளம்—தஞ்சை மாவட்டம்.

Siva Kirata and Devi, Bronze,
Later Chola period, 12th Cent. A.D.
Melapperumballam, District Tanjavur.

21 b. கிராதர்
செப்புத்திருமேனி, கடைச் சோழர் காலம், கி. பி. 12-ம் நூற்றுண்டு, நாகப்பட்டினம்—தஞ்சை மாவட்டம்.

Kirata, Bronze,
Later Chola period, 12th Cent. A.D.
Nagappattinam, District Tanjavur.

22 a. பிறைமுடி அண்ணல்.
Chandrasekhara.

22 b. ஆடவல்ல அழகர்.
Nataraja.

கடைப் பாண்டியர் காலம், கி. பி. 14-ம் நூற்றுண்டு,
வீரபாண்டி—மதுரை மாவட்டம்.

Later Pāṇḍya period, 14th cent. A.D. Virapandi,
District Madurai.

23 a. சோமாஸ்கந்தமூர்த்தி.
Sōmāskanda.

23 b. பார்வதி
Pārvati

23 c. பார்வதி
Pārvati

கடைப் பாண்டியர் காலம், கி. பி. 14-ம் நூற்றுண்டு,
வீரபாண்டி, மதுரை மாவட்டம்.

Later Pāṇḍya period, 14th cent. A.D. Virapandi, District Madurai.

24 a. கணபதி, கடைச் சோழர் காலம், கி. பி. 12-ம் நூற்றுண்டு, திருவானைக்கா, திருச்சி மாவட்டம்.

Ganapathi, Later Chola period, 12th cent. A.D. Thiruvanaikka, District Trichy.

24 b. அனுமன், விஜயநகரக் காலம், கி. பி. 15-ம் நூற்றுண்டு, சதுரங்கபட்டினம், செங்கற்பட்டு மாவட்டம்.

Hanūman, Vijayanagar period, 15th cent. A.D. Sadras, District Chingleput.

25. கிராதார்ச்சுன காட்சி, காகிதத்தில் வரையப்பட்டுள்ள ஓவியம்,
கேரளப்பாணி, ஒரு தனியார் வசம் உள்ளது.
கி. பி. 18-ம் நூற்றுண்டு.

Kirātārjuna scene, painting on paper, Vegetable colours
Kerala school, 18th cent. A. D.
in a private collection.



26. இரு நடுகற்கள், கி. பி. 5-ம் நூற்றுண்டு, இருளப்பட்டி, தருமபுரி மாவட்டம்.

Two hero-stones, 5th Cent. A. D. from Irulappatti, District Dharmapuri.



27 a. கட்டபொம்மன் அரண்மனைப் பகுதிகள், பாஞ்சாலங்குறிச்சி,
நெல்லை மாவட்டம்.

Palace remains of Virapandiya Kattabomman, Panchalankurichi,
District Tirunelveli.



27 b. பழுது பார்த்த பின்னர்.

After conservation.



28 a. நாளோலக்க அறையின் தோற்றம்.
Audience hall.



28 b. நாளோலக்க மண்டபத்தின் அடிப் பகுதி; அரியணை இருக்கும் இடம்.
The platform that used to house the throne.



29 a. நாளோலக்க மாளிகையிலிருந்து கல்யாண மண்டபத்துக்கு செல்லும் வழி.

Passage connecting the audience hall with Kalyāṇa mandapa.



29 b. நீர் கழி பாதை.

A drain

பாஞ்சாலங்குறிச்சி, திருநெல்வேலி மாவட்டம்

Panchalankurichi, District Tirunelveli.



30 a. அரசியர் இருக்கை அடிப்பகுதி.
Remains of Queen's palace.



30 b. அரசியர் இருக்கை முன் புறம்.
Frontal base of Queen's palace.



31 a. யானை கட்டும் தறி.
Elephant stable.



31 b. கட்டபொம்முவின் முன்னோர் சிலை.
Hero-stone carrying the portraits of Kattabomman's ancestors.

32 a. சுதையாலான தாமரை போன்ற அலங்கரிப்பும், இன்ன பிற அலங்கரிப்புகளும்.

Lotus and other designs of Stucco.

32 b. பல்வகை மட்பாண்டங்கள்,
பாஞ்சாலங்குறிச்சி, திருநெல்வேலி மாவட்டம்.

Pots in various shapes, Panchalankurichi, District Tirunelveli.



33. பீரங்கி குண்டுகள், பீங்கான் தட்டு, ஆப்பச்சட்டி, மதுப்புட்டி முதலியன, பாஞ்சாலங்குறிச்சி.

Cannon balls, porcelain plate, bottle pieces, terracotta figures etc., Panchalankurichi.



34 a. காஞ்சி, சொக்கீச்சுரர் கோயில்—கற்கள் எண் இடப்பட்டு வரிசையாக வைக்கப்பட்டுள்ளன.

Chokkisvara temple, Kanchi, stones numbered and arranged in order.



34 b. புறக்கற்கள் அதிட்டானம் வரை எடுக்கப்பட்ட நிலை.

Outer stones removed upto the base.

35 a. காஞ்சி, சொக்கீச்சுரர் கோயில் — பின்புறம்,
பழுதுபார்க்கும் முன்னர்.

Chokkisvara temple, back view before restoration.

35 b. காஞ்சி, சொக்கீச்சுரர் கோயில் — பின்புறம்,
பழுதுபார்த்த பின்னர்.

Chokkisvara temple, back view after restoration.



36. தென்கிழக்கிலிருந்து தோற்றம். பழுது பார்க்கும் முன்பும் பின்பும்.
View from South-East; before and after restoration.





37 a. பழுது பார்க்கும் முன்னர்—Before restoration.



37 b. பழுது பார்த்த பின்னர்—After restoration.

காஞ்சிபுரம் சொக்கீச்சுரர் கோயில், வடகிழக்குத் தோற்றம்.

Chokkisvara temple, Kanchipuram, view from North-east.





38. கங்கைகொண்ட சோழீச்சுரம், முதல் இராஜேந்திர சோழன் காலத்தில் கட்டப்பெற்றது. கூழம்பந்தல், வட ஆற்காடு மாவட்டம். பழுது பார்க்கும் முன்னர்.

Gaṅgaikoṇḍachōḷiśvara, built in the reign of Rājēndra chōḷa I, 11th cent A.D., Kuzambandal, District North Arcot.



39 a. பழுது பார்க்கும் முன்.
Before conservation.



39 b. பழுது பார்க்கும்போது.
During conservation.



40. பழுது பார்த்த பின்னர், கங்கைகொண்ட சோழீச்சுரம், கூழம்பந்தல்.

After conservation, Gangaikoṇḍachōlīswara, Kuzambandal.



41. கூர்முனைச்சாடி, வடிகுழாய், செங்கற்கள் முதலியன, கி.பி. 2—4-ம் நூற்றூண்டு, வசவசமுத்திரம், செங்கை மாவட்டம்.

Conical Jars, drainage pipes, bricks etc. 2nd—4th cent. A.D., found at Vasavasamudram, District Chingleput.



42 a. கல்பதுக்கை, அகழ்வாய்விற்கு முன்னர்.
மானும்பொழில், ஆனைமலை, கோவை மாவட்டம்.

Dolmen, before excavation, Manambolil village,
District Coimbatore.

42 b. அகழ்வாய்வின்போது. பின்புறம்

During excavation. back view



43 a. அகழ்வாய்வின்போது.
During excavation.

43 b. அடிக்கல்லும், முன்கல்லும், சதுர வடிவில் அமைக்கப்
பட்ட சிறுகற்களும். மாணம்பொழில்

The flooring slab and stones laid in square
formation. Manambolil village



44 a. அமலேமலர்கள் நிறைந்து விளங்கும் கொற்கைக் குளத்தின் ஒரு தோற்றம்.

A view of Korkai tank.



44 b. கொற்கைக் குளத்திடலில் அகழ்வாய்வில் கிடைத்த ஒரு கட்டிடத்தின் அடித் தளம், கருங்கல்லால் ஆனது.

Foundation of a building found during excavation in Korkai tank.



45 a. கூளம் கழி சாடிகள், கொற்கை, நெல்லை மாவட்டம்.

Soakage jars in KRK–5, Korkai.



45 b. முதுமக்கள் தாழி, கொற்கை, நெல்லை மாவட்டம்.

Burial urn, KRK-2, Korkai, District Tirunelveli.



46 a. கொற்கையில் நான்காம் குழி அகழ்வதன் முன்பிருந்த தோற்றம்
General view of KRK-4 before excavation, Korkai.

46 b. கொற்கை அகழ்வாய்வில் நான்காம் குழியில் கண்டு பிடிக்கப்பட்ட கட்டடப் பகுதி.
A brick structure found in KRK-4, Korkai, District Tirunelveli.



47. கொற்கை அகழ்வாய்வில் நான்காம் குழியில் கட்டடப் பகுதியின் கீழ் காணப்பட்ட உறைகள்.

Soakage jars or rings found below the brick structure in KRK–4.

48 a. பண்டைத் தமிழ் எழுத்துக்களோடு கூடிய பானை ஓடுகள். கி. மு. 2—1-ம் நூற்றாண்டைச் சேர்ந்தவை.

Pot-sherds with Damili inscriptions.
2nd–1st Century B.C. Korkai, District Tirunelveli.



48 b. குறிகள் இடப்பட்ட பானை ஓடுகள். ஒரு பானை ஓட்டில் மீன் உருவம் பெறிக்கப்பட்டுள்ளது.

Pot-sherds with graffiti marks. Korkai, District Tirunelveli.



49 a. மண்சாடியின் கைப்பிடி, துளையுள்ள ஓடு, பானை ஓடு,
மூக்கு கெண்டி, சுடுமண் பாவையின் கீழ் பகுதி.

Handle of a jar, a part of a terracotta figurine, a tile, perforated pot-sherd and a spouted pot-sherd ; Korkai
District Tirunelveli.



49 b. ஓட்டாஞ்சில்லுகள், சுடுமண் காதணிகள், கண்ணாடி மணி,
விளையாட்டுப் பொருட்கள், எலும்பினாலான காதணிகள்
முதலியன. கொற்கை, திருநெல்வேலி மாவட்டம்,

Circular and triangular discs, terracotta ear ornaments, glass bead, gamesmen and bone ornaments.
Korkai, District Tirunelveli.



50 a. என்பினாலான அம்புமுனைகள், கொற்கை, நெல்லை மாவட்டம்.
Bone arrow-heads, Korkai, District Tirunelveli.



50 b. செம்பினாலான வளையம், இராஜராஜனின் செப்புக் காசு, இரும்பினாலான கத்திகளும், குத்துவாளும்; கொற்கை நெல்லை மாவட்டம்.

A copper ring, a copper coin of Rājarāja I, iron knives and a dagger; Korkai, District Tirunelveli.



51 a. ஆதிச்சநல்லூரில் கிடைத்த 2700 ஆண்டுகளுக்கு முந்திய போர்க்கலன்கள்.
இரண்டாவது உலகத்தமிழ் மாநாடு. கலைக்காட்சி.

A view of weapons from Adichanallur graves. 700 B.C.
2nd world Tamil Conference Exhibition.



51 b. பல்லவர் காலப் போர்கலன்களின் பிரதிகள்.
இரண்டாவது உலகத்தமிழ் மாநாடு கலைக்காட்சி.

Models of pallava weapons: 2nd world Tamil Conference Exhibition.



52 a. பண்டைய கலன்கள். இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டுக் கலைக் காட்சியில் ஒரு பகுதி.

Ancient vessels on view; 2nd World Tamil Conference Exhibition

52 b. நாட்டிய கரணங்களை விளக்கும் பாவைகள். 2-வது உலகத் தமிழ் மாநாடு கலைக் காட்சி.

Dolls depicting 108 dance poses of Bharata Natya. 2nd World Tamil Conference Exhibition.

53 a. தமிழ்நாடு முதலமைச்சர், மாண்புமிகு அறிஞர் அண்ணா அவர்கள்,
இரண்டாவது உலகத்தமிழ் மாநாடு கலைக்காட்சிக்கு
வருகை தந்தபோது எடுத்த படம்.

Thiru. C. N. Annadurai, Hon. Chief Minister of Tamilnadu,
at the exhibition of 2nd world Tamil conference.



53 b. மாண்புமிகு கலைஞர் கருணாநிதி அவர்களும், திரு. சா. கணேசன்
அவர்களும், இரண்டாவது உலகத்தமிழ் மாநாட்டுக்
கலைக்காட்சியில் பண்டைய அணிகலன்களைக் காணல்.

Thiru. M. Karunanidhi, Hon. Minister, Govt. of Tamilnadu,
and Thiru. Saw. Ganesan viewing the old jewellery
in the special exhibition.



54 a. மாண்புமிகு அமைச்சர்கள் திரு. மா. முத்துசாமி, கலைஞர் திரு. கருணாநிதி, நாவலர் திரு. இரா. நெடுஞ்செழியன் ஆகியோரும் திரு. சா. கணேசன் அவர்களும் பூம்புகார் மாதிரி அமைப்பைக் காணல்.

Hon. Ministers M. Muthuswamy, M. Karunanidhi, and V. R. Nedunchezhiyan viewing a model of Pumpuhar.

54 b. மகரயாழ், மாதிரி உருவம், 7-ம் நூற்றாண்டு சிற்பத்தைக் கண்டு செய்தது.

Model of Makarayāz, based on a sculpture of 7th Cent. A.D.



55. மாண்புமிகு நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்களும், கொற்கைக் காட்சியைக் காணல்.

Thiru. V. R. Nedunchezhiyan, Hon. Minister for Education and Thiru. M. P. Sivagnanam, visiting the exhibition on Korkai.



56. தமிழ் நாடு அரசு கல்வி அமைச்சர் மாண்புமிகு நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில், இத்துறையின் வெளியீடுகளைப் பிரெஞ்சிந்தியக் கழக இயக்குநர் டாக்டர் பில்யோசா அவர்கள் வெளியிட்டுப் பேசுதல்.

Dr. Filliozat, Director, French Institute of Indology, Pondicherry releases the publication of the Dept., under the chairmanship of Thiru. V. R. Nedunchezhian, Hon. Minister for Education, Tamilnadu.

இரண்டாம் பகுதி
PART II

Damilica

1-Important Discoveries

Stone Sculptures—Pallava period

Dance Panels, Kanchi, District Chingleput. (Pl. 1-5)

A few sculptured panels of the early Pallava period are noticed in the Tāntōnṛi Īsvara temple at Kanchipuram. This temple is near the Jvaraharēsvara temple and is a modern construction. But on its walls are embedded panelled sculptures. All of them portray male and female dancers in animated movements. They hold in their hands a piece of cloth and balls or bags, made probably of leather. They dance in pairs. They all wear short undergarments, shown above the knee, like shorts, with a thick tassel tied round the waist. They are realistically treated, with each participant shown in varying profiles. The rhythm of the dances is vividly brought out by the flowing lines and supple stances of the participants. Stylistically, the panels recall the great Amaravati and Nagarjunakonda sculptures and are to be assigned to the pre-Mahendra period, beginning with 600 A.D. If this dating is accepted, they form a connecting link between the Amaravati and the Pallava traditions.

Sculptured Panels :

A number of sculptures on panels, all small in size, hardly 30 c.m. in length and 20 c.m. in height, have been noticed in the Tondaimandalam region. The panels portray Brahmā, Umāmahēśvara, Lakshmi Narasimha and Subrahmaṇya, all seated in a row on a common pedestal. Though this is the general grouping, there are some variations. Śiva is always shown as a Linga, with Umā in human form represented by his side. Lakshmī, wherever shown, is depicted as Srīvatsa in her half-human and half-symbolic form. Besides this group, there is invariably shown an abstract deity—deity, because it is depicted on a lotus seat—figured like a split shaft, topped by fire or a palm-like representation. The exact significance of this representation is not known. In some panels, in addition to the group of deities, four standing figures, two representing males and two females, are shown.

So far such panels have been found in Munnur, Manimangalam, Tenneri, Madhurantakam, Uttaramerur, Ukkal and Brahmadesam. Two such panels, though with some variations, have been noticed at Peddamudiyam. (see, "Early Eastern Chalukya Sculptures" by C. Sivaramamurti and " Development of Hindu Iconography " by J. N. Banerjee). Both are now preserved in the Madras Government Museum. The occurrence of these sculptures shows the harmonious religious life of the people, for the worshippers adored Brahmā, Vishṇu, Śiva and Subrahmaṇya with equal devotion. The Pallavas bore the three titles of *Parama Māhēsvara, Parama Brahmaṇya*, and *Parama Bhāgavata*, all together. In a number of places the temples were dedicated to the Trinity. Further study of these panels will throw more light on the religious beliefs of the period.

Munnur, District South Arcot.

Two panels are preserved in the Āḍavallēsvara temple, one depicting the Linga and the other Jyēshṭā. There are five deities inthe Linga panel, (Pl. 6a) depicting Brahmā, Śiva as Linga, Pārvatī, Kumāra and Narasimha, in their order, shown seated on a single pedestal, resting their right legs on the seat and with their left legs hanging down. Except Śiva shown as a Linga, the other deities are shown only with two arms, keeping the left arm in the *dhyāna* pose and holding the right arm in the *abhaya* pose, as found in the early Pallava and Pāṇḍya sculptures. Narasimha, Kumāra and Brahmā are shown wearing thick *yāgnōpavītas,* another characteristic of the early period. Narasimha is shown with the face, the ears and the manes resembling those of a lion. The figure of Kumāra (Subrahmaṇya) is distinguished by his characteristic head dress, with a garland of flowers taken around the *kirīṭa* at its base. This is the representation of *Kāntal Kaṇṇi* referred to in Tamil literature and noticed in Subrahmaṇya sculptures of the Pallava and Early Chōla periods. Pārvatī is shown turned towards her Lord. The Linga is represented as a tall cylindrical shaft on a square *pīṭha.* A small flower is noticed on the champered head of the Linga. The *pīṭha* is a square base with pilasters at its edges. Brahmā is distinguished by his three heads.

The Jyēshṭā panel (Pl. 7a) is broken. It carries six figures carved in a line. The first figure on the right represents a goddess. The badly worn out condition of the sculpture offers no clue to its identification except that it represents a feminine figure. The two

figures shown to the left of this deity are human representations of a couple, probably portraying donors. They are shown in the pose of adoration (*anjali hasta*). The next figure with a bovine head and wielding a club is the son of Jyēshṭādēvī. Jyēshṭā is shown next seated with the right arm in *abhaya* and the left hanging down. The last figure, badly worn out, represents Jyēshṭā's daughter. The sculptures may be assigned to the sixth—seventh Century A.D.

Uttaramerur, District Chingleput.

Four panels representing the usual group and one representing Jyēshṭā have been found in the village. One group panel and the Jyēshṭā panel are found in the temple of Mērkatti Amman. Two of the other three group panels are found in the Durgā temple. These are discussed in detail in the "Uttaramerur, Legends, History and Monuments" by Dr. F. Gros and R. Nagaswamy, published by the French Institute of Indology, Pondicherry.

Brahmadesam, District North Arcot.

This panel is found in a Gaṇēsa temple on the way to the famous Śiva temple in the village. It is so badly worn out that nothing is visible except the mere outline of group figures.

Manimangalam, District Chingleput.

This panel (Pl. 6b) preserved in the local Śiva temple is 50 cm. long and 20 cm. wide. The first five figures representing the main deities are shown seated, while the rest are shown standing. All the main deities are shown with only two arms each, as in the Munnur panel. Brahmā is shown first, followed by a Linga with a *pīṭha*, and the Dēvī as Umā. Śiva and Umā constitute the Māhēsvara concept. Next is shown Subrahmaṇya, distinguished by his head dress. To the left of him is shown Vishṇu as Narasimha. He can be identified by his face. The figure shown next to Narasimha with rounded legs and arms, is the symbolic representation of Srī, as Srīvatsa, shown seated on a lotus. This group of Srī and Narasimha, shown together, constitutes the Lakshmīnarasimha concept of the Bhāgavata tradition.

Among the standing figures, those in the *anjali* pose probably represent portraits of the donors, while the others flanking the por-

traits are feminine figures holding lotuses in their hands. In between the main deities and the standing group is shown the abstract deity.

Madhurantakam, District Chingleput.

The attention of this department was drawn to the existence of sculptured panels in the Śiva temple of Madhurantakam by Mr. David Sanford of America. Two panels about 30 c.m. long and 20 c.m. wide are embedded in the floor of the Chaṇḍēsvara shrine in the temple. The first panel may be designated the Śiva panel and the other, the Trimūrti panel for convenience.

The Śiva panel carries the figure of Śiva, shown as a cylinderical Linga over a *yōni pīṭha*. To his left is shown Pārvatī, two armed and seated. In between the Linga and the Dēvī is shown a standing figure of Subrahmaṇya. Thus the three would constitute the Sōmāskanda group of the Saiva pantheon. To the left of the Dēvī is shown Gaṇēsa, seated. The Trimūrti panel is another interesting group. In the panel are shown three standing figures, a seated image of Jyēshṭā, flanked by her associates and followed by two standing devotees. At the end is shown the abstract symbol usually seen in such panels.

The three standing figures shown at the beginning are of great interest. The first one is a three headed Brahmā. The second is Vishṇu. Above the right arm of Vishṇu is shown the Srīvatsa symbol. Thus the two, Srīvatsa and Vishṇu, constitute the Lakshmī-nārāyaṇa group. The third standing figure is in all probability, Śiva as Ardhanārīsvara. A heavy median loop of lower garment is clearly seen on the right side. It is not found on the left side. Thus the three standing figures stand for the Trimūrti concept.

Jyēshṭā is then shown seated with the usual bovine headed figure to her right and a kneeling female figure to the left. Two devotees are then shown one fully and the other half, standing with their arms in the *anjali* pose. These are probably the donors of the panels. The abstract symbol is then shown on a pedestal.

The two panels from Madhurantakam are notable and show definite variations from other panels so far noticed in this region.

Śiva as Śomāskanda with Linga, Skanda, and Pārvatī grouped is unique in this panel. Likewise, figures of Brahmā, Lakshmīnārāyaṇa and Ardhanārisvara are here shown standing, while in all others, they are shown seated. Further, it is here for the first time, that Siva is shown as Ardhanāri.

The panels are clearly of the Pallava period and may be assigned to the seventh—eighth century A.D.

Kaveripakkam, District North Arcot,

2·5. The Ārya Cakravartis claimed a mixed descent, on the one hand, from the Eastern Gaṅgas of Kaliṅga and on the other; from certain brahman families of Rāmeśvaram. The adoption of the 'seated bull' emblem on their flag and coinage, the naming of their capital after Simhapura, a Kaliṅga city, and the use of the medieval Kaliṅga Nāgari Script on their earlier coinage prove conclusively that the Ārya Cakravarti dynasty was a branch of the Eastern Gaṅgas of Kaliṅga. For its connection with the brahmans of Rāmeśvaram, we have only the evidence of the traditions embedded in the medieval Tamil works of South India and Jaffna. There is, however, no reason to doubt the veracity of this tradition, as practically every reference to these kings in the Tamil works labels

them as 'Ārya'. It was probably as a result of this alliance that the Ārya Cakravartis styled themselves *Cētu Kāvalar*, the 'Guardians of *Setu*'. Their later coins bear the Tamil legend *Cētu* on the reverse.

2·6. On accession to the throne, every Ārya Cakravarti assumed the name and title of Rājaśekhara, each alternate king being known as Jagad Rājaśekhara and Para Rājaśekhara.[6] For this reason, these kings are also referred to as the Śekharas in the Tamil works. There were, in all, eighteen Rājaśekharas on the throne, among whom the most illustrious was Varodaya Jagad Rājaśekhara III (1302–25 A. D.).

2·7. In course of time, the Ārya Cakravartis lost all contact with Kaliṅga and were gradually 'tamilised'. They became great patrons of Tamil literature and several notable Tamil works were composed in their court. Their later coinage become South Indian in type and bore Tamil legends. The last few kings of the dynasty had purely Tamil names such as Caṅkili, Peria Piḷḷai etc.

3. Coinage :

The coinage of the dynasty, only in copper so far as is known to us, can be divided into two broad categories, which are quite dissimilar to each other in fabric, design and type :

I. *Earlier period* : (C. 1250–1350 A. D.) :

The thin, broad coins illustrated in figs. 1 and 2, fall in this group. These are fully described in this paper.

II. *Later period* : (C. 1350–1600 A. D.) :

All the later coins are of the so-called "Ceylon-man type" which became almost the universal type of copper *Kācu* in South India and Ceylon from the 11-th Century. These coins can be sub-divided into two categories :

(i) The earliest of the latter-day coins appears to be that illustrated in fig 3. It can be dated between 1350 and 1450 A. D.

(ii) *Setu*-type coins (C. 1450-1600 A. D.) These are the only coins so far assigned to the Ārya Cakravartis. These coins, all of which bear the Tamil legend *Cētu*, are quite common and well-known. They have been illustrated and described by Codrington.[7]

4. Coin in fig. 1 (*Rājaśekhara*-type)

4·1. We may now turn to a detailed study of the coin illustrated in fig. 1. The find-spot of the present specimen is unknown. Fortunately, however, impeccable evidence of the provenance of this type comes from Prinsep and Codrington. Prinsep described and illustrated 'a fragment' of this coin-type 'lately dug up in the ruins of the old city of Montollee.'[8] Describing two 'more or less worn' specimens of this type, Codrington records that 'all these coins were found in Tiruketiswaram, the site of the famous neighbourhood of Māntota, the Mahātittha of the *Mahāvaṃśa* and the great medieval port of entry into Ceylon from South India.'[9] Māntoṭa (also called Mātoṭa or Māntai or Montollee) near Tiruketiswaram, was a great port not only in medieval but even in ancient times, as evidenced by references to the port in the Sangam literature[10] and the numerous finds of Roman Coins from the place.

4·2. The present specimen (Fig. 1) is a circular, rather thin and broad copper coin, measuring 0.8" in diameter and weighing 35 grains. On the obverse there is a couchant humped bull to the right, with one of its forelegs extended to the front. A crescent is above the bull and below are three thick parallel lines. The bull is flanked on either side by two vertical line-like objects. The whole is enclosed within a circle of dots. The reverse contains two lines of bold Nāgarī letters in rather high relief, also enclosed within a circle of dots.

4·3. The fabric and design of the coin should be specially noticed, as they enable us to trace the origin of this type. This broad, thin and light coin is morphologically quite dissimilar to the contemporary coins of the later Cōḷas and Pāṇḍyas of South India and the Dambadeniya Coins of Ceylon. The latter class of coins is smaller, much thicker and heavier and almost universally of the so-called 'Ceylon-man' type. The *setu* coins of the later Ārya Cakravartis belong to this class. The thin broad and light fabric of the present coin and the reverse design of two lines of bold Nāgarī letters occupying the whole field surrounded by a circle of dots clearly suggest that the prototype is the series of very similar coins of Central and Eastern India, issued by the Western and Eastern Cedi Kings as well as the Candellas of Mahoba from the beginning of the 11th to the end of the 14th centuries A.D.[11] Their large, thin gold coins measuring about 0.8" in diameter and weighing about 60 grains were called *drammas* and were struck to the Greek drachma standard.

The obverse of these coins shows the various royal insignia, while on the reverse is invariably written the name of the king in bold Nāgarī letters running to two or three lines. Their copper coins were also of the same type. It is but natural that the Kaliṅga princes of Jaffna borrowed the coin-type from nearer homeland for their earlier coinage, and that, when they lost touch with Kaliṅga and assimilated the local culture and traditions, their coinage also followed suit.

4·4. The various symbols on the obverse of the present coin can be traced to the Eastern Gaṅgas of Kaliṅga.[12] The 'seated bull' was their royal emblem and is found on the seals attached to their copper-plate grants. Some of these grants actually enumerate the royal insignia of the family and mention *'varavṛshabha lāñchana'*.[13] We have direct evidence of the fact that the Ārya Cakravartis adopted the 'seated bull' only from the Eastern Gaṅgas. *Irakuvamicam*, (*Raghuvaṁśa*), a Tamil Kāvya composed by Arakēcari, a poet in the court of the Ārya Cakravartis describes the bull Flag as that of the 'Gaṅga-Āryas'. The crescent above the bull is rather indistinct. The two vertical objects on either side of the bull are perhaps a sword and an elephant-goad representing royal valour and power respectively. The three parallel lines below the bull, of which the middle line is shorter than the other two, may represent a drum, an Eastern Gaṅga symbol.

5. Legend on the reverse :

5.1. The legend on the reverse, consisting of two lines of bold Nāgarī letters occupying the whole field, appears to be in the Eastern or Kaliṅga script of about the end of 12th century A.D; (but see para 7 *infra*). Fig. 4 gives the complete legend (with the conjectural restoration of a portion of the letter *ja* shown in dotted lines), which reads *Śri Rājaśekarā*.

5.2. The orthography is rather corrupt as can be seen from the use of *śri* for *śrī*, *ka* instead of *kha* and *rā* instead of *ra*. As regards the last, the vertical at the end of the legend can also be considered as a punctuation mark, rather than the medial *ā* sign.

5.3. We may notice here a few interesting points on the palaeography of the coin-legend. Two forms of the letter *śa* are used, one as in *śri* and the other as in *śe*. Both are corrupt and rather peculiar, though their ultimate origin can be traced easily enough to the

medieval eastern Nāgarī script of 12–13 centuries A.D.[14] The *e* medial sign in *śe*, a horizontal straight line placed above the letter, is derived from the long, graceful and almost horizontally slanting curve used as *e* medial sign in several Eastern Nāgarī inscriptions of the period[15].

5.4. In the Kalinga script of this period, the letter *ra* is very similar to the letters *ca* and *va* (*ba*). It is this peculiarity of the script, as well as the unsatisfactory nature of their specimens that misled both Prinsep and Codrington in their attempts at deciphering the legend on this coin.

5.5. In a passing reference to this coin, Prinsep wrote:[16] 'One fragment .... of the sitting bull [type] from Montollee has the letters *śrī vī* ... *ka ca* in the Nāgarī characters on the reverse'. A reference to Fig. 4. will show that Prinsep's specimen contained the first two and the last two letters of the legend and that he misread all of them except *ka*. His reading *vī* for *rā* is not surprising if it is remembered that *ra* and *va* looked rather alike and the medial *ā* and *ī* signs were also almost identical in the script. The last letter *ra* was taken to be *ca* by Prinsep, again because of the confusing similarity between the two letters[17].

5.6. Codrington's reading and the correct values of the letters of the coin-legend are shown side by side below:

Correct Reading:	*Śri rā ja śe ka rā*
Codrington's Reading:	*Śrī bā* (*vā*) *la* ... *ka*[*m*] *va*(*ca*)

Here again the similarity between *ra* on the one hand and *va* (*ba*) and *ca* on the other, led Codrington astray. His specimens, like the present one, perhaps contained only the left portion of *ja*, which explains his mistaking it for *la*. Codrington's reading '*Srī Bāla Kaṇva*' and consequent assignment of the coin 'to the Gaṅga Bāṇas... who claimed descent from the Sage Kaṇva' have to be abandoned in the light of the evidence furnished by the present specimen.

6. Coin in Fig. 2 ('*Seated Bull and Double Fish*' - type):

6·1. We may now consider the problem of the attribution of the 'seated bull and double fish' type (Fig. 2) found in Jaffna. To describe the coin, it is enough to state that it is in all respects identical with the *Rājaśekhara*-tpye coin, except that, on the reverse, the



Fig. 1.

Fig. 2.

Fig. 3.



Fig. 4.

legend is replaced by the emblem of the double-fish which is surrounded by the same symbols as those around the seated bull on both the coins. Prinsep, Tracy, Codrington and Desikachari have all assigned this coin to the Pāṇḍyas, solely on the basis of the Pāṇḍya emblem of the double fish found on the reverse of this coin. [18] Since, however, it was obvious that this coin-type differed considerably from the issues of the second pāṇḍya empire, it was supposed that this type was issued by the early medieval Pāṇḍyas. If this were so, the very close similarity in fabric and design between this and the *Rājaśekhara*-type would force us to assume that the Ārya Cakravartis copied this issue for their coinage. But the Ārya Cakravartis flourished during and after the second Pāṇḍya empire and it is very unlikely that they chose to copy a coin-type that was issued several centuries before their time.

6.2. On the other hand, a consideration of the following facts leads us to the irresistible conclusion that both the coins were issued at one and the same time and by the same authority who could be none other than the Ārya Cakravartis of Jaffna:

(i) The provenance of both the coins is Jaffna and they occur together, as noticed by Prinsep and Codrington.

(ii) The fabric and design of both the coins are very similar.

(iii) The obverses are identical.

(iv) The symbols surrounding the double-fish emblem are exactly the same as those surrounding the seated bull on both the coins; these are all Eastern Gaṅga insignia and could have been used only by the Ārya Cakravartis and not by the Pāṇḍyas.

We can, therefore, conclude that the Ārya Cakravartis, in addition to having their own emblem of the seated bull on the obverse, adopted the double fish emblem of the Pāṇḍyas on the reverse to acknowledge the paramountcy of the latter.

7. Date of the coins (figs. 1 & 2):

It is fortunately possible to fix the date of both these types of coins within fairly narrow limits. The Ārya Cakravartis commenced their rule over Jaffna at the beginning of the 13th century. We have seen that the coin-type points broadly to the same period. However, the corruptness

of the orthography and of the forms of certain letters in the coin-legend would indicate that an appreciable period of time, at least a century, must have elapsed between arrival of the Kaliṅga princes in Jaffna and the issue of the *Rājaśekhara*-type. This brings us to about the end of the 13th century when the Ārya Cakravartis were at the height of their power and were closely allied to the Pāṇḍya kings. It was in this period that the Ārya Cakravartis must have issued the very similar 'seated bull and Double Fish' type. It is improbable that the kings of Jaffna issued the double-fish type of coins either before the Pāṇḍya invasion of Ceylon in 1254 A.D. or after the Muslim invasion of Madurai in 1323 A.D. In all probability, these are also the limits for the date of the *Rājaśekhara*-type coin.

8. Coin in fig. 3 (*Cekarācacēkara*-type):

8.2. The third coin appears to be quite rare, if not unique, as it has been noticed only once before. The accompanying illustration (fig. 3) aud description are based on the photographic reproduction in Desikachari's *Dravidian coins* (Pl. No. VI, No. 123). This is a small copper coin, measuring 0·4" in diameter. The weight is not mentioned. It is stated that on the obverse (which is not illustrated in the book) there appears the usual 'Ceylon-man', seated, and the Nāgarī legend '*Rājarāja*'. On the reverse, there is an incomplete Tamil legend in two lines which reads:

Cekara ...

Cekara ...

Desikachari assigns the coin to the Cōḷas apparently on the basis of the design on the obverse. He reconstructs the legend on the reverse as *Cēkara*(*ṉ*) / *Cēkara*(*ṉ*).

8.2. The characters of the legend, *ca*, *ka* and *ra* are quite modern-looking and cannot be assigned to a period earlier than the fourteenth century. This alone would rule out the possibility that this is a Cōḷa coin. The design on the obverse must have been merely imitated from the Cōḷa *kācu*, a practice by no means uncommon. The occurrence of the title *Cēkara* and the period of the script point out to the Ārya Cakravartis who were known as the 'Śekharas'.

8.3. The reading of the legend given by Desikachari is not convincing. It is improbable that the same word should be repeated twice on

the same side. It is suggested that the legend becomes meaningful, if it is completed and read as follows:

Line 1: *Cekarā[ca]* செகர[ாச]

Line 2: *Cēkara[ṉ]* செகர[ன்]

i.e. *Ceka-rāca-Cēkaraṉ*, which was the Tamil form of the title of every alternate Ārya Cakravarti. It will be noticed immediately that the legend as well as its arrangement in two lines are essentially the same as in the *Rājaśekhara*-type (Fig. 1). Thus this coin can be considered as the direct successor to, and the Tamil version of, the earlier type with the Nāgarī legend. It appears to be slightly earlier in date than the *Setu*-type coins, and may be dated between c. 1350 and 1450 A.D.

Notes and References

1. A 'fragment' of this coin was illustrated and described by Prinsep. See *Essays*, Ed. by Thomas, Vol. I, Pl. xxxv, No. 18; pp. 421–24. Codrington described 'very worn' specimens of this coin in his *Ceylon coins & Currency*, p. 90 para. 13 (2 & 3).
2. Prinsep, *Op. cit.*, Volume I, Pl. xxxv, No. 16; Tracy, *Madras Journal of Lit. & Sc.*, 1887–88, p. 144; Codrington, *Ceylon Coins & Currency*, p. 87, para 9(1); Desikachari, *Dravidian Coins*, Pl. I, No. 15.
3. Desikachari, *Op. cit*, Pl. VI, No. 123.
4. The history of the Ārya Cakravartis is dealt with in detail in *Tamils & Ceylon*, C. S. Navaratnam, Saiva Prakasa Press, Jaffna, 1958.
5. This is a collection of quasi-historical legends of Jaffna compiled by Mayilvāhana Pulavar in 1736.
6. The Tamil forms are Ceka-rāca-cēkaraṉ *(செகராசசேகரன்)* and Para-rāca-cēkaraṉ *(பரராசசேகரன்)* respectively.
7. Codrington, *Ceylon Coins & Currency*, Ch. VI, Pl. IV, pp. 88–96.
8. Prinsep, *Essays*, Vol. I, pp. 421.
9. Codrington, *Ceylon Coins & Currency*, p. 86.

10. நன்னகர் மாந்தை முற்றத்து ஒன்னார்
பணி திறை தந்த பாடுசால் நன்கலம்
பொன் செய் பாவை வயிரமொடு ஆம்பல்
ஒன்று வாய் நிறையக் குவைஇ அன்றவண்
நிலந் தினத் துறந்த நிதியத்து அன்ன;

Māmūlanār, *Akam*, ll. 6–10.

11. Vincent Smith, *Indian Museum Catalogue*, Vol. I, Sec. XV, Pl. XXVI, Nos. 7–13.

12. Compare the symbols on the coin with those appearing on the seal of the Nadagam Plates of the Eastern Gangas : 'thick circular seal on which is fixed an image of the bull couchant . . . with the figures of a conch-shell and chauri to the proper right, the figures of a sword and an elephant-goad to the left and what looks like a drum at the back', *Epigr. Indica*, IV, p. 183.

13. Ibid.

14. See, for example, the Bhuvaneśvara inscriptions of Svapneśvara assigned to the end of 12th century A.D. (*Epigr. Indica*, VI, P. 198).

15. C. Sivaramamurti, *Indian Epigraphy and South Indian Scripts*, Table at p. 142.

16. Prinsep, *Essays*, Vol. I, p. 424.

17. Codrington, *Ceylon Coins & Currency*, p. 90.

18. See note No. 2 above.

சாத்தமங்கலம் கல்வெட்டுகள்

இரா. நாகசாமி,
இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை

1. முன்னுரை

வடஆற்காடு மாவட்டம் வந்தவாசிக்குத் தென்மேற்கே 3 கல் தூரத்தில், சாத்தமங்கலம் என்னும் ஒரு சிற்றூர் உள்ளது. கி.பி. 8-ஆம் நூற்றாண்டிலிருந்து இவ்வூர் சமணர்களின் சிறந்த இடமாகத் திகழ்ந்திருக்கிறது என்பதை இவ்வூரில் காணப்படும் கல்வெட்டுகளாலும், சிற்பச் சிறப்புகளாலும் அறிய முடிகிறது. இன்றும் இவ்வூரில் உள்ள மக்களில் எழுபத்தைந்து சதவிகிதத்தினர் வேளாண்மையை முக்கியத் தொழிலாகக் கொண்ட சமணர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. கி. பி. 8-ஆம் நூற்றாண்டிலிருந்து 11-ஆம் நூற்றாண்டு வரை சார்ந்த கல்வெட்டுகள் இவ்வூரில் பெரும் அளவில் காணப்படுகின்றன.[1] இப்பகுதி மக்களின் சமய வரலாற்றையும், சமூக வரலாற்றையும் இக்கல்வெட்டுகள் விளக்குகின்றன. இவ்வூரில் இது வரை படியெடுக்கப்பெற்ற ஒன்பது கல்வெட்டுகளில், ஏழு கல்வெட்டுகள் ஒரு பாறையின் மீது பொறிக்கப் பெற்றுள்ளன. மற்ற இருகல்வெட்டுகளில் ஒன்று சந்திரநாத சுவாமி கோயிலிலும், மற்றொன்று வீதியின் நடுவிலுள்ள பாறையின் மீதும் காணப்படுகின்றன.

அவைகளில் மூன்று நந்திவர்ம பல்லவன் காலத்தைச் சார்ந்தவை. மூன்று, கம்பவர்மன், பார்த்திவேந்திரவர்மன், இராஜராஜகேசரிவர்மன் ஆகியோர் காலத்து கல்வெட்டுகளாகும். ஒரு கல்வெட்டு கி. பி. 11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. சந்திரநாத சுவாமி கோயிற் கல்வெட்டு பார்த்திவேந்திரவர்மன் ஆட்சிக் காலத்தைச் சார்ந்தது. ஆனால் வீதியின் நடுவில் காணப்படும் பாறைக் கல்வெட்டு யாருடையது என்று அறிய இயலவில்லை.

2. பல்லவர் காலக் கல்வெட்டுகள்

(i) நந்திவர்மன் காலத்தைச் சார்ந்தவை.

(அ) இங்கு கிடைத்தவற்றில் நந்திபோத்தரசனின் 14-ம் ஆண்டுக் கல்வெட்டே மிகவும் தொன்மையானதாகும். இம்மன்னனின் மற்ற இரு கல்வெட்டுகளும் முறையே 33-ஆவது, 56-ஆவது ஆட்சி ஆண்டைச் சார்ந்தவை ஆதலின் இவ்வரசன் இரண்

1. வந்தவாசியிலும் அதைச்சுற்றியுள்ள பகுதிகளிலும் சமணர்கள் கல்வெட்டுகள் உள்ளனவா என்று திரு. சா. கணேசன் அவர்களுடன், சென்று ஆராய்ந்து பார்த்தபொழுது தொல்பொருள் ஆய்வுத் துறையினால் இவை படி எடுக்கப்பட்டன. இத்துறையின் கல்வெட்டாய்வாளராக பணிபுரிந்த திரு. எம். டி. சம்பத், சென்னையில் 1966-ம் ஆண்டு நடைபெற்ற கல்வெட்டுக் கருத்தரங்கில் கலந்துகொண்டு சாத்தமங்கலத்துக் கல்வெட்டுகளில் நான்கினைப் பற்றிய கட்டுரை ஒன்றைப் படித்தளித்தார். (கல்வெட்டுக் கருத்தரங்கு, நூலைக் காணவும். தொகுத்தவர்: இரா. நாகசாமி, சென்னை 1968.)

டாம் நந்திவர்மன் பல்லவ மல்லனாக இருத்தல் வேண்டும். இக்கல்வெட்டு பதின் மூன்று வரிகள் கொண்டது. இறுதி வரி, பக்கத்தில், மேல் கீழாகப் பொறிக்கப்பட்டுள்ளது. இவ்வூர் அந்தை இளையாரப்பணந்தி [1] என்பவர், அமணப்பள்ளியைச் சேராத துறவிகளுக்கு உணவு அளிப்பதற்காக ஏழு கழஞ்சு பொன் கொடை அளித்ததைக் குறிக்கிறது. அமணப்பள்ளி முற்றத்தில் நாளொன்றுக்கு ஒரு கழஞ்சு பொன்னுக்கு, ஒரு உழக்கு அரிசி என்னும் விகிதத்தில், ஏழு கழஞ்சு பொன்னுக்கும் அரிசி அளக்க ஏற்பாடு செய்யப்பெற்றது. இவ்வறத்தைக் குறைவற நடத்தி வருவதாக ஊர்ச்சபையும் இசைந்தது. இவ்வறத்துக்கு யாரேனும் ஒருவர் கேடிழைத்தால் அவர் காமக்கோட்டத்தை அழித்த ஊழ்வினையைப் பெறுவர் என்றும், இதற்கு தீங்கு சொன்னவர்கள் நாளொன்றுக்கு ஒரு உழக்கு அரிசி வீதம் தண்டனை செலுத்த வேண்டும் என்றும், இக்கொடையை நிறைவேற்றுவதில் தடங்கல் ஏற்படின், அரசனுக்கு ஒரு காடி நெல் தண்டனை செலுத்தல் வேண்டும் என்றும், இக்கொடையைத் தனதாக்கிக்கொள்ளும் குடும்பத்தினர் அழிவது திண்ணம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

1 ஸ்ரீ நந்திப் போத்தரை
2 சர்க்குப் பதினன்காவது இ
3 ப்பள்ளி உடைஆரை நீக்கி இருந்
4 த தவசிகளுக்குப் பிச்சை எழு
5 கழஞ்சு பொன் இவ்வூரந்தை இ
6 ளையாரப்பணந்தி வைத்த அறம்
7 கழஞ்சின உழக்கரிசி முன் குறட்டி
8 வைத்தது இவ்வற மூரோங் காப்
9 போமாக ஒட்டினோங் காமக்கோ
10 ட்டமழித்த பாவமாக ஒட்டிற் உ நா
11 ள் வாயுழக்கரிசிஉம் முட்டிற் கோஇற்கு
12 நாள் வாயொரு காடி நெற்றண்டம்
13 இப் பொன் றட்டார்க் குலம் படாது

இக்கல்வெட்டில் காமக்கோட்டம் குறிக்கப்பட்டுள்ளது சிறப்பு வாய்ந்ததாகும். பிற்காலத்தில் சிவாலயங்களில் தேவியின் கோயில்கள் "காமக்கோட்டம் உடைய நாச்சியார் கோயில்கள்" என்றே அழைக்கப்படுகின்றன. இதுவரை கி. பி. பதினோராம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காமக்கோட்டத்தைப் பற்றிய கல்வெட்டுக் குறிப்பு ஏதும் காணக் கிடைக்கவில்லை. ஆதலின் சிவாலயங்களில் உமையம்மைக்கு தனியாகக் கோயில்கள் எப்போது எடுக்கப்பட்டன என்பது குறித்து அறிஞர்கள் இடையே கருத்து வேறுபாடு உண்டு. மேலும் கி.பி. 11-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்தைச் சார்ந்தது என்று குறிப்பிடும்படி அம்மன் கோயில்கள் எதுவும்

1. இதை இளையார் பவணந்தி என்றும் படிக்கலாம்.

காணப்படவில்லை. கி. பி. 8-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்ததாகக் கருதப்படும் சுந்தர மூர்த்தி சுவாமிகள், காமக்கோட்டம் என்னும் பெயருடைய உமையம்மையின் கோயிலைப் பற்றிக் கூறியுள்ளார்.[1] இங்குள்ள நந்திவர்மனின் 14-வது ஆட்சி ஆண்டைச் சார்ந்த இக்கல்வெட்டு (கி. பி. 746), காமக்கோட்டத்தைக் கூறுவதால், இது மிகவும் வரலாற்றுச் சிறப்புள்ளதாகும். காமக்கோட்டத்தைக் குறிக்கும் மிகவும் தொன்மையான கல்வெட்டு இதுவே. காமக்கோட்டத்தைப் பற்றிய குறிப்பு சமணர் கல்வெட்டில் காணப்படுவதால், இக்கல்வெட்டில் குறிக்கப்பெறும் காமக்கோட்டம் சமணர்கள் வழிபடும் யக்ஷி கோயிலைக் குறிக்கலாம் என்று திரு. கே. ஆர். வெங்கடராமன் அவர்கள் கருதுகிறுர்.

ஊர் அந்தை என்றழைக்கப்படும் பெயர் நம் கருத்தைக் கவரக்கூடிய மற்ருெரு செய்தியாகும். சமணத் தலைவரை அவ்வாறு அழைப்பது ஒரு வழக்கம் போலும்! தமிழ் நாட்டிலுள்ள குகைகளில் காணப்படும் தமிளிக் கல்வெட்டுகளிலும் 'அந்தை' என்னும் சொல் குறிக்கப்பெற்றுள்ளது. எனவே சமணர்களில் சிலர் இவ்வாறு அழைக்கப்படுவர் என்று உணர முடிகிறது.

கல்வெட்டில் குறிக்கப்படும் அமண்பள்ளி, நந்திவர்மனின் பதினுன்காம் ஆட்சி ஆண்டுக்கு முன்னரே இருந்திருத்தல் வேண்டும் என்பது தெரியவருகிறது. இப் பள்ளி "விமல ஸ்ரீ பள்ளி" என்றும் "தீர்த்த பள்ளி" என்றும் அழைக்கப்பட்டதாக அதே பாறையில் பொறிக்கப்பட்டுள்ள முதலாம் இராஜராஜனின் கல்வெட்டினுல் அறிய முடிகிறது.

(ஆ) 33-ஆம் ஆட்சி ஆண்டைச் சார்ந்த கல்வெட்டு.

இப்பாறையின் சரிவில் காணப்படும் நந்திப்போத்தரசரின் 33-ஆம் ஆண்டுக் கல்வெட்டு இவ்வூர் ஏரி ஒன்றைப் பராமரிப்பதற்காக ஊர்ச் சபையால் அளிக்கப்பட்ட கொடைகளைக் குறிக்கிறது. அறப்புறம் இரண்டு பட்டியும், இள மக்களின் கூட்டு, இறப்பு, காணி எனப்படும் நிலங்களிலிருந்து இரண்டு பட்டியும், சில காணம் நெல்லும், பனிலை அல்லது தரிசு நிலத்திலிருந்து மூன்று மனையும், கீழைச் செறுவு இடுகாட்டைச் சார்ந்த பனை நிலம் முதலியனவும் கொடையாக அளிக்கப்பெற்றன. இக்கொடைகளைப் பராமரிக்கும் பொறுப்பு ஊர்ச்சபையின் நடவடிக்கைகளில் வாக்குரிமைப் பெருத இளமக்களைச் சேர்ந்ததாகும். இக்கொடையை விற்கவோ அல்லது தனதாக்கிக் கொள்ளவோ முயற்சிப்பவர்கள், அரசருக்கு 100 கழஞ்சு பொன் தண்டனை செலுத்தல் வேண்டுமென்று ஊர்ச்சபையாரும், இளமக்களும் தீர்மானித்தனர். இக்கொடையைப் பற்றி பொல்லாங்கு பேசுபவர்கள், கங்கை முதல் குமரி வரை செய்த பாவத்தை ஏற்பார்கள் என்றும் குறிக்கப்பட்டுள்ளது. இக் கல்வெட்டின் இறுதி வரி சிறிது பாழ்பட்டுள்ளது.

---

1. காரி ரும்பொழிற் கச்சி மூதூர்க்
   காமக் கோட்டம்உண் டாக நீர்போய்
   ஊரி டும்பிச்சை கொள்வ தென்னே
   ஓண காந்தன் தளியு ளீரே

   தேவாரம், திரு ஓணகாந்தன் தளி, பத்தி 6.

1 ஸ்ரீ நந்தி போத்தரைசர்கு முப்பத்து மூன்றுவது சாத்தமங்கலத்தூ
2 ரோம் ஏரிக்குப் பெய்த அறம் ஈத்தங் காட்டு அறப்புற மிரண்டு பட்டியு
3 மிள மக்கள் பட்டி இரண்டுங் கூட்டும் யிரப்பும் மிளமக்கள் காணமு ம
4 [த்]து நெல்லும் பாநிலே மூன்று மனேயும் கீழெ செறுவு முதுகாட்
5 டகப்பட்ட பனேய் நில மித்தனேயுமேரிக்கும் பெய்த அறமித்த
6 னேயு மன்றாடுவார் நாயகரல்லா இளமக்கள் நாயகரிதன்றலே விற்
7 ப்பானுளனுயிலும் கொள்ளலுறுவா னுளனுயிலும் நூறு கழஞ்சு
8 பொன் கோயிற்க்கு துரெ . கொள்ள ஒட்டினே மூரோமும் இளமக்களும்
9 இவ்வறத்து மேலன்றிப் பேசினுன் கங்கை யிடைக் குமரி அடைச் செய்தா
10 ன் செய்த பாவமாக ஒட்டினேம் [கடவ]..தும் இத்த . . டமை ஆகும்

இக்கல்வெட்டில் காணப்படும் பெய்த, விற்பான் உளனுயிலும், கொள்ள லுறுவான் உளனுயிலும், இளமக்கள், மன்றாடுவார் நாயகர், போன்ற சொற்கள் சிறப்பு வாய்ந்தவை. ஊர்ச்சபையின் நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டு, வாக்களிக்கும் உரிமை பெற்றவர்களைப் பெருமக்கள் என்றும், மேற்படி நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ள மட்டும் உரிமை பெற்றவர்களே இளமக்கள் என்றும் அழைப்பது வழக்கம் போலும்.

இக்கல்வெட்டில் குறிக்கப்பெற்றுள்ள ஏரி, இந்நாளில் 'சாத்தமங்கலம் ஏரி' என்று அழைக்கப்படுகிறது. இம்மன்னனது 56-ஆம் ஆண்டுக் கல்வெட்டைக் கீழே காணலாம்.

1 ஸ்ரீ நந்திப் போத்தரைசர்க்கு
2 யாண்டு ஐம்பத்தாறுவது
3 விழுக்கத்துச் சினறியார் மகளார்
4 பூண்ட மூப்பாவைக் காசு பதின் எ
5 ழு கழஞ்சு பொன் இப்பள்ளிக்கு
6 கழஞ்சினு லுழக்கரிசி வைகல்
7 . . கறாட்டுவா ரிவ்வறம் பவண
8 [ந்தி]யு வைத்த பணம் ஊரோங் கா
9 ப்போமானேம்

ii *கம்பவர்மன் காலத்துக் கல்வெட்டு (கி. பி. 869-901)*

கம்பவர்மன் காலத்திய கல்வெட்டொன்று காடகதியரையர் என்பவரின் மனைவியான மாதவி என்பவள் கோயிலையும், பள்ளியையும் புதுக்கியதையும், முக மண்டபத்தையும், யக்கா படாரி கோயிலையும் எடுப்பித்ததையும், பள்ளிக்குப் பெரிய மணி ஒன்றைக் கொடையாக அளித்ததையும் குறிக்கிறது. கம்பவர்மன் காலத்தில் இப்பள்ளி புதுப்பிக்கப்பெற்றது என்பது இதிலிருந்து தெரிகிறது.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கம்ப பன்மற்கு யாண்
2 டாருவது காடகதியரையர் ம
3 ணவாட்டி மாதவி யித்திருக்கோ
4 யில் புதுக்கி முகமண்டக மெ
5 டுப்பித்து பாழி புதுக்கி யக்
6 கா படாரி திருக்கோயில் லெடு
7 ப்பித்து இப்பள்ளிக் கிட்ட
8 பெரு மணி ஒன்று ஊட்டு(வி)த்தாள்

3. சோழர் காலக் கல்வெட்டுகள்.

i. *பார்த்திவேந்திரவர்மன் காலத்தவை. (சுமார் கி. பி. 960-70)*

இப்பள்ளி சோழர் காலத்திலும் மிக உன்னத நிலையில் விளங்கியுள்ளது. பெரிய எழுத்துக்களிலே எழுதப்பெற்று நடுப்பகுதியில் சிதைந்து, பாறையின்மீது காணப்படும் இக்கல்வெட்டு பார்த்திவேந்திரவர்மனின் பதினோராம் ஆண்டைச் சார்ந்தது. வெண்குன்றக் கோட்டத்திலுள்ள வெண்குன்ற நாட்டைச் சேர்ந்த ஒரு ஊரார் சில நிலங்களை அளித்து, அதை, அதே கோட்டம், அதே நாட்டிலுள்ள சாத்தமங்கலத்து ஊர்ச்சபையாரிடம் ஒப்படைத்ததைக் குறிக்கிறது.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ கோப்பார்த்திவேந்த்ர
2 பந்மற்க்கு யாண்டு யக-ஆவது வெண்குன்ற கோட்டத்து வெ
3 ண்குந்ற நாட்டு வந்துறை . . . . . இன் நாட்டு சாத்தமங்க
4 லத்து ஊரார்க்கு சிலாலேக செது கு . . . சையகோந்ஞை இரு
5 முடி சோழ முகவன் ஸ்ரீ உடையார் . .
6 ல் எங்கள்ளு ரேரி(யி)ல் கண் . .
7 ரேரியில் மேக்கு ஞேக்கி திரி . ,

ii. முதலாம் இராஜராஜனின் கல்வெட்டு, பன்னிரண்டாம் ஆட்சி ஆண்டைச் சார்ந்தது.

மிகவும் நீண்டதாக உள்ள இக்கல்வெட்டு கோ இராஜராஜகேசரி என்று அழைக்கப்படும் முதலாம் இராஜராஜனின் பன்னிரண்டாம் ஆண்டைச் சார்ந்தது. நந்திதேவரின் மாணுக்கரும், பள்ளி உரிமை உடையவருமான பலதேவப் படாரன் என்பவர், சாத்தமங்கலத்திலுள்ள விமல ஸ்ரீ என்றழைக்கப்படும் தீர்த்தப் பள்ளி ஆழ்வார் கோயிலுக்கு, நந்தா விளக்கொன்று எரிப்பதற்காக, இறையிலியாக நிலம் அளித்ததை இக்கல்வெட்டு குறிக்கிறது. சாத்தமங்கலம், வெண்குன்றக் கோட்டத்து, வெண்குன்ற நாட்டில் அமைந்திருந்தது என்பதும் தெரியவருகிறது. கொடையாக அளிக்கப்பட்ட நிலம் இலாடையார் செறு இரண்டும் பெருந்தூம்பினல் நீர்ப் பாசனம் செய்யப்பெற்றது. அந்நிலத்தின் எல்லேகளும் குறிக்கப்பெற்றுள்ளன. தெற்குப் பக்கத்தில் கணிக்குண்டிலும், கிடங்கல் செறுவின் பகுதியான கொழுக்குத்தியும்; மேற்கு பக்கத்தில் திருவடிகள் போகமும்; வடக்குப் பக்கத்தில் கரம்பையும், மயிலாடும் பாறையும்; கிழக்குப் பக்கத்தில் கரம்பையும், பலிப்பட்டியின் கொழுக்குத்தியும் ஆக அமைந்திருந்தன. வரிவிலக்கு அளிக்கப்பட்ட இந்நிலத்தில் பயிர் செய்யும் குடிகளிடத்தும், பள்ளியிடத்தும் கோயில் வாயில் வழிப் போந்த குடிமையும், நீர்விலேயும் பெறக்கூடாது என விலக்கு அளிக்கப்பெற்றது.

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கோவிராஜராஜகேஸரிவந்மற்கு யாண்டு ௰௨ ஆவது வெண்குன்றக் கோட்டத்து வெண்குன்ற நாட்டுச் சாத்தமங்கலத்தூரோம் எங்களூர்ப் பள்ளி விமல ஸ்ரீ
2. யாகிய தீர்த்தபள்ளி ஆழ்வார்க்கு, ஸ்ரீ நந்தி தேவர் மாணுக்கர் இப்பள்ளியுடைய பலதேவ படாரன் வைத்த திருநந்தா விளக்குக்கு எங்களூர்ப் பூமி பெருந்தூம்பு பாயும் நிலம் இலாடையார் செறுவிரண்
3. டிற்கும் தெந்பபாற் கெல்லே கணிக்குண்டிலுக்கும் கிடங்ககள் செறுவிற் கொழுக்குத்திக்கு வடக்கும் மேல் பாற் கெல்லே திருவடிகள் ஹோகத்திற்குக் கிழக்கும் வடபாற்கெல்
4. லே கரம்பைக்கு மயிலாடு பாறைக்குத் தெற்குங் கீழ்பாற் கெல்லே கரம்பைக்கும் பலிப்பட்டியின் கொழுக்குத்திக்கு மேற்கு மிந்நாற் பேரெல்லேயுள்ளகப்பட் டுண்ணில மொழிவின்றி விலேயறக்கு[1]சத் திறை
5. யிழிச்சிக் கோயில் வாயிலாறு போந்த குடிமையும், நீர் விலேயும் இன்னில முழுதகுடியையும் பள்ளியையும் காட்டப் பெறுதிமாக வும் இன்னிலத்துக்கு தலேநீர், கடைநீர் பாயப் பெறுவதாகவும் இதற்க்கு அஹிதம் நினே
6. ப்பார் பஞ்சமஹா பாதகஞ் செய்தாராவார்.

1. குடுத்திறை எனப் படிக்கவும்.

கோயிற் கல்வெட்டு :

சந்திரநாதசுவாமி கோயில் உண்ணுழியின் அருகே உள்ள பாறையில், கோ பார்த்திவேந்திரவர்மனின் ஐந்தாவது ஆட்சி ஆண்டைச் சார்ந்த கல்வெட்டு காணப் படுகிறது. இக்கல்வெட்டு "எங்களூர் விஷ்ணு கிருஹத்து" என்றழைக்கப்படும் விஷ்ணு கோயிலுக்கு, திருவமுது படைப்பதற்காக நிலம் கொடுக்கப்பட்டதைக் குறிக்கிறது. நிலத்தின் எல்லைகளைக் குறிக்கும் பகுதியின் மேல் கட்டடம் எழுப்பப் பட்டுள்ளது.

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கோப்பார்
2. த்திவேன்திரபன்மற்கு
3. யாண்டு ரு ஆவது வெண்குன்ற . . . . .
4. . ன்றநாட்டு சாத்தமங்கலத்தூரோம் எங்களூர் விஷ்ணுக்ருஹ .
5. . . . . றையும் பனங்காட்டுக் குண்டிலும் இவ்விரண்டும்
6. . . . . மொரு திருவமிர்து காட்ட வைத்தோம் ஊரோம்
7. . . . . காவ . . தகவும் இதனுக்கு அஹி
8. . . . . ய்த பாவ . . . .

பாழடைந்த கல்வெட்டுகள் :

பெரிய பாறையில் காணப்படும், கி.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த, ஐந்து வரிகள் கொண்ட கல்வெட்டு, கோயிற் செலவுக்கு நிலம் கொடையாக அளிக்கப் பட்டதைக் குறிக்கிறது.

வீதியின் நடுவில் காணப்படும் சிறு பாறை மீதான ஒரு கல்வெட்டின் எழுத்துக்கள் ஒன்றும் விளங்காதபடி பாழடைந்துள்ளன.

BOOK REVIEWS

UTTARAMĒRŪR: Legendes, Histoire, Monuments - par Francois Gros et R. Nagaswamy, avec *Le Pancavaradakshetra māhātmya* - edite by K. Srinivasacharya, Publications De L' Institut Francais D' Indologie, No. 39, Pondichery 1970.

The present reviewer is not qualified to review in its entirety this interesting work. Indeed it is doubtful whether many reviewers can be found not subject to such limitation, since the work consists of a very fruitful co-ordination of archæology, epigraphy and philology, not to mention the *mise.en-point* of other studies such as sociology. These enquiries are directed to what may be termed "local history" or perhaps here, better "local Indology". The focus is provided by the notable architectural and epigraphical remains (mainly from Pallava and Chola times) found in and about the village of Uttaramerur situated some 50 miles South West of Madras between Chingleput and Wandewash. Attention to these remains was attracted in this instance by the submission for publication of a manuscript of the local legend (*sthalapurana*) of Uttaramerur.

The work as it has taken final shape is undoubtedly important. Not so much, perhaps, on account of its intrinsic scholarship (which, so far as the reviewer is able to assess is excellent) but on account of its scope and intention. This consists in the marshalling of the most rigorous and diverse enquiry on to a 'local' subject (i.e. one which, in a sense, is still 'living') and the method pursued of setting the physical remains against the extensive 'sources'.

In the first instance the interest at issue is the history of architecture, since a Sanskrit inscription (v. pp. 80–81) on the Sundaravaradaperumal Temple (v. pp. 70 ff) states that this temple was constructed in accordance with relevent sacred theory–both Vastusastra and Agamasastra. This matter had already been discussed by V. Ganapathy 'An Interesting Inscription from Uttiramerur' in Seminar on Inscriptions,

Madras 1966, pp. 178–188. The work under review extends the question of correspondence from the Temple itself to the religious aspects of town planning–i.e. the disposition of the various temples within the village. Further, the work goes on to consider social matters in this connection, and the communal life as constituted in the village is seen to be in accordance with the Dharmasastras.

A brief outline of the book's contents is well warranted and may be set against an historical sketch (V. pp. 21 ff).

Uttaramerur was a foundation of the second Pallava dynasty and the first date attested epigraphically is c.750 A.D. The village was a royal foundation–indeed an example of dynastic propaganda in the form of urbanism. The town planning is meticulous and elements are named according to the titles etc. of the ruling house. During the succeeding century the region was central to the Pallava-Chōḷa rivalry, but the village of Uttaramerur weathered these imperial storms. Indeed it came to know its greatest fortune in Chōḷa time, with the days of Rajendra I marking an apogee. The decline in power of the royal house (from 1150 A.D), with a corresponding 'feudal' development had its effect on the history of the village. With the fall of the Chōḷa regime the experience of the village became to some degree associated with that of Kancheepuram. In Vijayanagar days it would seem that the village knew a certain prosperity. Thereafter Uttaramerur is noted only in so far as it is incidental to the military history of Nayak and colonial campaigns. Laterly (during the 19th century) its agricultural concerns were not forgotten by the Central Government, and new (Christian) settlements were arranged, with the result that the present population is very mixed.

Proceeding from this *exposée* Chapter IV gives full and precise archaeological survey of the religious monuments – their architecture, sculpture and epigraphy. Chapter V treats of the topography of the ancient village, explaining the sources and methods here employed. It is important to note that the reconstruction set out very clearly in a folding plan is an 'ideal' one derived in the main from epigraphical sources not from archaeological clearance or excavation (p. 93)

In Chapter VI consideration is given to the interesting matter of the organisation of village life in its social and administrative aspects – in

particular and in detail, the village assembly (the *Sabha*) to which the village owes much of its historical interest.

Chapter VII deals with the 'intellectual and religious life' of Uttaramerur. The latter aspect being the most resilient of all traditions, forms a connection link with the present day. The conclusion to this chapter may be quoted as a fitting expression of the underlying spirit which shaped the whole enquiry. 'It is then desirable that the study be undertaken of Hinduism in its popular aspects before such traditions finally disappear, and while such study may still be carried on by direct comparison with the literary sources which inspire or express these aspects' (p. 122–3)

Appendices provide :

I. A topographical description of the modern village accompanied by a survey plan, which gives evidence of the 'real presence' of the original foundation.

II. A summary list of the unpublished inscriptions.

III. A chronological list of inscriptions.

The *Pancavaradakshetra māhātmya* appears critically edited in Sanskrit and is discussed together with other legendary material in Chapter II.

Special mention must be made of the thorough going and well organised 'aids to study' :– 16 plates and 2 folding plans, a Sanskrit index to the legend and an excellent bibliography.

Whatever may be said about the technical detail of this book, it will undoubtedly provide a model for future studies.

G. R. H. Wright.

Institut Francois d' Archeologie
Beyrouth. Liban.

மயமதம்: முதல் பாகம்; வடமொழி மூலமும் பிரஞ்சு மொழி பெயர்ப்பும்-ஆய்வுப்பதிப்பு-ஆசிரியர், பேராசிரியர் புரூனே தஷன்ஸ் - பதிப்பித்தோர் - பிரஞ்சிந்திய ஆராய்ச்சி நிறுவனம், புதுச்சேரி, 1970. 732 பக்கங்கள் 32 வரைபடங்கள், விலை குறிப்பிடவில்லை.

பேராசிரியர் பிலியோசா அவர்களின் தலைமையில் சிறப்பாகச் செயலாற்றி வரும் பிரஞ்சிந்திய ஆராய்ச்சி நிறுவனம், தமிழ் இலக்கியத்துக்கும், கலைக்கும் அரிய தொண்டாற்றி வருகிறது. தமிழக நூல்கள் பலவற்றை பிரஞ்சு மொழியில் மொழி பெயர்த்தும், கிடைத்தற்கரிய நூல்கள் பலவற்றை ஆராய்ந்தும் அச்சிட்டு வருகிறது. இதுவரை 40 நூல்களை அச்சிட்டுள்ளது. இவ்வரிசையில் 40-வது நூலாகத் தமிழ்க் கட்டட நூலான மயமதம் வெளியிடப்பட்டு உள்ளது. இதை கீழை நாடுகளில் உலகப் புகழ் பெற்ற அங்கோர்வாட், அங்கோர்தோம்,ஆகிய தொன்மையான கட்டடங்களைப் பழுதுபார்த்து பாதுகாத்துவரும் பேராசிரியர் புரூனே தஷனஸ், பிரஞ்சில் மொழிபெயர்த்துள்ளார். மூலம் சமஸ்கிருத மொழியில் உள்ளது. நூலில் ஒரு பக்கம் பெரிய எழுத்துக்களில் சமஸ்கிருத செய்யுட்களும், மறுபக்கம் அதன் பிரஞ்சு மொழிபெயர்ப்பும் அச்சிடப்பட்டுள்ளன. நூலின் சிறப்புப் பற்றியும், அளவைகளைப் பற்றியும், கட்டடப் பொருள்கள் பற்றியும், கட்டடப் பகுதிகள், கட்டட வகைகள், ஊரமைப்பு, ஊர்திகள், உருவ அமைதி, சடங்குகள் ஆகியவை பற்றியும் வரலாற்று அடிப்படையில் ஆராய்ச்சி நிறைந்த ஒரு முன்னுரையை ஆசிரியர் எழுதியுள்ளார். நூலின் முடிவில் மிகவும் விரிவாக அரும்பதவுரை ஒன்றும் இணைக்கப்பட்டு உள்ளது. நூலில் சில சிறந்த அம்சங்களை எடுத்துக் காட்டும் வகையில் 32 வரைபடங்கள் சேர்க்கப்பட்டு உள்ளன.

சங்க காலத்திலேயே தமிழகத்தில் மயன் மரபு கட்டட நூல்களில் தலையாயதாகக் கருதப்பட்டது என்பது ''மயன் விதித்தன்ன மரபின விவைதாம்'' என்ற சங்க அடிகளிலிருந்து அறியலாம். இதுகாறும் இச்சிறப்பு வாய்ந்த நூலுக்குப் பிறமொழிகளில் மொழிபெயர்ப்பு வரவில்லை. மேலைநாட்டு மொழியில் மொழி பெயர்க்கப்படுவது இதுவே முதல்தடவையாகும். ஆசிரியர் போற்றும் வகையில் தன் பணியைச் செய்து முடித்திருக்கிறார். கட்டடக்கலை ஒரு நுட்பக்கலையாதலின், பிரஞ்சுமொழியில் அக்கலைக்கேயுரிய நுட்பச் சொற்களைக் கையாண்டிருப்பது மொழி பெயர்ப்பின் சிறப்பு அம்சமாகும். டாக்டர் தஷன்ஸ் இந்நூலைப் பற்றிக் குறித்துள்ள கருத்துக்களில் சில கீழ்வருமாறு :

''மயமதத்தை ஆக்கிய ஆசிரியர் தமிழ் நாட்டிலோ அல்லது மலையாள நாட்டிலோ வாழ்ந்தவராக இருத்தல் வேண்டும் என்பது இந்நூலில் கையாளப் பட்டுள்ள செய்திகளிலிருந்து தெளிவாகும். தமிழ் நாட்டு ஸ்தபதிகள் இன்றுவரை இந்நூலைச் சிறப்பாக உபயோகித்து வந்துள்ளனர். இதுவரை கிடைத்துள்ள எல்லா ஓலைச்சுவடிகளும் கிரந்த எழுத்துக்களிலோ அல்லது மலையாள எழுத்துக்களிலோ தான் எழுதப்பட்டுள்ளன. பாரிஸ் மாநகரில் தேசிய நூலகத்தில் உள்ள ஒரே ஒரு

பிரதி மட்டும் நாகரி எழுத்தில் உள்ளது. ஆனுல் அது 1910-ஆம் ஆண்டு செய்யப் பட்ட காகிதத்தில் உள்ளது. 1912-க்குள் படி எடுக்கப்பட்டிருக்க வேண்டும் எனத் தெரிகிறது.

மயமதத்தில் உபயோகிக்கப்பட்டுள்ள சில சொற்கள் தமிழ் அல்லது மலேயாள நாட்டில் வழக்கில் உள்ளதாகத் தோன்றுகிறது. ஆலயங்களின் அமைப்பும், சுற்றி லும் அமைக்கப்படும் சிற்ருலயங்களின் நிலேகளேயும் காணும்போது மயமதம் தமிழக நூலாகத்தான் படுகிறது. ஆயினும் 18-ஆம் அத்தியாயத்தில் விவரிக்கப்பட்டுள்ள விமானத்தின் பகுதி தமிழகத்தில் இல்லே. கேரளக் கோயில்களில் காணப்படுகிறது.

மயமதத்தில் உபயோகிக்கப்பட்டுள்ள சில சொற்களின் பொருள் விளங்க வில்லே. இந்நூலில் உள்ள சில பகுதிகள் முழுமையாக காமிகாகமம் (அத். 57), சில்ப ரத்தினம் (அத். 31-32) ஆகிய நூல்களில் எடுத்தாளப்பட்டு உள்ளன.

கடல் கடந்த கீழை நாடுகளிலும், காம்போஜ நாட்டிலும் காணப்படும் கோயில்களுக்கும், மயமதம் நூலுக்கும் உள்ள ஒற்றுமை வியத்தகும் வகையில் உள்ளது. மயமதத்திலுள்ள 23-ஆம் அத்யாயத்துக்கும் காம்போஜ கோயில்களுக் கும் சிறந்த ஒற்றுமைகள் உள்ளன. சம்பா நாட்டுக் கோயில்களின் அடித்தள அமைப்பிற்கும் மயமதம் (அத்யாயம் 12) க்கும் சொல்லுக்குச் சொல் ஒற்றுமை காணப்படுகிறது.

இந்நூல் தமிழகத்து நூலான போதிலும் அனேத்து இந்திய கோயில் வகை களேயும் குறிக்கிறது. திராவிடம், வேசரம், நாகரம் என்று கூறப்படும் விமான வகைகளேக் குறிக்கிறது. அனேத்துலக (சார்வதேசிக) நூலாக விளங்க வேண்டும் என்பது இதன் குறிக்கோள். சைவச் சார்புடையதாக இந்நூல் இருந்தபோதிலும், பௌத்தம், சமணம் முதலிய அனேத்து சமயங்களுக்கும் ஏற்புடையதாக இருக்கிறது.

மயமதம் கோபுர வகைகளில் எழுநிலேக் கோபுரங்களேயே குறிக்கிறது. இதற் கும் மேற்பட்ட நிலேகளேயுடைய கோபுரங்களேக் குறிக்கவில்லே. சோழர் காலத்தே எழுநிலே கோபுரங்களே இருந்தன என்பது நினேவிற்கொள்ளல் தகும். ஒரு இடத் தில் 16 நிலேகளேக் கொண்ட சிவபெருமானின் விமானம் குறிக்கப்படுகிறது. தஞ்சைப் பெருங்கோயில் 16 நிலேகளேக் கொண்ட விமானமாகும். ஆதலின் மயமதம் சோழர் காலத்து நூல் எனக் கூறின் தவறில்லே.'' என்று தஷன்ஸ் குறிக்கிருர்.

முன்னர் கூறியபடி சங்ககாலத்திலேயே இந்நூல் சிறப்புற்றிருந்தது. சோழர் காலத்துக் கோயில்கள் பெரும் பகுதி இந்நூலின் அடிப்படையில் எழுந்தன என்பதும் இதில், இருந்து தெளிவாகும். ஆசிரியர் சிறந்த உழைப்புடனும், ஆராய்ச்சித் திறனுடனும் பிழை ஏதுமின்றி பதிப்பித்து தமிழகத்தின் தலேயாய கட்டட நூலே மேலேநாட்டு மக்கள் நன்கு அறிந்து கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளார். ஆசிரியரின் இச்சீரிய முயற்சியைத் தமிழகம் என்றும் போற்றும்.

இரா. நாகசாமி.